E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஜூலை 2019
விலை ரூ.15

ஓம் சக்தி

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



ஒரிசா அருள்மிகு லிங்கராஜ் கோவில்

குமரகுரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்















குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



சுரங்கம்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு துறையாக வளர்ந்துள்ளது. மொழிபெயர்ப்புப் பற்றி வேடிக்கையாக, மூலத்தில் இருப்பது அல்ல மொழிபெயர்ப்பு. இது இன்னொரு தனிப் புத்தகம் என்று சொல்வார்கள்.

மொழிபெயர்ப்பு என்பதை உணர்ந்து, உள்வாங்கி மறுஉருவாக்கம் செய்வது என்பது அசாத்தியமானது. சிலருக்கே அது வாய்க்கும். இந்தச் சிரமம் மொழிபெயர்ப்பில் தொடர்ந்து இருந்து கொண்டு வருவதால், இதனை உணர்ந்த அருட்செல்வர் மொழிபெயர்ப்புக்குப் (Translation) பதிலாக ஒலிபெயர்ப்பைச் (Transliteration) செய்யலாம் என்று சிந்தித்தார்.

மொழிபெயர்ப்புக்கும் ஒலிபெயர்ப்புக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதை அருட்செல்வர் ஐந்தாண்டுகளுக்கு முன்பு சிந்தித்து எழுதிய கட்டுரையை இந்த மாதம் 'சுரங்கம்' பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ.ஆர்.

மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும்

Translation and Transliteration

யுனெஸ்கோ நிறுவனம் உலகத் தாய்மொழி தினத்தை ஆண்டுதோறும் பிப்ரவரி 21–ஆம் தேதியன்று கொண்டாட வேண்டுமென்று அறிவித்து, கடந்த ஐந்தாண்டுகளாக உலகின் பல நாடுகள் தாய்மொழி தினத்தைக் கொண்டாடி வருகின்றன.

தாய்மொழிதான் கலாச்சார, இன அடையாளம் என்பதை 5 ஆண்டுகளுக்கு முன்பே யுனெஸ்கோ அங்கீகரித்தது நினைவுகூரத் தக்கது.

இன அடிப்படையில் தமிழர்கள் தமிழ்நாட்டின் பூர்வக்குடிகள். இப்போது தமிழர்கள் 43 நாடுகளில் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றில் 39 நாடுகளில் வாழ்கிற தமிழர்களுக்குத் தங்கள் மூதாதையர்கள் பேசிய தாய்மொழியான தமிழ் மொழியைத் தெரியாது.

இந்த 43 நாடுகளில் ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட நான்கு நாடுகளில்தான் தமிழ்மொழியை எழுத – படிக்க – பேசத் தெரிந்தவர்கள் உள்ளனர். மற்ற 39 நாடுகளிலுள்ளவர்கள் தமிழைப் படிக்க வேண்டுமானால், ஆங்கில மொழியில் எழுதித்தான் படிக்க வேண்டும்.

மொரீசியஸிலுள்ள தமிழர்கள் "கிரியோல்" மொழியில் நமது தமிழ்த் தேவாரத்தை எழுதிப் பாடுகிறார்கள்.



தமிழ்நாட்டுக்கு அப்பால் உள்ள தமிழர்களுக்குத் தமிழ் மொழியே தங்களின் கலாச்சார அடையாளம் என்பதை நமது சமயச் சடங்குகளின் மூலம்தான் அவர்கள் நினைவு கூர்கிறார்கள்.

டாக்டர் நா. மகாலிங்கம்



இந்த 39 நாடுகளிலுள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாமல், அமெரிக்காவிலுள்ள குழந்தைகளுக்கும் ஆய்வாளர்களுக்கும் தமிழைக் கற்பிப்பதைப் பற்றி எனக்கு ஏற்பட்ட இரண்டு அனுபவங்கள் என்னைச் சிந்திக்கத் தூண்டின.

உலக சைவ உணவுச் சங்கத்தின் தலைவராக 1975 முதல் அநேகமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்கா போய் வந்துள்ளேன்.

அப்படி அமெரிக்காவிற்கு ஒருமுறை சென்றிருந்த போது, அங்குள்ள தமிழர்களுடைய குழந்தைகளின் கருத்தைக் கேட்டு வியந்து போனேன்.

அச்சிறுவர்களுக்கு ஆங்கிலம் நன்றாகப் பேசவும், எழுதவும் தெரியும். ஆங்கில எழுத்துக்களைக் கொண்டே அவர்கள், ஜப்பான் மொழியையும், இத்தாலி மொழியையும் ஆசிரியர் உதவி இல்லாமல் சுயமாகவே கற்றுக் கொண்டதாகக் கூறினார்கள்.

அதேபோல, தமிழ்மொழியையும் கற்றுக்கொள்ள விரும்புவதாகவும், 247 தமிழ் எழுத்துக்களைப் படிப்பது சிரமம் என்றும் கூறினார்கள்.

ஆங்கில எழுத்தில் தமிழ் இலக்கணத்தையும் தமிழ் – ஆங்கில அகராதி ஒன்றையும் தயார் செய்து தந்து விட்டால், தாங்களே தமிழைப் படித்துக் கொள்ள முடியும் என்றும் கூறினார்கள். அது என்னைச் சிந்திக்கத் தூண்டியது.

இதேபோல அமெரிக்காவிலுள்ள அறிஞர்கள் தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரை உள்ள மூலத் தமிழ் நூல்களை ரோமன் எழுத்துக்களில் அச்சிட்டுத் தந்துவிட்டால் போதும், தாங்களே அவற்றைப் படித்துக் கொள்ளவும் ஆராய்ச்சி செய்யவும் உதவும் என்றனர்.

இந்த இரண்டு அனுபவங்களும் என்னைத் தொடர்ந்து சிந்திக்க வைத்தன.

Translation என்ற மொழிபெயர்ப்பு மூலம் ஒரு மொழியிலிருப்பதை இன்னொரு மொழிக்கு மாற்றிப் படித்து வந்தோம். Transliteration என்ற ஒலி பெயர்ப்பு மூலம் ஒரு மொழியின் எழுத்து வடிவத்தை இன்னொரு மொழிக்கு மாற்றிக் கொண்டால், அதைவிட அதிகம் பலன் கிடைக்கும் எனக் கருதினேன்.

ஒரு மொழியை அந்த மொழி தெரியாத மற்றவர்கள் படிக்கத் தடையாக இருப்பது, அந்த மொழியின் எழுத்துத் தான். அந்த எழுத்துருவை அவர்களுக்குத் தெரிந்த லிபியிலேயே

எழுதிவிட்டால், எளிதாக அதை வாசித்துவிட முடியும்.

அது ஆங்கிலமாக இருந்தால் ரோமன் எழுத்தில் தமிழ் வார்த்தைகளை எழுதி வாசிக்கலாம். இதுதான் ஒலிபெயர்ப்பு என்ற டிரான்ஸ் லிட்டரேசன் (Transliteration).

ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்ட வார்த்தைகளுக்கான அர்த்தத்தை, தனியாக அகராதியில் தந்துவிட்டால், அம்மொழியைப் புரிந்துகொள்வதும் எளிது.

இது, அமெரிக்காவில் வாழும் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு மட்டும் பயனளிக்கக் கூடியதல்ல.

இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலுள்ள ஹிந்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, கன்னடம் பேசுகிறவர்களுக்கும்கூட உபயோகமாக இருக்குமே எனவும் எண்ணினேன்.

ஆங்கில எழுத்தில் நமது தமிழ் நூல்களைப் பதிப்பித்துவிட்டால் அவர்களால் அதை எளிதாக வாசித்துக் கொள்ளவும் முடியும். அதனுடன் சேர்த்து ஓர் அகராதியையும் கொடுத்துவிட்டால் அதனைப் புரிந்துகொள்ளவும் முடியும்.

இந்தியாவுக்குள் இருக்கிற ஒரு மாநில மொழியிலுள்ள படைப்புகள் பிற மாநிலங்களுக்கு மொழிபெயர்ப்பைவிட ஒலிபெயர்ப்பு மூலமாகப் பரப்பினால் வேகமாகப் பரவும்.

இதேபோல, பிற மாநிலப் படைப்புகளை ஆங்கிலத்தில் ஒலிபெயர்த்து அகராதியோடு தமிழர்களுக்குத் தந்துவிட்டால், அவை தமிழ்நாட்டிலும் பரவும்.

இதுவரை Translation எனப்படும் மொழிபெயர்ப்பு மூலமாகத்தான் இதனைச் செய்து வந்தோம். Transliteration எனப்படும் ஒலிபெயர்ப்புப் பற்றி யாரும் அதிகமாக யோசிக்கவில்லை.

இனிமையாகப் பாடுகிற வசதியான வீட்டுத் தமிழ்ப் பெண்கள் தமிழ்ப் பாடல்களை ஆங்கிலத்தில் எழுதி வைத்துக் கொண்டுதான் பாடுகிறார்கள் என்பது பலருக்கும் தெரியாது.


இதேபோல, மலையாளம், ஹிந்தி முதலிய வேற்று மொழிப் பின்னணிப் பாடகர்கள் கூட, தமிழ்ப் பாடல்களை ஆங்கிலத்திலோ, அல்லது தங்கள் தாய் மொழியிலோ எழுதி வைத்துக் கொண்டுதான், தங்களின் இனிய குரலில் தமிழ்ப் பாடல்களைப் பாடுவதை ரசித்துக் கேட்டு வருகிறோம்.

தமிழ்ச் சொற்களை ஆங்கிலமயப் படுத்திக் கொள்கிற ஒலிபெயர்ப்பு முறையைத்தான் அவர்களும் இதில் கையாள்கிறார்கள்.

இந்திய தேசிய ராணுவத்தில் ரோமன் எழுத்தில் ஹிந்தியைப் போதிக்க நேதாஜி உத்தரவிட்டதும் நினைவுகூரத்தக்கது.


இந்த ஒலிபெயர்ப்பு, தமிழுக்கு எவ்வித் தீங்கையும் செய்துவிடாது. மாறாக கூடுதல் சிறப்பைத்தான் சேர்க்கும்.

தமிழ் எழுத்துக்களைப் படித்துத்தான் தமிழ்மொழியைத் தெரிந்து கொள்ள முடியும் என்பது பழைய முறை. அதற்காகவே நாம் காலத்தை அதிகமாகச் செலவழிக்க வேண்டும். ஆங்கில எழுத்துக்கள் மூலமே தமிழ் எழுத்துக்களை வாசிக்கலாம்.



ஒலிபெயர்ப்பு முறையில் (Transliteration) செய்தால், பிற நாடுகளில் வாழ்கிற ஆங்கிலம் பேசுகிற தமிழ்மொழி தெரியாதவர்களும் எளிதாகப் புரிந்து கொள்வார்கள்.

இச்சமயத்தில் நாம் இன்றைய கல்வி முறையைப் பற்றியும் பேசக் கடமைப்பட்டிருக்கிறோம். நர்சரிப் பள்ளியிலேயே நமது



காமராஜர்



அவிநாசிலிங்கம் ஐயா

மாநிலத்தில் ஆங்கில போதனா மொழி இருக்கிறது. 2 வயதுக் குழந்தைகளைக் கூட Pre K.G. எனப்படும் மழலையர் பள்ளிகளில் பெற்றோர்கள் சேர்த்துவிடுகிறார்கள். பின் L.K.G. அதன்பின்னர் U.K.G. என 4 வயது பூர்த்தியாகும் வரை ஆங்கிலத்திலேயே படிக்கச் செய்துவிடுகிறார்கள்.

அக்குழந்தைகளுக்கு மம்மி டாடி என்று அம்மா, அப்பாவை அழைக்குமாறு மூளைச் சலவை செய்துவிடுகிறார்கள். கட்டணம் செலுத்தி இப்பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கிறார்கள். இவ்வாறு செய்வது ஏறக்குறைய குழந்தைகளை வதை செய்கிற குற்றத்திற்குச் சமமானதாகும்.

அக்குழந்தைகளைப் பள்ளிகளுக்குக் கூட்டிக் கொண்டு வர வாகன வசதி உள்ளது. டை, சூ அணிவித்து ஆங்கிலப் பாணியில் பள்ளிக்கு அக்குழந்தைகள் அனுப்பப்படுகிறார்கள்.

இம்மழலைப் பள்ளிகள்தான் தமிழ் மொழியையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் மறக்கச் செய்கிற வேலையைச் செய்து வருகின்றன. ஆங்கிலத்தில் படிக்கும் இம்மழலைக் குழந்தைகள்தான், 5 வயதில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் உயர்நிலை, மேல்நிலைக் கல்வியையும் ஆங்கிலத்திலேயே தொடர்ந்து கற்க வேண்டியதாகிவிடுகிறது.

கல்லூரியில் தமிழைத் தவிர்த்தால் தான் அவர்கள் பட்டதாரிகளாக முடியும்.

இப்போக்கினைத் தடுத்தால்தான் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் இன அடையாளத்தையும் நாம் காப்பாற்ற முடியும்.

அதற்காக, அரசு ஒன்றே ஒன்றைச் செய்தால்போதும், மழலைப் பள்ளிகளை விளையாட்டுப் பள்ளிகளாகத்தான் (Play School) நடத்த வேண்டும் என்றும், இல்லையேல் இலவசமாகத் தான் நடத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டாலே போதும், நர்சரிப் பள்ளிகள் காணாமல் போய்விடும். காரணம் அவர்களுக்குக் கல்வி வியாபாரம்தான். நஷ்டம் என்றால் வியாபாரம் செய்யார்.

1947–இல் காங்கிரஸ் ஆட்சி உத்தமர் ஓ.பி.ஆர். தலைமையில் செயல்பட்ட போது, கல்வியமைச்சராக இருந்த ‘கல்வித்தந்தை’ அவிநாசிலிங்கம் ஐயா அவர்கள் 2 ஆண்டுக் காலத்திற்குள் அன்றைய விசால சென்னை மாகாணத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில போதனையை நீக்கிவிட்டுத் தமிழ் மொழியில் கற்பிக்க ஆணையிட்டார்.

சென்னையை ஒட்டிய ஆந்திர மக்களுக்குத் தெலுங்கிலும், சத்தியமங்கலம் பக்கத்திலுள்ள கர்நாடக மக்களுக்குக் கன்னடத்திலும், பாலக்காட்டுப் பக்கத்திலுள்ள மலையாள மக்களுக்கு மலையாளத்திலும் பாடம் நடத்த உத்தரவிட்டார்.

மத்திய அரசு அலுவலகங்களில் மாறுதலாகி வந்தவர்களின் குழந்தைகளுக்காக 1953–இல் காமராஜர் ஆட்சியில்தான் சுமார் 1000 உயர்நிலைப் பள்ளிகளில் 40 மாணவர்களைக் கொண்ட ஒவ்வொரு வகுப்பிலும் (Class) ஒரு பிரிவை (Section) ஆங்கில வழிக் கல்வி கற்பிக்க முதலமைச்சர் அனுமதித்தார். அதன்பின்னர் ஆங்கில போதனா முறை மேலும் வளர்ந்துவிட்டது.

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தமிழர் அல்லாதவர்களும் தமிழைப் படிக்க இந்த ‘ஒலிபெயர்ப்பு’ முறை மிகவும் பயன்படும்.

தமிழ் மாணவர்களுக்குக்கூட மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் தமிழ்ப் பாடத்தில் ஒரு புத்தகத்தை (Non Detail) ரோமன் லிபியில் **ஒலிபெயர்த்து** வாசித்துக் கொள்ளும் பயிற்சியைத் தரலாம்.

மொழிபெயர்ப்பு முறைக்கு மாற்றாக ஒலிபெயர்ப்பு முறையில் எழுத்துருவை ஏற்படுத்தி, **ஒரு மொழி** மூலமாகப் **பல மொழிகளைப்** படித்துக் கொள்ளும் பயனைப் பெறுவதற்கு இன்றைய கணினி யுகம் நல்ல தருணமாக அமைந்துள்ளது. ●



அன்பும் அறனும் அறிவாய்

கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

விண்ணில் பறந்து மண்ணில் விரிந்து
மேலே மேலே செல்கின்றேன்!
கண்ணில் அழைத்துப் பண்ணில் குழைத்துப்
பாடிப் பாடிச் செல்கின்றேன்!

தென்றல் படிந்து செந்தேன் வடிந்து
சிரித்துச் சிரித்துச் செல்கின்றேன்!
அன்றில் பறவை ஒன்றும் உறவை
அழைத்து அழைத்துச் செல்கின்றேன்!

உண்ணும் உணவும் எண்ணும் உடையும்
ஒடுங்க ஒடுங்கச் செல்கின்றேன்!
நின்றும் நடந்தும் வென்றும் கடந்தும்
நினைத்து நினைத்துச் செல்கின்றேன்!

உள்ளம் நிலைக்க வெள்ளம் மலைக்க
உணர உணரச் செல்கின்றேன்!
பள்ளம் நிரப்பக் கள்ளம் துரத்தப்
பரிந்து பரிந்து செல்கின்றேன்!

எங்கே மகிழ்ச்சி? எங்கே மகிழ்ச்சி?
ஏந்த ஏந்தச் செல்கின்றேன்!
அங்கே அழியா அன்பும் அறனும்
அறிய அறியச் செல்கின்றேன்!



கோவை சிரவை ஆதீனத்தில் முப்பெரும் விழா!



முதல்நாள் விழாவில் மேடையில் பேரா. டாக்டர். ஐ.கே.எஸ்., சின்மயா மிஷன் தவத்திரு அஜீத் சைதன்யா, பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் குமரகுரு அடிகளார், தவத்திரு மயிலம் சிவஞான பாலய சுவாமிகள், திருமதி உமாமகேசுவரி, 'ஓம் சக்தி' இணையாசிரியர் திரு. பெ. சிதம்பரநாதன், திரு. பழ. முத்தப்பன் ஆகியோர்.

தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் கௌமாரம். ஞான குருவாகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் உபதேசம் பெற்று, கோவை சிரவணபுரத்தில் கௌமார மடாலயத்தைத் தோற்றுவித்தவர் குருமகா சந்நிதானம் தவத்திரு. இராமானந்த அடிகளார் அவர்கள்.

அவரையடுத்து தவத்திரு. இராமானந்த சுவாமிகள் இரண்டாம் குருமகா சந்நிதானமாக விளங்கினார். சுவாமிகளின் சீடராக அருள் உபதேசம் பெற்று, மூன்றாம் சந்நிதானமாக அருளாட்சி செய்தவர் தவத்திரு. சுந்தரசுவாமிகள். இவர் திருப்பணிச் சக்கரவர்த்தி, கொங்கு நாட்டுச் சேக்கிழார் எனப் போற்றப்பட்டவர். சுவாமிகள் 14.6.1994 இல் பரம்பொருளோடு இரண்டறக் கலந்தார்.

சுந்தரசுவாமிகளின் வழியில் நான்காம் குருமகா சந்நிதானமாக அருளாட்சி செய்து வருபவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்.

சுவாமிகள் பட்டமேற்று 25 ஆண்டுகள் நிறைவடைந்ததன் வெள்ளிவிழா, தவத்திரு. சுந்தரசுவாமிகளின் 25–ஆவது குருபூசை விழா, நூல்கள் வெளியீட்டு விழா என முப்பெரும் விழா, சென்ற 8.6.2019, 9.6.2019 ஆகிய இரண்டு நாள்கள் சிரவையாதீனம் கௌமார மடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாளாகிய 8–ஆம் தேதி முழுவதும் நூல் வெளியீட்டு விழாவாக அமைந்தது. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பிள்ளைத் தமிழ் முதல் தொகுதி, கலம் பகங்கள் இரண்டாம் தொகுதி, வண்ணச் சரபரின் நெல்லை இலக்கியங்கள், கந்தசாமி சுவாமிகள் பனுவல் திரட்டு



நூல் வெளியீட்டு விழாவில் சந்நிதானங்களுடன் டாக்டர் நீலா, திரு. அரவிந்த் வெங்கடாசலம் உள்ளிட்டோர்.

– தொகுதி 2 பிள்ளைத்தமிழ் நூல்கள், பக்த மான்மியம் உள்படப் பல நூல்கள் அன்று வெளியிடப்பட்டன.

விழாவில் பேரா. கி. சுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிரவை ஆதீனம் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள், பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பழனி சாது சண்முக அடிகளார், பொள்ளாச்சி சின்மயா மிஷன் தவத்திரு அஜீத் சைதன்யா மற்றும் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் கஜபூசைச் சுந்தரசுவாமிகள் 25–ஆம் ஆண்டுக் குருபூசை விழா நடைபெற்றது. இதில் வேள்வி வழிபாடு, பெருந்திருமஞ்சனம், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பேரொளி வழிபாடு, மகேசுவரபூசை முதலிய நிகழ்வுகள் நடைபெற்றன.

பிற்பகலில் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் பட்டமேற்பு வெள்ளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தென்சேரிமலை ஆதீனம் தவத்திரு முத்து சிவராமசாமி சுவாமிகள் வரவேற்புரை வழங்க, மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய சுவாமிகள் தலைமை வகித்தார்.

தவத்திரு குமரகுருபர சுவாமிகளின் அருட்பணிகள் பற்றிய சிறப்புரைகளைத் தவத்திரு சாந்தலிங்க



முதல்நாள் பிற்பகல் விழாவில் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள், தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார், முனைவர் ந. இரா. சென்னியப்பனார், முனைவர் முத்துக்குமாரசாமி உள்ளிட்டோர்.

மருதாசல அடிகளாரும், பழனி சாது சண்முக அடிகளாரும் வழங்கினர். கோவை பாரதிய வித்யாபவன் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் மகிழ்வுரை வழங்கினார்.

தவத்திரு. சிவாச்சல அடிகளார், தவத்திரு சிவலிங்கேசுவர சுவாமிகள், அருணை அருள்முருகன் அடிகளார், பொன்மணிவாசக சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

சுவாமிகளின் அருட்பணிகள் பற்றி, முனைவர் கி. குமாரசாமி, கி. சுப்பிரமணியன், அழ. முத்துப்பழனியப்பன், ப. தனலக்குமி, கு. சிவலிங்கம், மோ.கோ. கோவைமணி ஆகியோர் உரைகள் வழங்கினர். கௌமாரச் செல்வி ஆ. மரகதம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.


– ந.நி.

கட்டுரை

7

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

கவிஞர் இளந்தேவன்



"சொல்லைச் சிந்திப்பவன்
மரபுக் கவிஞன் ஆகின்றான்
பொருளைச் சிந்திப்பவன்
புதுக்கவிஞன் ஆகின்றான்
இரண்டையும் சிந்திப்பவன்
இளந்தேவன் ஆகின்றான்"

கோவை பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியில் நான் இளங்கலை சமூகவியல் படித்துக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் சொல்வேந்தர் திரு. சுகி சிவம் என்னை அழைத்தார். கோவை அருள்மிகு கோனியம்மன் கோவிலில் கவியரங்கம் நடக்கிறது என்றும், நான் வரவேற்புக் கவிதை வாசிக்க வேண்டும் என்றும் பணித்தார்.



கவியரங்கத்தின் தலைவர் கவிஞர் இளந்தேவன் என்றும் சொன்னார். இளந்தேவன் கவிதைகளை நான் முன்னரே வாசித்திருந்தேன்.



என்ற அவருடைய கம்பீரமான பிரகடனம் என்னை என் அரும்புப் பருவத்திலேயே அசைத்து இருந்தது.

விழா நாளில் அம்பாள் ஆலயத்தில் அவருடனான அறிமுகம் நிகழ்ந்தது. அவருடைய 'வெளிச்ச விரல்கள்' என்னும் கவிதைத் தொகுப்பை அவர் கையொப்பத்தை வேண்டி நீட்டினேன்.

"வாங்கிட்டீங்களா" என்று வியப்புடன் கேட்டவர் நூலைக் கையில் வாங்கி அடுத்த நொடியே, "முத்துத் தமிழ் மூன்றும் முத்தையன் தனக்காக வித்துக்கள் வித்தான வித்தையைப் போற்றுகிறேன்" என்று எழுதிக் கையொப்பமிட்டுத் தந்தார்.

அப்போது அவர், தான் எழுதிய

மரபின் மைந்தன் முத்தையா

‘மயிலை மாருதி மாலை’ எனும் நூலை எனக்குப் பரிசளித்தார். மயிலாப்பூரில் இருக்கிற அனுமனைப் பற்றிய அழகான கவிதைகள் கொண்ட நூல் அது. அந்த நூலில் உள்ள ஒரு கவிதை எந்த ஆலயத்தில் அனுமன் சந்நிதியில் நின்றாலும் என்னுடைய பிரார்த்தனைப் பாடலாக மாறிவிட்டது.

"கன்னியர்க்குத் திருமணம் காளையர்க்குப் பதவிகள்

சின்னவர்க்கு நெஞ்சுரம் ஜெயம் எவர்க்கும் வேண்டுமே

பொன்னிறத்து மாருதி புயலளித்த மைந்தனே

முன்னுகின்ற செயலெலாம் முடித்து வைக்க வேண்டும் நீ"

அடுத்த ஆண்டு அதே ஆலயத்தில் அவருடைய தலைமையில் கவியரங்கம். இந்தமுறை எனக்கு ‘ஞானம்’ எனும் தலைப்பில் கவிதை பாடும் வாய்ப்புத் தரப்பட்டிருந்தது. நான் கவிதையை வாசித்தவுடன்,

“இளைய ஞானியே உன் இதய வார்ப்பிலே

பழைய ஞானியர் பக்தர் ஆயினர்”

என்று வாழ்த்துப்பா பாடினார்.

அதன் பின்னர் எத்தனையோ கவியரங்க மேடைகள் அவருடன்.... கவியரங்குகளைக் கட்டியாண்ட களிறனைய கவிஞர் அவர். இயற்பெயர் முத்துராமலிங்கம். கணித ஆசிரியராக வாழ்வைத் தொடங்கியவர். எம்.ஜி.ஆர். பற்றி அவர் எழுதிய கவிதைகளைக் கண்டு மகிழ்ந்த அப்போதைய அறநிலையத்துறை அமைச்சர் அருளாளர் ஆர்.எம்.வீரப்பன், அவருக்கு மக்கள் தொடர்பு அலுவலர் பதவி வழங்கினார். பின்னர் தமிழரசு இதழின் ஆசிரியர் உட்படப் பல பொறுப்புகள் வகித்தார்.

முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் முதலமைச்சர் அலுவலகத்தின் சிறப்பு அலுவலராய் அவர் பணிபுரிந்த கதைகளை நாடறியும். பின்னர் அரசியல்வாதி ஆக முயன்று தோற்றார்.

கவிதை உலகில் தனக்கென ஒரு சிம்மாசனத்தில் இருந்தார். அரசியல் அலைக்கழிப்புகள், தனிவாழ்வின் சோகங்கள் ஆகியவற்றைக் கடந்து உற்சாகமான கவிஞராக உலா வந்தார். ‘இயக்குநர் சிகரம்’ கே.பாலசந்தர் இயக்கிய கல்கி திரைப்படத்தில் எல்லாப் பாடல்களையும் எழுதினார்.

‘கனவு மலர்கள்’, ‘வெளிச்ச விரல்கள்’ உள்ளிட்ட பல கவிதைத் தொகுதிகளை எழுதியுள்ளார். கைக்கடக்கமான பல பக்திப் பாடல்களையும் பதிப்பித்துள்ளார். அவைஅனைத்திலுமே அபாரமான கவிதை வீச்சுகள் கனிந்திருக்கும். ஒன்றிரண்டு குழந்தைகள் மழலைப் பருவத்திலேயே இறந்தன. பதின்வயதுகளில் ஒரு மகன் விபத்தில் இறந்தான். குழந்தையாய் இறந்த மகளைப் பற்றி,

“பெண்கருப்பை இருட்டறைக்குள் பிறைநிலவாய்
வளர்ந்தவளே
மண்கருப்பை இருட்டறைக்குள் மறுபடி
ஏன் சென்றுவிட்டாய்;
சீறடியில் மண் ஒட்ட சினக்கின்ற நான் தானா
ஈரடியில் குழிவெட்டி
இறக்குதற்குச்
சம்மதித்தேன்”

என்னும் அவரின் உருக்கமான கவிதை ‘கனவு மலர்கள்’ தொகுதியில் இடம்பெற்றிருந்தது. அவருடைய ‘வெளிச்ச விரல்கள்’ தொகுதி பல்வகைப் பட்ட பாடு பொருட்களைக் கொண்டது.



யோகி ராம்சுரத்குமார்

“வெளிச்ச விரல்கள் தொடமுடியாத வெட்ட
வெளிக்கெல்லாம் – நம்
ஒளிச்சிறகாலே உயிரொளி தருவோம்
சிறகை விரியுங்கள்”

என அதன் முகப்புக் கவிதை சொல்லும்.

புதுக்கவிதையின் பொருளடர்த்தியை மரபில் புகுத்தியவர்களில் இவரும் ஒருவர். சொக்க வைக்கும் சொல்லாட்சி இளந்தேவன் கவிதைகளின் இன்னொரு சிறப்பம்சம்.

“கரையும் போது காக்கைகளுக்கு
வாயும் பிளக்கும் வாலும் பிளக்கும்”

என்பது போன்ற அழகிய அவதானிப்பு களை இவர் கவிதையில் காணலாம்.

முதிர்கன்னிகள் பற்றித் தொண் ணூறுகளிலேயே அழுத்தமான கவிதை வடித்தவர்

"இவர்கள்

கன்னஈரத்தில் காவியம் படைக்கும்

ஜன்னலோரத்துச் சந்திரோதயங்கள்;

... ...

இதோ ஓ இந்தச் சீதைகளுக்கு

அப்பன் வீடே அசோகவனம்தான்

... ...

இப்பொழுதெல்லாம் இந்தக் கன்னி

அடுப்பில் எரிப்பது விறகா? அல்ல...

ஆசைகளைத்தான் அப்படி எரிக்கிறாள்

... ..."

இவை, அந்தக் கவிதையின் சில பகுதிகள். கவிதையழகும் வசீகரக் குரலு மாய் கவியரங்குகளில் இவர் கவிதை பாடத் தொடங்கினால், வெண்கலக் கடையில் யானை புகுந்த கதைதான்.

"ஆற்றுக்கு நரைவிழுந்தால் கரையோரத்தின்

அருகம்புல் கைத்தடியாய்ப் பற்றிக் கொள்ளும்

கூற்றுக்கு நரை விழுந்தால்?? எருமை மாட்டுக்

கொம்புதனைக் கைத்தடியாய்ப் பற்றிக் கொள்ளும்"

என்னும் வரிகளை இவர் உச்சரிக்கும் போதெல்லாம் அரங்கம் கரவொலியில் அதிரும்.

"போதையிலே சிலருக்குக் கவிதை தோன்றும்

பொடிமட்டை யால்சிலர்க்குக் கவிதை தோன்றும்

பாதையிலே தேர்போலப் போகும் பெண்ணை

பார்க்கையிலே பலபேர்க்குக் கவிதை தோன்றும்

வாதையிலே சிலருக்குக் கவிதை தோன்றும்

வருத்தத்தில் சிலபேர்க்குக் கவிதை தோன்றும்

ஏதெனக்குத் தந்தாலும் கவிதை தோன்றும்

இனிப்பொன்று தந்துவிட்டால் கவிதை தோன்றும்"

என்பார். உண்மைதான். எனக்குத் தெரிந்து இருபதாண்டுகளுக்கும் மேலாகச் சர்க்கரை நோயை உச்சத்தி லேயே வைத்திருந்த விசித்திரமான மனிதர் அவர். "எனக்கு எப்போதும் சர்க்கரை 400–இல் இருக்கும். அந்த மயக்கத்திலேயே இருப்பேன்" என்று சாதாரணமாகச் சொல்வார்.

தொண்ணூறுகளின் தொடக்கம் என்று கருதுகிறேன். மயிலாடுதுறை அருகிலுள்ள மணல்மேட்டில் ஒரு கவிய ரங்கம். இலண்டனில் வாழும் கோயில் குருக்கள் தன்சொந்த ஊரில் ஏற்பாடு செய்திருந்தார். குருக்கள் வீட்டுச் சிற் றுண்டி என்றால் கேட்கவா வேண்டும்!

நெய்யொழுக முந்திரி மின்ன கேசரி யைத் தட்டில்வைத்துக் கூடவே சூடான உளுந்து வடையும் வைத்தார்கள். இளந் தேவன் பதறிப்போய் "இதை எடுங்க, இதை எடுங்க.." என்றார்.

பரவாயில்லையே என்று பார்த்தால் உளுந்து வடையை எடுக்கச் சொல் கிறார். "கேசரின்னா சிங்கம். அதுக்குப் பக்கத்தில வடையை வைச்சா கேசரிக்கு அவமானம்" என்றவர், ஒருமுறைக்கு இரண்டுமுறை கேசரியைக் கேட்டு வாங்கி உண்டார்.

'இவர்கள்' என்னும் தலைப்பில் ஒரு கவிதைத் தொகுதி. அருளாளர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் என எல்லோரைப் பற்றியும் எழுதி யிருப்பார். அந்தத் தொகுதியில் யோகி ராம்சுரத்குமார் பற்றி அபாரமான ஒரு கவிதை உண்டு.

யோகியையும் தன்னையும் ஒப்பிட்டு "நீ, நான்" என்ற வரிசையில் உருவகங் களாக அடுக்கியிருப்பார்.

"நீ – தாகம் எடுக்கும் ஆறுகளுக்கும் தண்ணீர்
தருகிற வானம்

நான் – தரையிலிருந்தே அதிலே கொஞ்சம்
தாங்கிக் கொள்கிற ஏனம்

நீ – மோகம் பிறக்கும் மூடர்களுக்கும் முத்தம்
தருகிற காற்று

நான் – முள்ளின் நடுவே சிக்கிக் கிடந்து
முளைக்கத் தொடங்கும் நாற்று

நீ – விசிறிக்காம்பை செங்கோல் ஆக்கிய
விசித்திரமான யோகி

நான் – வீசும் காற்றில் வெம்மை சேர்த்து வேகும்
ஒருசுக போகி

நீ – இரவைப் பகலாய் மாற்றப் பிறந்த இந்திர
ஜாலக் கிழவன்

நான் – இருட்டுப் பசுவில் வெளிச்சப் பாலைக்
கறக்க நினைக்கும் சிறுவன்"

என்பவை அந்த அழகிய கவிதையின் சில துளிகள்.

ஒரு கவியரங்கில்,

"பீத்தோவன் இசையினிலே பொங்குகிற பேரின்பம்
பாத்தேவன் இளந்தேவன் பாடலிலே ஒலிக்கிறது"

என்றேன். கவியரங்கில் அவர் பாடினால் கச்சேரி கேட்டது போல் இருக்கும்.

'மான்களுக்கும் கோபம் வரும்' என்ற தலைப்பிலான என் கவிதைத் தொகுதிக்கு அழகிய வாழ்த்துக் கவிதை தந்தார். 'ஒரு நதியின் மரணம்' என்ற தன் கவிதைக்கு என்னிடம் ஒரு திறனாய்வுக் கட்டுரையைக் கேட்டு வாங்கி வெளியிட்டார்.

மலேசியாவில் கம்பன் விழா. கவியரங்கத் தலைமைக்கு இளந்தேவன் தான் வேண்டும் என்பதில் அமைச்சரும் கம்பன் கழகத் தலைவருமான டத்தோ சரவணன் உறுதியாக இருந்தார். நல்ல பல் வலியுடன் வந்தார்.

"சொல்வலிக்க மாட்டாமல் சுகக் கவிதை தருபவரே
பல்வலிக்கு மத்தியிலும் பாட்டரங்கம் வந்தவரே"

என்று சிநேகமாய்ச் சீண்டினேன்.

"கன்னத்தில் வைத்த கரம் கவிஞன் சிந்தனைக்கு
சின்னமென அவையோர் சொல்லட்டும்
என்றிருந்தேன்
அண்மையிலே இருந்தபடி அவதிநான் படுகின்ற
உண்மையினைப் போட்டு உடைத்தீரே"

என்று பதில் கவிதை பாடினார்.

ஒருமுறை பாண்டிச்சேரியில் தொலைக்காட்சி நிலையத்தில் அவர் தலைமையில் கவியரங்கம் பாடிய போது, அவர் பாடிய ஒரு கவிதையை அங்கேயே கேட்டு வாங்கி வந்து நான் பொறுப்பிலிருந்த இதழில் வெளியிட்டேன். அந்தக் கவிதையின் முதல் வரி புத்தரோடு யுத்தம் செய்தது.

"துன்பத்தின் காரணம் ஆசையாம் – அது
தோல்வியில் விழுந்தவன் வாசகம்
இன்பமும் துன்பமும் இறக்கைகள் – அவை
இருப்பதனால் நாம் பறக்கிறோம்.

ஒற்றைச் சிறகுடன் பிறப்பது – எந்த
உலகிலும் சாத்தியமில்லைகாண்
கற்றைச் சடைமுடி ஆயினும் – சில
கவலையும் மகிழ்ச்சியும் உண்டுகாண்



கவிஞர்
இளந்தேவன்

ஆசைகள் வாழ்க்கையின் வித்துகள் – அவை
ஆண்டவன் அருளிய சொத்துகள்
ஆகையினால் தினம் ஆசை வை – இதை
ஆயிரம் நூல்களில் எழுதி வை"

என்பது அந்தக் கவிதை.

ஒரு நாள் ஈஷா யோக மையத்தில் என்னுடைய அறை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது, விருந்தினர் தங்கும் பகுதியிலிருந்து தலையில் தொப்பியுடன் ஒருவர் ஒரு காலைத் தாங்கித் தாங்கி பலவீனமாக வந்து கொண்டிருந்தார். அருகில் போய்ப் பார்த்ததும் அதிர்ந்தேன். கவிஞர் இளந்தேவன்தான் அவர். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தார். தன் தாயின் மரணத்தை ஒட்டிக் காலபைரவ கர்மா செய்ய வந்திருந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் காலை நான் கண் அறுவை சிகிச்சைக்காக சங்கரா கண் மருத்துவமனைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது, அவருடைய மரணச் செய்தி வந்தது. தன் 71–ஆவது வயதில் காலமானார். நேரில் சென்று அஞ்சலி செய்ய இயலாத வருத்தத்துடன் முகநூலில் அஞ்சலிக் குறிப்பு எழுதிவிட்டு மருத்துவமனை சென்றேன். அவர் மரணத்திற்குப் பிறகு வெளி வந்த அவருடைய கவிதை நூல் தமிழ் மணிகண்டனால் தொகுக்கப்பட்டு வெளி வந்தது. திருமதி சந்திரகாந்தி இளந்தேவன் கேட்டுக் கொண்டபடி அந்த நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதினேன்.

கவிஞர் இளந்தேவன் புகழ் என்றும் நிலைக்கட்டும்!

கட்டுரை



"கண்களில் பீளை சுரக்கிறது. உண்ட உணவு செரிமானமாகிய பிறகு மலமாகக் கழிகிறது. செவ்விளநீர் பருகினாலும், சிறுநீராகி விடுகிறது. மூக்கில் சளி வருகிறது. தோலில் அழுக்குத் திரள்கிறது. நெல்லில் உமி உள்ளது. இவ்வாறெல்லாம் இயற்கையே இவற்றைச் செய்கிறது. இவற்றை நீக்குவதும், கழிப்பதும் இயற்கையின் தூண்டுதலால் நிகழ்கிறது. பின்னர் உரிய உறுப்புகளைச் சுத்தப்படுத்திக் கொண்டால் ஒவ்வாமை வாராது.

இதுபோலத்தான் பெண்களுக்கான தீட்டும் சுத்தப்படுத்துவதற்குரியதே தவிர, பெண்களைப் பாவப்பட்டவர்களாகக் கருதுவதற்கு உரியதல்ல. இப்படிச் சொல்வதும்கூட ஒரு வகையில் ஆணாதிக்கம்தான்."

– இ.ஆர்.



பெண்கள் தீட்டுப்படும் இயற்கையைப் பழிக்காதீர்!

சிவமென்னும் செம்பொருளும், அருளென்னும் ஆற்றலும் (சக்தியும்) கலந்த கேண்மையில்தான் இந்த உலகமே படைக்கப்பட்டுள்ளது. எனவே, உலகம் ஆண்மை, பெண்மை என்னும் இரு பக்கமாக உள்ளது.

முழுமுதற் கடவுளாகிய சிவம் ஏவியதாலே அன்னை பராசக்தி இயற்கை மாயை (மூலப்பிரகிருதி), தூய மாயை, தூவா மாயை என்னும் மூன்றையும் படைத்தாள். அருள் வடிவான பெண்மையாம் பராசக்தி உலகைப் படைக்கவில்லையேல், ஆணுலகம் இல்லையாம்!

இந்த உண்மையை மெய்யறிவு அருளாளர் புரிந்து கொள்வர். ஆனால், மூட நம்பிக்கையாம் இருளில் மூழ்கியவரால் புரிந்துகொள்ள இயலாது. இதனால்தான் இன்னும் பெண்களை அடிமையாக்கிப் பல வழிகளிலும் பழிக்கின்றார்கள். இவர்களுக்குப் பகலவனைப் போன்ற பகுத்தறியும் பார்வை வேண்டும்.

இறையன்பு தழைத்த காலத்திலே வழிபாட்டுக்காகக் கருவறைக் கோயில்களை மன்னர்கள் ஆர்வத்துடனே கட்டுவித்தனர். அந்த வழிபாட்டிலேயே மூட நம்பிக்கைகளை ஒரு சாரார் புகுத்திவிட்டனர். அவை இந்நாள் வரை புரையோடி வந்துள்ளன.

மகளிர்க்கு நேரும் பூப்பினைத் (மாத விடாய்) தீட்டு (தூமை) எனும் சொல்லால் பழித்து, அவரைக் குறிப்பிட்ட நாள் வரை வீட்டிலே ஒதுக்கி வைத்துவிட்டனர். இந்த வழக்கம் நாளடைவில் வேரூன்றி அவர்களை அந்த நாட்களில் கோயில் வழிபாட்டிற்குச் செல்லுதல் கூடாது என முறைப்படுத்தினர்.


சிவவாக்கியர்

பெண்ணின் கருவாயிலிருந்து சோரும் குருதித்துளியையே தீட்டு என்பர். மனித உடம்பில் ஒன்பது ஓட்டைகள் உள்ளன. அனைத்திலிருந்தும் கழிவுப் பொருள்கள் வெளிப்படுகின்றன. இவற்றைத் தடுத்தால் உயிர் வாழ முடியாது. இவற்றுள் ஒன்றான தீட்டையும் யாராலும் நிறுத்த இயலாது. இது பெண் பிறவியின் இயற்கையாம் அனைத்து மாசுகளும் நீரால் கழுவித் தூய்மை செய்யப்படுகின்றன.

ஒருவரது அகத்தூய்மை அவர் செய்யும் நற்செயலால் வெளிப்படும். புறத்தூய்மையே அவர் நீரால் துப்புரவு

புலவர் அடியன் மணிவாசகன்

செய்தலால் தெரியவரும்.

> "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
> வாய்மையால் காணப் படும்!"

என்னும் தமிழ் மறையை உணர்ந்தால், எல்லோரும் அகந்தூய்மையைப் பற்றுடன் பாதுகாப்பர். இப்படித்தான் பெண்கள் பூப்பு நாட்களில் இரண்டு தூய்மையையும் கடைப்பிடிக்கின்றனர்.

தீட்டைப்போல் தூய்மை செய்வதும் பெண்ணிற்குப் பிறவி இயற்கையே. இதில் எந்த ஐயமும் யாருக்கும் வருதல் கூடாது!

இவர்களுக்கு யாரும் அறிவுறுத்தத் தேவையில்லை. இந்த இயல்பிலேதான் இவர்கள் தூய்மையோடு கோயில்களுக்குச் சென்று வழிபாடு இயற்ற விரும்புகின்றனர். இந்த விருப்பம் பெண்ணுரிமையாகும். இதில் யாரும் தலையிட்டுக் கேடு செய்தல் குற்றமே.

பூப்பு நிகழும் அகவை வரம்புடைய பெண்கள் (12 வயது முதல் 50 வயது வரை) கோயில் வழிபாட்டிற்குச் செல்ல யாரும் தடை போட முடியாது. போட நினைப்பவர்கள் மூடத்தின் முழுமைநிலை பெற்றவரே. ஏதோ ஒரு வகையில் தன்னலம் கொண்டவரே எனலாம்.

ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்டவரைக் கோயிலுக்குள் நுழையக்கூடாது என்று தடுத்து வந்ததைத் தமிழ்நாட்டு அருளாளர்களும், காந்தியடிகளும் முறியடித்து யாவரையும் கோயிலுக்குள் நுழைந்து வழிபடச் செய்தனர். அந்த அரிய செயலால் இன்று வழிபாடு தொடர்கின்றது. இதைப்போன்றே அனைத்து மகளிரையும் தடையின்றிக் கோயிலுக்குச் சென்று உரிமையோடு வழிபட்டு இன்புறச் செய்ய வேண்டும். இது காலத்தின் கட்டாயமே!

பெண்ணின் பூப்பினைத் தூமை, தீட்டு, தீட்டம் என்றெல்லாம் பழிப்பவரையும், கோயிலுக்குச் செல்லத் தடை சொல்வோரையும் சாடிப் பேசுகின்றார் புரட்சிச் சித்தரான சிவவாக்கியர்.

இவர் தமது பாடல் தொகுதியில், ஆறு பாடல்களில் அறிவியல் ஆராய்ச்சியோடு விளக்கியுள்ளார். இவ்வுண்மையை நாம் ஊன்றிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம். இவரது ஆற்றலுடைய பாடல் அருள் வாளாகும்!

"ஏ மனிதா, நீ பிறந்த கருவறை வரலாறு தெரியுமா உனக்கு? நன்கு தெரிந்து கொண்டால், பெண்ணின் தீட்டைப் பழிக்க மாட்டாய். தாயின் கருப்பையிலிருந்து தோன்றும் குருதித்

துளியையே தீட்டு என்கிறாய். இத் தீட்டிலிருந்துதான் நீயும் கருவாகி, உரு வாகி வந்துள்ளாய் என்பதை அறிக!

திங்கள் தோறும் அடையும் பூப்பாம் குருதித் துளியோடு ஆணும், பெண்ணும் கலக்கும்போது உருவாகும் வெண் பாலும், செம்பாலும் சேர்ந்தே கரு முட்டை உண்டாகின்றது. இதைத் தீட்டெனக் கருதுதல் மூடப்பழக்கம்.

பூப்புக்குப் பின் நான்காம் நாள் குளித்துத் தலைமுழுகி விட்டால் தீட்டு ஒழிந்து தூய்மை அடைவதாக நினைக் கின்றீர்கள். குழந்தை பிறந்து குளிப் பாட்டி விட்டால் தூய்மையாகி விடுவ தாகக் கூறுவீர்கள். இப்படிச் சொல்லும் நீங்கள், தூய்மையான பெண்கள் இறை யன்பு கொண்டு கோயில் வழிபாட் டிற்குச் சென்றால் மட்டும் தடுக் கின்றீர்கள். இதுதான் பகுத்தறிவாஷ?

நீ பழிக்கின்ற தீட்டில்தான் பூசை வழிபாடு செய்யும் அனைவரும் பிறந் தனர் என்பதை ஏன் அறிய மறுக் கின்றீர்? மந்திரம் சொல்லி மலரைத் தூவி வழிபாடு செய்பவரும், விளக்குக் கொளுத்திக் கொடுக்கும் பணியாளும் தீட்டிலிருந்து பிறந்தோர்தானே!

இந்தத் தீட்டுத்துளி என்பது அறிவியல் நோக்கிலே மண் முதலிய ஐந்து பூதப் பொருள்களால் ஆனதே என்பதை அறிவீராக!

பெண் பிறவியைப் பழித்து விட்டால் உங்கள் பிறவியே நடக்காது; உலகப் படைப்பே இல்லாமல் போய் விடுமே!

கடவுள் எல்லோருடைய உடம்பை யும் கோவிலாய்க் கொண்டு வீற்றிருக் கிறாரென்று சொல்கிறோமே, இந்த உடம்பு தீட்டிலிருந்து பிறந்து உருவான தென்றால் இக்கடவுள் கோயிலாய் விரும்பி ஏற்க மாட்டானே!”

இவ்வாறெல்லாம் அறிவொளி சுடரப்போம் சிவவாக்கியர் பெண்ணின் பெருமைக்கும் புகழுக்கும் விடுதலை தருகின்றார். அவருடைய பல பாடல் களில் மூன்றை இங்கே வெளிப்படுத்து வோம்.

“தரையினில் கிடந்தபோது அன்று தூமை என்றிலீர்
துறையறிந்து நீர்குளித்தது அன்று தூமை என்றிலீர்
பறையறிந்து நீர் பிறந்தது அன்று தூமை என்றிலீர்
புரையிலாத ஈசரோடு பொருந்து மாறது
எங்ஙனனே” (பாடல் - 49)

“சொற்குருக்கள் ஆனதும் சோதிமேனி ஆனதும்
மெய்க்குருக்கள் ஆனதும் வேணபூசை செய்வதும்
சற்குருக்கள் ஆனதும் சாத்திரங்கள் சொல்வதும்
செய்க்குருக்கள் ஆனதும் திரண்டுருண்ட
தூமையே!” (பாடல் - 51)

“தீட்டம் தீட்டம் என்றுநீர் தினம் முழுகி மூடரே!
தீட்டமாகி அல்லவோ திரண்டு காயம் ஆனது
பூட்ட காயம் உம்முளே புகழுகின்ற பேயரே
தீட்டுவந்து கொண்டலோ தெளிந்ததே
சிவாயமே” (பாடல் - 476)

இக்கருத்துக்களை உள்வாங்கும் அறிஞருலகம் ஆழ்மனத்துடனும், அறி வியல் ஆய்வுடனும் மக்களிடம் பரப் புரை செய்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மூட நம்பிக்கையிருளில் மூழ்கி மாளாமல் விழிப்புணர்வு கொள்ளுமாறு பேச்சிலும், எழுத்திலும் தொண்டு செய்ய வேண்டும்.

அகப்பொருளென்பது மனதளவே பேசுகின்ற பண்பாடாகும். தீட்டும் அதைச் சேர்ந்த பண்பாடாகும். ஆத லால், இதை மேலும் விளக்குவது முறை யாகாது. இதில் மதக் கொள்கையைத் திணித்துப் பேசுதல் மூட நம்பிக்கை யாம். இங்கே மதமெனும் பேய் பிடியா திருக்க வேண்டும்! “பெண்மை வெல்க” என்று கூத்தாட வேண்டும் என்ற வள்ள லார் – பாரதியின் வரிகள் நினைவுகூரத் தக்கவையாகும். ●

புத்தக மதிப்பீடு

மொழியாக்கம் – கொள்கைகளும், செய்முறைகளும்

ஆசிரியர் : முனைவர் கா. செல்லப்பன், வெளியீடு : அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழி பெயர்ப்பு மையம், என்.பி.டி.சி. – எம்.சி.இ.டி. வளாகம், உடுமலை ரோடு, பொள்ளாச்சி – 642 003. பக். 100, விலை ரூ. 125/– செல் : 99761 44451.


மொழியாக்கம் என்பது ஒரு கலை. மொழி பெயர்ப்பாளரின் சிந்தனைத் திறத்தால், படைப்புகள் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழியாக்கம் செய்யும்பொழுது அப்படைப்புகள் செழுமை பெறுகின்றன. அதற்கு மொழிபெயர்ப்பின் அடித்தளங்களைக் கற்றாக வேண்டும். அவ்வகையில் சிறந்த மொழியாக்கம் எப்படி, எவ்வாறு, எவ்வகையில் அமைய வேண்டும், மொழியாக்கத்தின் நோக்கம் என்ன? என்பன போன்ற சிந்தனைக்குச் சிறந்ததொரு நெறிமுறைகளை இந்நூலில் ஏழு பகுதிகளில் பகிர்ந்தளித்துள்ளார் மொழிபெயர்ப்புக் கலைஞரான டாக்டர் கா. செல்லப்பன்.


முதல் மூன்று பகுதிகளில் பல்வேறு உலக அறிஞர்களின் மொழிபெயர்ப்புக் கொள்கைகளும், கோட்பாடுகளும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. அதற்குப் பின்வரும் நான்கு பகுதிகளில் இலக்கிய மொழியாக்கம், தமிழ்க் கவிதையின் ஆங்கில ஆக்கங்கள், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குச் செய்யும் மொழியாக்கக் கலை, மொழியாக்கத்தில் காணப்படும் குறைபாடுகள் எனப் பல பரிமாணங்களில் எடுத்துக்காட்டுகளுடன் நன்கு விவரித்துள்ளார் நூலாசிரியர்.


இங்கேயும் ஒரு ஆரண்ய காண்டம்

ஆசிரியர் : ஆட்டனத்தி, வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41–பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98. பக். 143, விலை ரூ. 130, போன் : 044 – 26251968.

நாட்டு வாழ்க்கை மனிதர்களுக்கானது. காட்டு வாழ்க்கை மற்ற உயிரினங்களுக்கானது. நாட்டைக் காக்கும் நாம், காட்டைக் காப்பாற்றவும் கடமைப்பட்டுள்ளோம். அப்படி வனங்களையும் வன உயிரினங்களையும் காப்பாற்றும் முகமாக அரசு அதற்குரிய அலுவலர்களையும் பணியாளர்களையும் பணியமர்த்துகிறது. அந்த அடிப்படையில் வன அலுவலராகப் பணியமர்த்தப்பட்ட இந்நூலாசிரியர் ஆட்டனத்தி, பல்வேறு வனச்









சரகங்களில் பணியாற்றிய காலத்தில் வனங்கள், வன உயிரினங்களுடனான தமது அனுபவங்களையும், அங்கு நடந்த அதிசய நிகழ்வுகளையும் ஒரு திரைப்படம் போல நமக்கு இந்நூலில் காண்பித்திருக்கிறார்.

வகைவகையான மரங்கள், பறவைகள், விலங்குகள், பூக்கள், பூச்சிகள், செடிகொடிகள், அருவிகள், ஆறுகள் என அனைத்தைப் பற்றியும் அவர் விளக்கிக் கூறுவது, வனத்திற்குள் நம்மை நேரில் அழைத்துச் சென்று காண்பிப்பது போல் உள்ளது. உண்மையில், அதிர்ச்சி கலந்த அனுபவ நிகழ்வுகள். நாட்டைப் பற்றித் தெரிந்து கொண்டுள்ள நாம், அதிசயம், ஆச்சரியம், அபாயம் நிறைந்த காட்டைப் பற்றியும் தெரிந்து கொள்வது அவசியம். அதற்குச் சரியான ஒரு நூல் 'இங்கேயும் ஒரு ஆரண்ய காண்டம்.'

தமிழ் விருந்து

ஆசிரியர் : இரா. மோகன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17. பக். 240, விலை ரூ. 200/– போன் : 044–24342810.

அண்மையில் இயற்கை எய்திய பேரா. இரா. மோகனின் கடைசி நூல் இது. இந்நூலில், கவிதை அலைவரிசை, சங்கச் சித்திரங்கள், உதிரிப்பூக்கள் எனும் மூன்று பகுதிகளில் இருபத்தாறு கட்டுரைகள். கவியரசு கண்ணதாசனின் திரை ஆளுமையில் ஆரம்பித்து, நூலின் நிறைவுக் கட்டுரையான கவிஞர் வைரமுத்துவின் தமிழாற்றுப்படை வரையான எழுத்தாளர்களின் படைப்புச் சாரத்தைச் சுவாரசியமான உத்திகளுடன் எழுதியிருக்கிறார்.

கவிஞர் தாராபாரதியின் கவிதை வரிகளை பாரதியின் சிந்தனையோடு பொருத்திக் காண்பித்திருப்பது, சிந்தனையின் உச்சம். கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதைகள் புதிய கோணத்தில் அலசப்பட்டுள்ளன. கடையேழு வள்ளல்கள், ஔவையார் பற்றி நயம்பட எடுத்தாளப்பட்டுள்ளது. மு.வ.வின் மந்திரம் கட்டுரை உயர்வான எண்ணங்களின் உணர்வுமிக்க உருவகம். ஈரோடு

வரப்பெற்றோம்

1. நீதிக்கதைகள் – 35 : சுவாமி கமலாத்மானந்தர். வெளியீடு : ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம், கோவை – 20. பக். : 196, விலை ரூ. 70. (சிரிக்க வைக்க அல்லாமல், சிந்திக்க வைக்கும் 35 நீதிக்கதைகள் அடங்கிய தொகுப்பு)

2. கனவும் வெற்றியும் பேசிக் கொண்டவை : புதுயுகன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17. பக். 232, விலை. ரூ. 200/– போன் : 044 – 24342810. (கனவுகள், திறமைகள், பண்புகள் எனும் மூன்று தலைப்புகள் அடங்கிய தன் முன்னேற்றச் சிந்தனை நூல்).

3. சுதந்திரப் போரில் மறைக்கப்பட்ட வரலாறு : கேப்டன் எஸ்.பி. குட்டி, 357, வெங்கிடசாமி தெரு, பொன்னப்ப நாடார் நகர், நாகர்கோவில் – 4. பக் : 102, விலை ரூ. 80, செல் : 94436 07684. (இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும், தேசம் கவனிக்காமல் விடுபட்ட தியாகிகளையும் நினைவுகூரும் நூல்).

4. காலத்தை வென்ற கவிஞர்கள் : கே. ஜீவபாரதி, வெளியீடு : அன்னம் பதிப்பகம், 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் – 613 007. பக். 136, விலை ரூ. 120/– செல் : 94431 59371. (பாரதிதாசன், கம்பதாசன், கண்ணதாசன், தமிழ் ஒளி, பட்டுக்கோட்டையார் எனப் பத்துக் கவிஞர்களின் சீர்மிகு படைப்புகளைப் பற்றிய தொகுப்பு).

5. சோவியத் இலக்கியம் பற்றி ஜீவா : கே. ஜீவபாரதி, அன்னம் பதிப்பகம், 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் – 613007. பக். 117, விலை ரூ. 100/– செல் : 94431 59371. (மாக்சிம் கார்க்கி, மாயக்கோவ்ஸ்கி ஆகியோரின் இலக்கியங்கள் சோவியத் சமூகத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள் பற்றித் தோழர் ஜீவாவின் கருத்துக்கள் அடங்கிய கட்டுரைத் தொகுப்பு.)

6. ஏர்வாடியம் : பேரா. இரா. மோகன் – பேரா. நிர்மலா மோகன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17, பக். 176, விலை ரூ. 125. (ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணனின் வாழ்க்கை குறித்தும், அவருடைய படைப்புகள் குறித்தும் இருபெரும் பேராசிரியர்கள் எழுதியிருக்கும் நூல்).

7. கால் முளைத்த கனவுகள் : பாவலர் கருமலைத் தமிழாழன், வெளியீடு : வசந்தா பதிப்பகம். 2 – 16, ஆர். கே. இல்லம், முதல் தெரு, புதிய வசந்தநகர், ஒசூர் – 635 109. பக். 160, விலை ரூ. 150. செல் : 94434 58550. (தமிழ் மொழியின் மேன்மை, சமுதாய அவலங்கள், பெண்களின் நிலை, பாலியல் வன்முறைகள், இயற்கையைக் காக்கும் முறைகள் என எண்ணற்ற கவிதைகள் அடங்கிய தொகுப்பு).

8. வள்ளற்பெருமான் அருளிய தெய்வமணிமாலை : பேரா. இராம. இருசுப்பிள்ளை, வெளியீடு : தாயகம் வெளியீடு, 40/25, தாமு நகர், கோவை – 45. பக் : 104, விலை ரூ. 100/– செல் : 93448 17166. (வள்ளற்பெருமான் அருளிச் செய்த 'தெய்வமணிமாலை' பாடல்களுக்குப் பேரா. இராம. இருசுப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள சிறப்பான, விளக்கமான உரைநூல்).


தமிழன்பன், பாப்லோ நெருதா பற்றிய கவிதைச் சித்திரங்களைக் காட்சிப்படுத்திய முறை புதிய உத்தி. புறநானூற்றுப் பாடலின் வழியே பெண் உள்ளச் சித்தரிப்பு செறிவான பரிமளிப்பு. இப்படி, நூலில் தமிழ் இலக்கிய விருந்து படைத்துவிட்டுத் தம்மை இயற்கையோடு கரைத்துக் கொண்டார் பேரா. இரா. மோகன். ஆனாலும், அவர் படைத்தளித்த எழுத்துக்களில் என்றென்றும் உயிர் வாழ்வார்.

ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்த மாண்புறு மனிதர்கள் 100

தொகுப்பாசிரியர் : பேரா. இரா. மோகன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17, பக் : 862, விலை ரூ. 1000/–, போன் : 044–24342810.

'**க**விதை உறவு' இதழில் 'மனத்தில் பதிந்தவர்கள்' எனும் தலைப்பில் முன்னூறுக்கும் மேற்பட்ட பெருந்தகையாளர்களைப் பற்றி ஏர்வாடியார் எழுதித் தொடராக வெளிவந்து, அவை ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அந்த முன்னூறு பெருமக்களில், துறை வாரியாக நூறு பேரைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து நூலாக வெளிக் கொணர்ந்திருக்கிறார் பேரா. இரா. மோகன். இதில் பெருந்தகையோர், ஆன்மிகச் சுடர்கள், அரசியல் தலைவர்கள், இலக்கிய ஆளுமைகள், தமிழ்ச் சான்றோர்கள், கவிதைக் குயில்கள், திரையுலகச் சிற்பிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள் எனப் பத்துப் பிரிவுகளில் நூறு பெருமக்களின் சாதனைகள், பண்பு நலன்கள், மாண்புகள், ஆளுமைகள் இன்னும் பலவற்றை ஏர்வாடியார் பதிவு செய்துள்ளவற்றை வாசகர்கள் படித்துச் சுவைக்கும் வகையில் சிறப்பாகத் தொகுத்துத் தந்துள்ளார் பேரா. இரா. மோகன்.

– எம்.எஸ்.



ஸ்ரீ ராமானுஜர்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி, இன்றும் சமூக இயலின் பாயிரமாகப் போற்றப்படுகிறவர் மகான் இராமானுஜர். 'நூறாண்டுக் காலம் வாழ்க' என்று வாழ்த்துகிற வயதையும் தாண்டி 120 ஆண்டுகள்

ஒன்று, அருட்பிரகாச வள்ளலாரின் 'ஆன்மநேய' ஒருமைப்பாடு என்றால் அதில் ஐயப்பாடு இல்லை.

'வேதம் புதுமை செய்' என்பார் மகாகவி பாரதியார். ஆயிரம் ஆண்டு முன்பே அந்த வேதத்தின் அடிப்படையிலான 'மதத்திலேயே' புதுமை செய்தவர், ஏன்?

'சமய' வெளியில் ஒரு 'சம' வெளி

வாழ்ந்த வைபவம் கொண்டவர்; வைகுந்தம் கண்டவர், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக'த் தானுயர்ந்தவர்.

பிற்கால உலக ஞானிகளின் – குறிப்பாகச் சமூக விஞ்ஞானிகளின் கருத்தை – ரூசோவின் 'சமத்துவத்தை'; வால்டேரின் 'சகோதரத்துவத்தை'; காரல் மார்க்சின் 'சமதர்மத்தை' – பல நூறு ஆண்டுகள் முன்பே பாரத மண்ணில் விதைத்தவர் இராமானுஜர்.

பின்னாளில் வந்த மகாத்மா ஜோதிராவ் புலே, மகாத்மா காந்தியடிகள், அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் முதலிய சமூகச் சீலர்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்த முதல் போராளி இராமானுஜர்!

ஆழ்வாராதிகளின் ஆன்மிக வேர்களில் முகிழ்த்த இராமானுஜரின் விழுதுகளில் புரட்சியே செய்தவர் இராமானுஜர்!

'மதத்திற்கு மனிதன்' என்றிருந்ததை, 'மனிதனுக்கு மதம்' என மாற்றி யோசித்தவர். சனாதனத்தையே புரட்டிப் போட்டவர். 'மனிதர் யாரும் சரிநிகர் சமம்' என்று சமத்துவக் குரல் கொடுத்தவர், இராமானுஜர். அவரது 'உலகக் குரலை'க் 'கலகக்' குரல் என்று பாடபேதம் செய்தனர், பேதமே பாடமாகக் கொண்டவர்கள்.

வேதநெறி, 'சாதி நெறி'யாகச் சரிந்து பேதங்கள் வளர்த்தபோது, 'சாதிக்கா பிறந்தோம் நாம்?' என்று தட்டிக் கேட்டு, வாழ்ந்து 'சாதிக்கப் பிறந்தவர் நாம்' என்று சுட்டிக்காட்டியவர் இராமானுஜர். சாதித் தவறுகள் சமயத்தில் அண்டாதபடி – சமூகத்தில் ஒண்டாதபடி –



மலர்மகன்

சாதித்தவர்; அப்படியே 'வாழ்ந்து' போதித்தவர்.

இராமாநுஜர் பிராமணக் குலத்தில் பிறந்தவர். 'முப்புரி' பூணல் மட்டுமே பிராமண அடையாளம் அல்ல; 'அனைவரிடமும் செந்தண்மை பூணல்தான் அப்பழுக்கற்ற அந்தணா ளன் அடையாளம்' என்கிற வள்ளுவ வழிமுறையைத் தம் வாழ்நெறியாகக் கொண்டவர், அவர்.

ஒரு மேற்பிறப்பாளன் முதலியாண் டானிடமும், கீழ்ப்பிறப்பாளன் உறங்காவில்லியிடமும் சமத்துவம் பாவித்தவர் இராமாநுஜர். ஒருபடி மேலே போய் 'இரும்பைப் பொன் னாக்கும் குளிகை போல, என்னையும் சுத்தமாக்கும் உத்தமன்' என்று வில்லி யாண்டானை விட்டுக் கொடுக்காமல் பாராட்டி, அவன் தோள் மேல் கைபோட்டுத் தோழமை பூண்டவர்.

குருகுலப் பாடசாலையில் 'யாதவப்' பிரகாசரை ஆசிரியராக ஏற்றவர். ஒரு 'வைசியர்' – திருக்கச்சி நம்பியைத் தன் ஞானகுருவாகக் கொண்டதோடு, அவரது 'எச்சிலை' உண்ண ஏங்கியவர். 'பிற்பட்ட வகுப்பு 'வடுகநம்பியைத் தன் சமையலுக்காக உடன்வைத்துக் கொண்டவர். 'தாழ்த் தப்பட்ட வகுப்பைச்' சேர்ந்த மாறனேர் நம்பியை மடத்திலேயே பணியமர்த்திக் கொண்ட சமரச நெறி யாளர் இராமாநுஜர்.

திருநாராயணபுரத்தில் – பஞ்ச மரர்களுக்கும் திருமண் காப்பிட்டு சங்கு, சக்கர திருச்சின்னங்கள் பொறித்து – பஞ்ச சம்ஸ்காரம் செய்து அவர்களையும் கோயிலுக்குள் அழைத்துச் சென்று இறை தரிசனம் செய்வித்தவர் இராமாநுஜர்.

அதனால்தான் வீரத்துறவி விவேகானந்தர் 'ஆரிய பஞ்சகச் சங்களையும், சேரிப் பஞ்சமர்களையும் ஒரே பந்தியில் வைத்து வைணவப் 'பிர சாதம்' பரிமாறியவர் எங்கள் இராமா நுஜர்' என்று அமெரிக்க மண்ணில் வைத்து அவரைக் கொண்டாட முடிந்தது.

ஆதிசங்கரர், இராமாநுஜர் – இரு நோக்கினையும் தம் நோக்கில் பார்க்கிற விவேகானந்தர், சங்கரரை சமூகத்தின் 'மூளை'யாகவும், இராமா நுஜரை 'இதய'மாகவும் கருதுவார். ஆதிசங்கரரின் அறிவு நியாயத்தைச் சீராட்டுகிற அவர், இராமாநுஜரின் ஆன்மநேயத்தைப் பாராட்டுவார்.


'வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்த்து' அவற்றை, வகை ஆறாக வரையறுத்தவர் ஆதிசங்கரர். அவற் றுள் வைதிகத்தை 'வைணவ ஆறாக' வகையறுத்தவர் இராமாநுஜர்.

ஆம், சிலரின் வாதப் பிடியிலிருந்த கடும் வைதிகத்தை எளிய வைணவ மாக்கிச் சமதர்மம் கண்டவர்; மகான் களின் நெறியாக மட்டுமின்றி, வைண வத்தை மக்கள் நெறியாக்கிய மகான் அவர்.


காலகாலமாக 'ஓராண் வழியாக உபதேசிக்கப்பட்டு வந்த' 'எட்டெ ழுத்து' மந்திரத்தை – மோட்ச ரகசி யத்தை 'பாரில் ஆசையுடையோர் அனைவருக்கும் கூறி' – வருணாசிரம வரம்பறுத்தார்; சனாதன நரம்பறுத் தார், இராமாநுஜர்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்கில் – அனைவரையும் சமமாகப் பாவித்து – 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்று சாமானியனுக்கும் 'சாயுச்சம்' எனும் சமய உச்சம் காட்டியவர் எம்பெருமானார்.

வடமொழி என்கிற 'சமஸ்கிருதம்' அந்தணர் வாயினிலும், ஆண்டவன் கோயிலிலும் குடியிருந்த காலம். மொழி பேதம் காட்டி தமிழ்மொழி தள்ளிவைக்கப்பட்ட நேரம். 'பொன் னியிலே குளித்த புனிதத் தமிழ் மொழியைச் சந்நிதியில் சொன்னால், சாமிக்கா தீட்டு வரும்' எனக் கேட்டு, தமிழ்மொழியைக் கோயில் மொழி ஆக்கி – மொழிபேதம் களைந்து




மகாத்மா காந்தி



மகாகவி பாரதியார்

தமிழுக்கும் சமநிலை உருவாக்கியவர், இராமாநுஜர் என்கிற 'கோயிலண்ணா'.

கற்பூரத் தட்டுகளும் தமிழ் கற்க வைத்து, சுவாமி புறப்பாட்டில் – 'தமிழறியும் பெருமாளு'க்கும் முன்னதாக 'தமிழ் வேதம்' செல்லவும், பின்னதாக 'வடவேதம்' தொடரவும் வழிவகை செய்தவர் எம்பெருமானார்.



தந்தை பெரியார்

சமயவழிபாடுகளில், சடங்கு நெறிமுறைகளில் ஆண் – பெண் வேறுபாடு நீக்கி, பெண் சமத்துவத்தோடு பெண்ணுரிமைக்கும் முன்னுரிமை கொடுத்தவர் இராமாநுஜர்.

சமுதாயத்தில் 'பெண் அவள், இரண்டாம் பட்சம்' எனும் பாரபட்சம் நிலவிய காலத்தில், பெண்மை பிற்படுத்தப்பட்ட ஆணாதிக்கச் சமூகத்தில், வைணவ நெறியில் அவர்களையும் இணைத்து – ஆன்மிக அறப்பணிகளில், ஆலயத் திருப்பணிகளில், அதிகாரப் பதவிகளில், சமயச் சடங்குகளில் என சம்பிரதாயங்களைக் கடந்து – பெண்ணியத்தை முன்னிறுத்தியவர் அவர்.

ஆழ்வாராதிகளில் ஆண்டாளின் பாசுரங்களை அனுதினம் சேவித்தவர். பெண்ணையே – அத்துழாயை – தெய்வமெனப் பாவித்தவர். கோளூர் பெண்பிள்ளையின் 81 ரகசியங்களை வியந்து – குருநிலைக்கு உயர்த்தியவர் இராமாநுஜர்.

திருவரங்கத்திற்குப் பஞ்சம் பிழைக்க – கொங்குதேசப் பெண் 'சுமதி'யின் ஆன்மதாகம் அறிந்து, அவளை 'கொங்குப் பிராட்டி' எனும் தாஸ்யநாமமிட்டுக் கௌரவப்படுத்தியவர்.

சாதிப் பாகுபாடு போலவே சமய மாறுபாடுகளும் மலிந்து கிடந்த காலம் அது. என் தம்பி – தாரா பாரதி கேட்பாரே, 'சமயக் குறிகளுக்குச் சமக்குறியே தெரியாதா?' – அப்படித் தெரியாத காலம். அந்தச் சமயவெளியில் ஒரு சமவெளி கண்டவர் இராமாநுஜர்.

இராமன் 'சிலையைக்' கண்டே காதலாகி – 'ராமப்பிரியை' ஆன காஷ்மீரத்து இஸ்லாமிய இளவரசி 'பீவி'யையும், நாச்சியாராக்கி –அவளுக்கும் சிலை அமைத்துச் சிறப்பித்தவர், யதிராஜர். இன்றும் மக்கள் மத பேதமின்றி – திருப்பதி துலுக்க நாச்சி போல – வணங்கி வழிபடுகிற நிலையை – மத ஒருமைப்பாட்டை ஆயிரம் ஆண்டுகள் முன்பே உருவாக்கியவர் மகான் இராமாநுஜர்.

'மடங்களின்' இயக்கமாகியிருந்த ஒரு சமயத்தை 'மக்களின்' இயக்கமாக மாற்றியமைத்த – மாபெரும் புரட்சியினைச் செய்த மகான் இராமாநுஜரை 'சமயவெளியில் ஒரு சமவெளி' என்று கொண்டாடுவது பொருத்தமே!

●

ஆன்மிகம்



கோபுரமும் குன்றும்

முதற் படை வீடு



சுப்பிரமணியர் - தெய்வானை

முருகப் பெருமானின் அறு படை வீடுகளில் முதற் படை வீடு திருப்பரங்குன்றம்.

திருச்செந்தூரில் சூரனுடன் போரிட்டு வெற்றி மாலை சூடிய முருகனுக்கு, இந்திரன் தன் மகளான தெய்வானையைத் திருமணம் செய்து கொடுத்ததும் இத்தலத்தில்தான்.

மற்ற ஐந்து தலங்களில் நின்ற கோலத்தில் அருளும் சுப்ரமணியன் இங்கு தேவகுஞ்சரியை மணம் முடித்த கோலத்தில் அமர்ந்தபடி காட்சி தருகிறார்.

திருப்பரங்குன்றம் ஆதி காலத்தில் சிவன் குன்றமாகவே இருந்துள்ளது. அதுதான் பரன் குன்றம். கோயிலும் சிவன் கோயிலாகவே இருந்துள்ளது. இப்போதும் மூலவர் சிவன்தான். இவரை சத்யகிரீஸ்வரர் என்று அழைக்கின்றனர். முருகன் இந்திரன் மகளை மணம் புரிந்து கொண்ட தலம் என்பதால், முருகனுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு சுப்ரமணியசாமி கோயிலாகி விட்டது.

இக்கோயிலில் விழாக்களின்போது சிவனுக்கே கொடியேற்றம் செய்யப்படுகிறது. எனினும் வீதியுலாச் செல்பவர் முருகனே. முருகன் சிவ அம்சம் என்பதால் இவ்வாறு செல்வதாகச் சொல்கிறார்கள்.

இங்கு முருகனுக்கு 'சோம சுப்ரமணியர்' என்ற பெயரும் உண்டு. 'சோம' என்பது சிவனின் ஒரு பெயர்.

இக்கோயிலின் முக்கியச் சிறப்புக்களில் ஒன்று, இங்கு மட்டுமே முருகனின் வேலுக்கு அபிஷேகம் நடப்பதாகும். இங்கு முருகன் குடவரைக் கோயிலில் புடைப்புச் சிற்பமாக உள்ளதால், அவருக்கு அபிஷேகம் கிடையாது.

மூலஸ்தானத்தையொட்டியுள்ள குடவரையில் சத்யகிரீஸ்வரர், பவளக் கனிவாய்ப் பெருமாள், கற்பக விநாயகர், சுப்ரமணியர், துர்க்கையம்மன் எனப் பஞ்ச தெய்வங்களும் ஒரே இடத்திலிருந்து அருள் புரிகின்றனர்.

இரா. கல்யாணசுந்தரம்



பொதுவாக, கோயில்களில் சுவாமியைச் சுற்றிப் பிரகாரங்களும், பரிவார தேவதைகளும் இருக்கும். திருப்பரங்குன்றத்தில் பிரகாரம் கிடையாது. சிவனே மலை வடிவில் இருப்பதாலும், கோயில் குடவரையாக இருப்பதாலும் பிரகாரம் இல்லை. ஆனால், மலையைச் சுற்றி கிரிவலம் செல்லலாம். பவுர்ணமி தோறும் பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர்.

இங்குள்ள ராஜகோபுரம், கி.பி. 1505–இல் வீரப்ப நாயக்கர் என்பவரால் ஏழுநிலைக் கோபுரமாகக் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கெனப் பதினோரு தீர்த்தங்கள் உள்ளன.

வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை, புரட்டாசி வேல் திருவிழா, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலிய விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

குன்றத்துக் கோயிலைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது அது ஒரு குடைவரைக் கோயிலென்றே தெரியாது. மலையடிவாரத்தில் கட்டப்பட்ட கோயிலாகவே தோன்றும்.

உள்ளே செல்லும்போதுகூட மலையில் ஏறிச் செல்வதாகத் தோன்றாது. நீண்ட மண்டபங்களையும், வாயில்களையும், சிறு படிகளையும் தாண்டிச் செல்வதால், தரைமட்டத்துக் கோயில் போலவே தோன்றும்.


நாயக்க மன்னர்கள் : கி.பி. 1529–ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 200 ஆண்டுகள் ஆட்சி புரிந்த நாயக்கர்கள், தங்களைப் பாண்டிய வம்சத்தவராகவே நினைத்துக்கொண்டு ஆண்டு வந்தார்கள். இவர்கள் பதின்மூன்று பேர் அடுத்தடுத்து ஆண்டவர்கள். இவர்களில் வீரப்ப நாயக்கர் ஒருவரே கோபுரம் மற்றும் சுற்றுச் சுவர்களை எழுப்பிப் புண்ணியம் தேடிக் கொண்டார். இந்த ஏழுநிலைக் கோபுரத்தின் உயரம் 150 அடி. கோயிலிலுள்ள முத்து மண்டபத்தைக் கட்டியவர் நாயக்க அரசி ராணி மங்கம்மாள்.

காசி விஸ்வநாதர் கோயிலும், பழனி ஆண்டவர் கோயிலும் மலையின் மீது உள்ளன. ஆனால், கீழே கோயிலைச் சுற்றி நிறையக் கோயில்கள் உள்ளன.

தொடக்க காலத்தில் மலைக்குத் தென்புறத்தில்தான் சிறு கோவிலாக இருந்ததாம். அதைத் திருப்பி வடபுறமாக அமைத்ததால்தான் திருப்பரங்குன்றம் என்ற பெயர் வந்தது என்ற செவிவழிச் செய்திகூட உண்டு.

தென்பரங்குன்றக் கோயில், சன்னதி


தேரோட்டம்


கோயிலும் நகரமும்

தெருவில் சொக்கநாதர் கோயில், பழனி ஆண்டவர் கோயில், பாம்பாளத்தம்மன் கோயில், பேச்சியம்மன் கோயில், காசி விஸ்வநாதர் கோயில், வெயிலுகந் தம்மன் கோயில், நக்கீரர் கோயில் களெல்லாம் உள்ளன. இங்கு வரும் பக் தர்கள் இந்தக் கோயில்களுக்குச் சென்று வணங்குவது அரிதாக உள்ளது.

மலைமீது முஸ்லிம் தர்கா : இந்து தெய்வீகத் தலமாக அமைந்துள்ள திருப்பரங்குன்றம் மலை உச்சியில், காசி விஸ்வநாதர், பழனி ஆண்டவர் கோயில் களுக்கு மேலே ஒரு முஸ்லிம் தர்கா உள்ளதென்பது அனைவரையும் வியப்புக்குள்ளாக்கும் செய்தியாகும்!

அரபு நாட்டு மதினா நகரின் ஆளுநர் செய்யது சுல்தான் இப்ராகிம், மதத்தைப் பரப்பும் பயணமாக ஜெட்டா துறைமுகம் வந்து, அந்நகரத்து ஆளுநர் செய்யது சுல்தான் சிக்கந்தரை அழைத்துக்கொண்டு பெரும் படை யுடன் 1182–இல் இந்திய நாட்டின் மேற்குக் கரையிலுள்ள புன்னக்காயல் எனும் காயல் பட்டினத்திற்கு வந்தார்.

பிறகு படையுடன் மதுரைக்கு வந்து சோழவந்தானில் பாண்டியர் படையும், பாண்டியருடன் மோதத் தயாராக அணிவகுத்து நின்ற சோழர் படைகளை யும் விரட்டிவிட்டு, மதுரையில் சிக்கந் தரை மன்னராக்கிவிட்டு, சிறு படை யுடன் இப்ராகிம் இராமநாதபுரம் நோக்கிப் பயணப்பட்டார்.

திருப்பதிக்குச் சென்றிருந்த பாண் டிய மன்னன் மதுரை திரும்பியதும், சிக்கந்தருடன் மோதினான். சிறிய படையை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாத சிக்கந்தர், ஏழு குதிரை வீரர் களிடம் ஓலை கொடுத்து, படைகளை அனுப்பும்படி இப்ராகிமுக்குத் தூதனுப் பினான்.

அந்த ஏழு பேரும் பாண்டிய வீரர் களால் சிலைமான், சக்கிமங்கலம், கார் சேரி, மானாமதுரை என அடுத்தடுத்த ஊர்களில் வளைத்துப் பிடித்து வெட் டிக் கொல்லப்பட்டனர். போர் புரிய வீரர்களின்றி சிக்கந்தர், தனது படைத் தளபதி சிக்கந்தர் தர்வீஸ், தளபதி பால மஸ்தான், டாக்டர் லுக்மான் மூவரு டன் தப்பித் திருப்பரங்குன்றம் மலை மீது ஏறி உச்சிப் பகுதியிலுள்ள புதரில் ஒளிந்து கொண்டான்.

1195–இல் பாண்டியர் படையின் தேடுதல் வேட்டையில் சிக்கி, நால்வரும் அங்கேயே கொல்லப்பட்டனர். பாண்டிய மன்னன் ஆட்சியின்மீது முழுக் கவனமும் வைத்துச் செயல் பட்டுக் கொண்டிருந்தபோது, மதுரையி லிருந்த இஸ்லாமியர்கள், மலை உச்சி யில் சிக்கந்தருக்குத் தர்காவும், மலை யின் முக்கால் பகுதியில் மற்ற மூவ ருக்கும் சமாதிகளையும் அமைத்து விட்டனர்.

இப்போதும் சமாதிகளும், தர்காவும் போலீஸ் பாதுகாப்பில் மலைமீது உள்ளதைப் பார்க்கலாம்.

மதுரையில் இஸ்லாமியரின் ஆட்சி 47 ஆண்டுகள் நடந்தது. அதற்கு அடை யாளமாக மகபூப்பாளையம், கோரிப் பாளையம், கான்பாளையம் முதலிய பகுதிகள் உள்ளன.

இஸ்லாமியர் ஆட்சியில் மீனாட்சி யம்மன் கோயிலின் பெரும்பகுதி இடிக் கப்பட்டுப் பூசைகள் நிறுத்தப்பட்டி ருந்தன. தெலுங்குதேசமான விஜய நகரத்து மன்னன் கம்பண்ண உடையா ரால் முஸ்லிம் ஆட்சி முடிவுக்கு வந்தது. அவனது வழியில் வந்த திருமலை நாயக்க மன்னரின் ஆட்சியில், இடி பட்டுக் கிடந்த செங்கற்களை அகற்றி விட்டு, தற்போது காணப்படும் கருங்கற் களாலான கோயில் புதுப்பித்துக் கட்டப்பட்டது.

மீனாட்சியம்மன் கோயிலில் வருவாய் இல்லாமல், திருப்பரங்குன்றம் கோயிலின் உதவியில் மீனாட்சியம்மன் கோயில் பூசைகள் நடந்ததும் உண்டு!

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 37 ஜூலை 2019 இதழ் : 6

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர் : **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/–
ஆண்டு சந்தா ரூ. 265/–
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/–
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423

வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

முளைப்பயறு உப்புமா

தேவையானவை :சம்பா கோதுமை ரவை : 1 கப், பச்சைப் பயறு : 1/2 கப், பொடியாக நறுக்கிய கேரட் : 1/4 கப், பீன்ஸ் : 1/4 கப், வெங்காயம் : 2, பச்சை மிளகாய் : 3, கடுகு, கறிவேப்பிலை, எண்ணெய், உப்பு : தேவையான அளவு.

செய்முறை :

1. பச்சைப் பயறைத் தண்ணீரில் ஊற வைத்து முளைக்கட்டி எடுத்துக் கொள்ளவும்.
2. வெங்காயம், பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
3. வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை தாளித்து வெங்காயம், பச்சை மிளகாய், காய்கறிக் கலவை, முளைவிட்ட பச்சைப்பயறு, உப்பு சேர்த்து வதக்கி, தண்ணீர் விட்டு வேக விடவும்.
4. கோதுமை ரவை வேகும் அளவுக்குத் தண்ணீர் இருக்கும்போது ரவையைச் சேர்த்துக் கிளறி இறக்கினால், சுவையான சத்தான 'முளைப்பயறு உப்புமா' ரெடி.

காய்கறிகள், தானியங்கள் சேர்ந்த இந்த ஆரோக்கியமான உணவை குழந்தைகளுக்குக் கொடுக்க உடல் வலிமை பெறும், வெரைட்டியாகவும் இருக்கும்!

– ச. லெட்சுமி, செங்கோட்டை.



எஸ். கோகுலாச்சாரி

சிறுகதை

உலக்கைக் கொழுந்து

காபி கொடுத்துக் கொண்டே சுசீலா கேட்டாள்.

“ஏங்க... நம்ம கோகிலா உங்ககிட்ட ஓர் உதவி கேட்டா...?”

“கோகிலா? வேலைக்காரி...?”

“ஆமாங்க...!”

“என்ன? அடுத்த மாசத்திலேருந்து சம்பளம் ஏத்தணுமா? போன மாதம்தானே சுளையா நூறு ரூபாய் ஏத்தினோம்...?”

“அதில்லங்க...!”

“அப்போ... ஒரு வாரம் லீவா!”

“இல்ல...”

“பின்ன என்னதான் சொல்லித் தொலையேன்...”

“ஏதாவது பேசவிட்டாத்தானே சொல்ல முடியும்!”

“சரி சொல்லு...”

“அவ பையன் பத்தாவது படிக்கிறான்...”

“சரி...”

“ரிசல்ட் வந்துருச்சி...”

“சரி...”

“பெயிலாயிட்டான்!”



“இன்றைக்கு வாத்தியாரா இருக்கிறவாளும், மாணவனா இருக்கிறவாளும் இதத் தெரிஞ்சுக்கணும். 80 மார்க்கு வாங்குற பையனை 90, 100 வாங்க வைக்கிறது பெரிசில்ல... அதில மார்தட்டிக்கிறதுக்கு ஒண்ணும் இல்லை.. 10 மார்க்கும் 15 மார்க்கும் வாங்கி ஒண்ணும் பண்ண முடியாம தவிக்கிறவனுக்கும் சொல்லிக் கொடுத்துக் கரையேத்தறதுதான் அசல் வாத்தியார்!”

“என்ன... பெயிலாயிட்டானா? சரியாப் படிக்கணும்... உலக்கைக் கொழுந்தாட்டம் ஊர் சுத்திகிட்டிருந்திருப்பான்...”

“அதப்பத்தி இப்பப் பேசி என்ன ஆகப் போகுது..? எல்லாத்திலேயும் பாஸ் பண்ணாலும் கணக்குக் கால வாரி விட்டிருச்சாம்...”

“சரி... திரும்ப எழுதச் சொல்லு...”

“அதுக்குத்தான் உங்ககிட்ட உதவி கேட்டா...”

“என்ன உதவி...?”

“இந்த ஊர்ல கணக்கு ட்யூஷன்ல உங்களை மிஞ்ச ஆளில்ல...”

“ஒத்துகிக்கிட்டா சரி...!”

“அதனாலே எப்படியாவது அவள் பையனை ட்யூஷன்ல சேர்த்து தேத்தி விடச் சொல்றா...!”

“என் பீஸ் சொல்லிட்டியா...!”

“சொன்னேங்க... அதுக்கு அவ தலையைத் தான் அடகு வைக்கணும்...”

“வைக்கச் சொல்லு...”

“என்னங்க இப்படிச் சொல்றீங்க...?”

“இதோ பாரு சுசீலா! எங்கிட்ட மேத்ஸ் ட்யூஷன் வர்றவங்க எப்படியும் பாஸாகி நல்ல மார்க் வாங்கலாம்னு வராங்க...”

“அதுதான் தெரியுமே...!”

“அப்ப என் உழைப்புக்கு மரியாதை வேண் டாமா! காசு வாங்காம யாருக்கும் சொல்லித் தர்ற தில்லேன்னு ஒரு கொள்கையே வச்சிருக்கேன்...”

“இருக்கட்டும். இவ நம்ம வீட்டு வேலைக் காரி பையன். ஏழை... அவளால உங்க பீஸைத் தரமுடியாது...”

“இதோ பார். அவ நம்ம வீட்டு வேலைக்காரி. நாம சம்பளத்திலே நயா பைசா குறைச்சிக் கொடுக்கிறோமா!”

“சரி... என்னதான் சொல்றீங்க!”

“பீஸை ரெடி பண்ணிட்டு வந்து பார்க்கச் சொல்லு...”

மாதவனின் பிடிவாதம் சுசீலாவுக்குத் தெரிந் ததுதான். காபி குடித்துவிட்டு வைத்த தம்ளரை ‘சரக்’கென்று எடுத்துக்கொண்டு நகர்ந்தாள்.

மாதவன் கடுமையான உழைப்பாளி. காலை 5.00 மணிக்கே அவன் வீட்டு முன்கூடத்தில் ட்யூஷன் வகுப்புக்கள் தொடங்கிவிடும். ஒரு குரூப்புக்கு ஒன்றரை மணி நேரம்.

8.00 மணிக்குள் முடித்துவிட்டு, 1 மணி நேரத்தில் குளித்து முடித்து வங்கிப் பணிக்குக் கிளம்பி விடுவான்.

இரவு 7.00 மணிக்கு வந்தால் ஒரு குரூப் தயாராக இருக்கும்.

கணக்கு சொல்லிக் கொடுப்பதில் நிபுணன். பத்தாம் வகுப்பு ஆரம்பித்து இன்ஜினியரிங் படிக் கும் பிள்ளைகள் வரை அவனிடம் வருவார்கள்.

வாரம் ஆறு நாள் கடுமையாக உழைக்கும் அவன், எக்காரணம் முன்னிட்டும் ஞாயிற்றுக் கிழமை ட்யூஷன் எடுக்க மாட்டான். இதையும் கொள்கையாகவே வைத்திருந்தான்.

ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் காலை 10 மணிக்கு வெளியில் சுற்றக் கிளம்பினால் இரவுதான் வருவான்.

மாதவனின் ஒன்றுவிட்ட சகோதரன் கண்ணன் பூனாவில் வேலை பார்க்கிறார். வேலை என்றால் கம்பெனியில் அல்ல. அங்குள்ள பெரு மாள் கோயிலில் அர்ச்சகராக வேலை பார்க்கிறார்.

கும்பகோணத்திற்கு வந்த அவர், “மாதவா! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமைதானே! பக்கத்தில் இருபது கிலோ மீட்டர் தூரத்திலே திருவெள்ளியங் குடின்னு ஒரு கோயில் இருக்கு. அதுக்குப் பக்கத் தில சேங்கனூர்னு ஓர் இடம். சேவிச்சிட்டு வந்துடலாமா!”

மாதவன் யோசித்தான்.

சுசீலா சொன்னாள்... “என்ன யோசிக் கிறீங்க... நாளைக்குப் போறோம். டாக்ஸி ஒண்ணு சொல்லிடுங்க...!”

மாதவன் அரை மனதோடு ‘சரி... சரி...’ என்றான்.

திருவெள்ளியங்குடி போனபோது கூட்டம் அதிகம் இல்லை. யாரோ அர்ச்சகர் வீட்டை அடை யாளம் காட்டினார்கள். இவர்கள் போவதற்குள் அர்ச்சகர் எதிரில் வந்தார்.

“வாங்கோ! வாங்கோ! வெளியூர்க்காராப் போலிருக்கு...!”

“நாங்க கும்பகோணம். இவர் பூனாவி லிருந்து வந்திருக்கார்.”

கண்ணனின் குடுமியையும், திருமண்ணை யும் பார்த்தவுடன் அர்ச்சகருக்கு, இவர் தன்னைப் போல என்று தெரிந்துவிட்டது. அதிக வினயம் காட்டினார்.

கண்ணனிடம் அர்ச்சகர் சுவையான பல செய்திகளைச் சொல்லிக் கொண்டே வந்தார்.

“இதோ பாருங்க சுவாமி! சுக்கிரனுக்குக் கண்ணு போய் இங்கே பெருமாளிடத்திலே வந்து கழுவாய் தேடிக் கொண்டான்...”

“ஏன் கண் போயிற்று!..?”

“தானம் பண்றவாளைத் தடுத்தான். தான தர்மம் செய்யாட்டியும், செய்யறவாளைத் தடுக்க லாமா!”



“என்ன சுவாமி சொல்றேள்...?”

“உங்களுக்கு மகாபலி கதை தெரியுமோல்லியோ! மகாபலிகிட்ட பெருமாள் வாமனனாக வந்து மூன்றடி மண் தானம் கேட்டார்.”

“ஆமா...!”

“மகாபலியின் குலகுரு சுக்ராச்சாரியார். அவர் பெருமாள் வாமனன் வேஷம் போட்டு வந்திருக்கார்னு தெரிஞ்சுண்டு, இவனுக்குத் தானம் கொடுத்து ஏமாறாதேன்னு தடுத்தார்.”

“சரி...!”

“மாவலிக்குப் பெருமாளே வந்து தானம் கேட்டு அதைத் தான் தர்றது பெருமைதானேன்னு நினைச்சிண்டு தானம் தர ஒத்துக்கிட்டு, தீர்த்தப்

பாத்திரத்தை எடுத்தான். சுக்ராச்சாரியார் பார்த்தார். தண்ணி விழுந்தாத் தானே தானம் தருவே... தண்ணியே வராம வழியை அடைக்கிறேன்னு வண்டு வேஷம் போட்டு நீர் விழும் ஓட்டையை அடைச்சுட்டார். பார்த்தார் பெருமாள். ஒரு தர்ப்பையை எடுத்து ஒரு குத்துக் குத்த, சுக்கிரனுக்குக் கண்ணு போயிடுத்து. இந்தத் தலத்தில வந்து பிராயச்சித்தம் தேடிண்டார்.''

மாதவனுக்குக் கோபம் வந்தது.

''ஏன் சுவாமி! உங்க பெருமாள் மோசமானவரா இருப்பார் போலிருக்கு!''

''என்ன சொல்றே...!''

''குலகுருன்னா ராஜாவுக்கு நல்லது செய்யணும். சுக்கிராச்சாரியார் தன் சீடனான ராஜாவுக்கு ஏமாறாதேன்னு நல்லதுதானே பண்ணார்.''

''அது சரி! கொடுத்ததைத் தடுக்காரே! அது தப்பில்லையா? தானத்தைத் தடுத்த குற்றத்துக் குத்தான் கண் போச்சு!''

''அப்படியா! சரி! தானம் கொடுத்த மகாபலியை ஏன் தலையில காலை வச்சு பாதாளத்தில தள்ளினார்...?''

''மகாபலி தானம் கொடுத்தான். சரி. குரு வார்த்தை கேக்கலியே! அதுக்குத்தான் பாதாளம்!''

''ம்... நல்லா இருக்கே நியாயம்!'' என்றான்.

அதற்குள் அர்ச்சகர் நிவேதனம் செய்த புளியோதரையைத் தந்தார். பக்கத்திலே இரண்டு கிலோ மீட்டர்ல சேங்கனூர் இருக்கு. அந்த ஊருக்கு ரெண்டு சிறப்பு. ஒண்ணு சைவத்திலே சண்டேசுவரர் அவதரித்த ஊர். அடுத்து வைஷ்ணவத்திலே பெரிய மகானாக விளங்கிய பெரியவாச்சான் பிள்ளை அவதரித்த ஊர். அவர் கட்டிய பெருமாள் கோயில்தான் அங்கிருக்கிறது. அவரே அங்கே அர்ச்சா ரூபத்தில் காட்சி தருகிறார்.

இப்படிச் சொன்ன அர்ச்சகர், அடுத்து ஒரு வார்த்தையைச் சொன்னார்.

''யாரு அங்கே சேவிக்கிறாங்களோ இல்லையோ, பரீட்சைக்குப் படிக்கிற பையனும், பையனுக்குப் பாடம் சொல்ற வாத்தியாரும் அவசியம் சேவிக்க வேண்டிய இடம் அது!''

மாதவனுக்கு டக்கென்று சுவாரசியம் ஏறியது.

''சுவாமி! அப்படியென்ன விசேஷம்! கொஞ்சம் சொல்லுங்களேன்...''

''சுருக்கமாகச் சொல்றேன். பெரியவாச்சான் பிள்ளை மிகச்சிறந்த ஆசிரியர். வைணவத்தில் ஆழ்வார் பாசுரங்கள் அத்தனைக்கும் உரை எழுதியவர். அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.''

''சொல்லுங்கள்...''

''அவரிடத்திலே வரதராஜன் என்று ஒரு பையன் சின்ன வயசிலேயே வந்து சேர்ந்தான். படிக்காதவன். மடைப்பள்ளியிலே வேலை கொடுத்து வச்சிட்டிருந்தார். முறையா படிக்கலையே தவிர, விஷயங்களைத் தெரிஞ்சுக்கிறதல ஆர்வம் அதிகம்...''

''சொல்லுங்க...!''

''ஒரு நாள் பெரியவாச்சான் பிள்ளையைத் தேடி சில வித்வான்கள் வந்தாங்க. அப்போ பிள்ளை வெளியிலே போயிருந்தார். இவர்கள், அவர் வரும்வரை ஏதாவது செய்வோமேன்னு ஒரு புஸ்தகத்தை வச்சுப் படிச்சுக்கிட்டிருந்தா. இதை சமையல் வேலை செய்யற வரதராஜன் கவனிச்சான். ஆர்வம் தாங்கல. என்ன புஸ்தகம் படிக்கிறீங்கன்னு கேட்டான்.''

''ஒழுங்கா பதில் சொல்லியிருக்க மாட்டாங்களே!'' என்றான் மாதவன்.

''எப்படிச் சொல்றேள்...?''

''எல்லாக் காலத்திலேயும் இருக்கிற சங்கதி தானே... படிக்காதவனைவிட படிச்சவனுக்குக் கொஞ்சம் அகம்பாவம் வந்துரும்...'' என்றான்

''சரியா சொல்றேள்... அவர்கள் வரதராஜனிடம் 'புஸ்தகத்துப் பேரா கேட்கிறே! முஸலகிஸலயம்னு இதுக்குப் பேரு' என்றார்கள். இந்தப் பேரைச் சொல்லிவிட்டு வரதனைப் பார்த்துச் சத்தமாகச் சிரித்தார்கள்...''

''இதுக்கு ஏன் சிரிக்கணும்...?'' கேட்டான் மாதவன்.

''அதானே, இதுக்கு ஏன் சிரிக்கணும்...? வரதராஜனுக்கும் காரணம் புரியல. ஏதோ நகைச்சுவையான புஸ்தகம் போல இருக்குன்னு நெனச்சிட்டு சும்மா இருந்துடறான். தனது குருநாதன் பெரியவாச்சான்பிள்ளை வந்ததும் அவர்கிட்ட இந்தப் புஸ்தகத்தப் பற்றிக் கேட்கணும்னு காத்திட்டிருக்கிறான்.''

''குருநாதர் வந்ததும் தயங்கித் தயங்கிக் கேட்கிறான். 'உங்களைத் தேடி காலையில் வந்த பண்டிதர்கள் சிலர் ஏதோ முஸலகிஸலயம்னு புஸ்தகத்தைப் படிக்கிறதா சொன்னா... அந்தப் புஸ்தகத்திலே என்ன இருக்கு சுவாமி'ன்னு கேட்டான்.''

''பெரியவாச்சான்பிள்ளை ஒரு நிமிஷம் நிதானிச்சுட்டுச் சொன்னார்.

''வரதா! முஸலகிஸலயம்னா உலக்கைக்

கொழுந்துன்னு பேர். நீ படிக்கலியோல்லியோ.. அதான் மறைமுகமா உன்னைக் கேலி செய்துட்டுப் போறா...''

''அப்படியா! அந்தக் காலத்தில கூடமா இப்படிப்பட்ட கிண்டல் கேலியெல்லாம் இருந்துருக்கு...?'' மாதவன்.

''ஏதோ ஒரு வகையில மத்தவங்களை மட்டம் தட்டிப் பேசறது எப்பவுமே இருக்கு...'' என்றார் அர்ச்சகர்.

''சரி... மேலே என்ன நடந்ததுன்னு சொல்லுங்க...'' என்றான் மாதவன்.

''தன்னைப் படிக்காதவன் உலக்கைக் கொழுந்துன்னு கேலி பேசியது வரதனுக்குப் பொறுக்க முடியல. அப்படியே உடைஞ்சு போயிட்டான்.

''பெரியவாச்சான் பிள்ளைக்கு வரதன் நிலைமை பார்த்துப் பரிதாபமாப் போயிடுது. சமையல் வேலையைத் தவிர வேறு தெரியாத வரதனுக்கு அப்ப வயசு என்ன தெரியுமா?''

''என்ன வயசு?''

''முப்பத்திரெண்டு. இனி பள்ளிக்கூடம் போக முடியுமா! அ, ஆன்னு மணல்ல எழுத முடியுமா? அப்படியே போனாலும் மத்தவா கேலி பேச மாட்டாளா...!''

''வாஸ்தவம்தான்...'' தலையாட்டினான் மாதவன்.

''பெரியவாச்சான்பிள்ளை அப்ப என்ன சொன்னார் தெரியுமா? 'வரதா! கவலைப் படாதே! வந்தவாளுக்கு அவங்க படிச்ச படிப்பு, ஞானத்தைவிட கர்வத்தை அதிகம் கொடுத்துடுது. சரி... நீ கவலைப் படாதே! உனக்கு ஆர்வம் இருக்கு. நாளையிலிருந்து என்னோட மாணவன் நீ!''

''முப்பத்திரண்டு வயசுல...!''

''எண்ணூறு வருஷத்துக்கு முந்தி முதியோர் கல்வி! ரெண்டு வருஷத்தில காவ்யம், நாடகம், அலங்காரம்னு ஒண்ணு விடல...''

''பசியிருந்தா நல்லா சாப்பிடலாம்... ஆர்வம் இருந்தா வயசு எத்தனையானாலும் கத்துக்கலாம்!''

''சரியாச் சொன்னேள். அவர் முதல்ல எழுதுன புஸ்தகம் பேரே முஸலகிஸலயம். தன்னைப் போலவே திருவாய்மொழிக்கு உரை எழுதச் சொல்லிப் பெரும் புகழ் பெறவைத்தார். அவருக்குப் பின்னாலே என்ன பேர் தெரியுமா! வரதராஜன் இல்லை. வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர்.''

''அதென்ன வாதிகேசரி!'' கேட்டான் மாதவன்.

''கேஸரின்னா சிங்கம். வாதி என்றால் வாதம் செய்பவர். தர்க்கத்தில் நிபுணத்துவம் பெற்று நிகரற்ற ஞானத்தோடு விளங்கியவர்.

''இன்றைக்கு வாத்தியாரா இருக்கிறவாளும், மாணவனா இருக்கிறவாளும் இதத் தெரிஞ்சுக்கணும். 80 மார்க்கு வாங்குற பையனை 90, 100 வாங்க வைக்கிறது பெரிசில்ல... அதில மார்த்தட்டிக்கிறதுக்கு ஒண்ணும் இல்லை.. 10 மார்க்கும் 15 மார்க்கும் வாங்கி ஒண்ணும் பண்ண முடியாமத் தவிக்கிறவனுக்கும் சொல்லிக் கொடுத்துக் கரை யேத்தறதுதான் அசல் வாத்தியார்!''

மாதவனுக்குச் சுருக்கென்றது.

மாதவன் திங்கட்கிழமை முதல் இரண்டு குரூப்புக்கு ட்யூஷன் எடுத்துவிட்டு வந்து சோபாவில் அமர்ந்தான்.

செய்தித்தாளைப் பிரித்தான்.

சுசீலா வழக்கம்போலக் காபியைக் கொண்டு வந்து டீப்பாயில் வைத்தாள்.

ஒரு வாய் காப்பி சாப்பிட்டுவிட்டுச் சொன்னான்.

''சுசீலா! நம் வீட்ல வேலை செய்ற கோகிலா மகனுக்குக் கணக்கில ட்யூஷன் கேட்டாளே...''

''அதான் முடியாதுன்னு சொல்லிட்டீங்களே... உங்க பீஸைக் கொடுக்க அவளுக்கு முடியாது.''

''எனக்குப் பீஸ் வேண்டாம். சாயங்காலம் 7 மணி ட்யூஷனுக்கு வரச்சொல்...''

''நிஜமாகவா... அப்புறம் மாறமாட்டீங்க இல்ல...''

சுசீலா நம்பாமல் மாதவனைப் பார்த்தாள்.

திடீரென்று ஏன் இப்படி மாறினான்? என்ற கேள்வி மனசுக்குள் எழுந்தாலும், எப்படியோ மாறினானே என்ற மகிழ்ச்சியோடு அடுக்களைக்குச் சென்றாள்.

●

"ஓ மை காட்...!"

கடவுள் இல்லை என்று மறுத்து வந்த நாத்திகவாதியான இங்கர்சால், தன் மகள் மாடிப் படியிலிருந்து கீழே விழுந்தபோது, "ஓ மை காட்!" என்று துணைக்குக் கடவுளை அழைத்தார்.

– ஆர்.கே. லிங்கேசன்

இனியாவது இந்தியர்களாக உருவாக...



சாதி, சமய சமத்துவம் பற்றி நமது அரசியல் சாசனம் அடிப்படை உரிமைகளிலேயே வரையறுத்துள்ளது. அதனால்தான் நமது தேசத்தை எந்த மதத்திற்கும் சார்புடைய ஆட்சி அல்ல என்று நாம் அறிவித்துள்ளோம்.

அப்படி என்றால், சாதி, சமய வேறுபாடுகளைச் சுட்டிக் காண்பிக்குமாறு பள்ளிகளில் மாணவர்களுக்குப் படிப்பு முடிந்த பிறகு தரப்படும் சான்றிதழ்களிலேயே அவற்றைச் சுட்டிக் காண்பித்து வந்தோம்.

இது நமது அரசியல் கோட்பாட்டிற்கு முரண்பட்டது என்று ஒரு பொதுநல வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, உயர்நீதிமன்றம் அந்த வழக்கில் அளித்துள்ள தீர்ப்பு, மிகவும் புரட்சிகரமானது.

ஏனெனில், இந்தியாவில் ஏறக்குறைய 80 கோடி இந்துக்கள், 18 கோடி முஸ்லிம்கள், 4 கோடி சீக்கியர்கள், 3 கோடி கிறிஸ்துவர்கள், 2 கோடி பௌத்தர்கள் இருக்கிறார்கள். இவர்களல்லாமல் இங்குள்ள மக்கள் 6 ஆயிரத்திற்கும் அதிகமான மொழிகளைப் பேசுகிறார்கள். அரசியல் சாசனப்படி அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிகள் 22.

இதேபோல, இந்தியாவிலுள்ள மக்கள் மதத்தால் மட்டும் மாறுபட்டவர்கள் அல்ல. சாதிகளாலும் பிளவு பட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள், முன்னேறிய பிரிவினர் என இந்த மூன்று பிரிவுகளுக்குள் ஆயிரக்கணக்கான சிறு, குறு சாதிகள் உள்ளன.

இவ்வாறு சாதி, மதம், மொழியால் பிரிந்து கிடக்கும் மக்களைக் கல்வி ஒன்றின் மூலம்தான் இந்தியர்கள் என்ற ஒரு சரட்டுக்குள் கோர்க்க முடியும்.

வெளிநாட்டிற்குச் செல்கிற ஒருவரை உனது நாடு எது என்றால் அவர் கேரளா என்று சொன்னால் அவர்களுக்குப் புரியாது. இந்தியா என்றால் கேட்டவனுக்கும் புரியும், சட்டப்படி செல்லும்.

பல காரணங்களுக்காக இவ்வாறு நாம் இந்தியர்களாக இருக்க வேண்டியுள்ளது. உதாரணம், தமிழ்நாடு பாசனப் பற்றாக்குறையுள்ள மாநிலம். விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் இல்லை. இந்த நிலையில் பக்கத்து மாநிலங்களிலிருந்து கடலில் சென்று வீணாகும் மகாநதி, கோதாவரி முதலிய நதிகளை இணைத்துத் தமிழ்நாட்டிற்குத் தரப்படுமானால், தமிழ்நாட்டின் பாசனப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுத் தமிழ்நாடு விவசாயத்துறையில் செழிப்படையும்.

இப்படிப்பட்ட அகில இந்திய அளவில் உள்ள பிரச்சனைகள் பல உள்ளன. இந்தியா பெரிய நாடாக இருப்பதால், பக்கத்திலுள்ள சீனா நம்மை மதிக்கிறது. அவ்வாறில்லாமல், இலங்கையைப் போல பல சிறு நாடுகளாக அல்லது முன்பிருந்த சமஸ்தானங்களாக இருந்திருக்குமேயானால், இங்குள்ள சமஸ்தானங்கள் அமெரிக்காவிற்கோ, சீனாவிற்கோ, பாகிஸ்தானுக்கோ பணிந்து போக வேண்டி இருந்திருக்கும். நமது இறையாண்மையை நாம் இழக்க நேர்ந்திருக்கும்.

நமக்கு பலமே நாம் பெரிய தேசமாக இருப்பது தான். நமது சாதி, மதம், மொழிப் பிரச்சனை களைச் சுமுகப் பேச்சு வார்த்தைகள் மூலம் நாமே தீர்த்துக்கொள்ள முடியும். அதனால், நமது பிள் ளைகள் படித்து வளர்கிற பிராயத்திலேயே அவர் கள் மனத்தில் இந்தியர் என்ற தேசிய உணர்வு ஊட்டப்பட வேண்டும்.

இந்த உணர்வு ஊட்டப்படுவதற்குத் தடை யாக இருப்பது, நமது பள்ளிகள் மாணவர்களுக் குத் தரப்படுகின்ற மாற்றுச் சான்றிதழ்களில் இடம் பெறுகிற சாதியை, மதத்தைப் பற்றிய தகவல்தான். இனிமேல் அவற்றை மாற்றுச் சான்றிதழ்களில் எழுதக் கூடாது என்று தமிழக அரசே உத்தரவிட் டுள்ளது.

மாணவர்கள் அல்லது அவர்களுடைய பெற் றோர், பாதுகாவலர் விருப்பப்பட்டால் மட்டுமே சாதி இல்லை அல்லது சமயம் இல்லை என்று குறிப்பிட்டுச் சான்றிதழைப் பள்ளிகள் வழங்க வேண்டும்.

மாணவர்களோ, அவர்களுடையே பெற்றோரோ சாதி தொடர்பான பத்தியை நிரப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொண்டால், அந்த இடத்தைக் காலியாக விட்டு மாற்றுச் சான்றிதழை வழங்கலாம்."

இவ்வாறு பள்ளிக்கல்வி இயக்குநர் ராமேஸ்வர முருகன் அனைத்து மாவட்ட முதன் மைக் கல்வி அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

மேற்கண்ட அரசு ஆணையை அரசியல் கட்சிகள் தங்களுடைய தலைவர்களின் பிறந்த



அதுமட்டுமல்ல, இட ஒதுக்கீட்டின் பலனைப் பெற மாற்றுச் சான்றிதழில் சாதிக் குறிப்பு இல்லை யென்றால், அந்தச் சாதிச் சான்றிதழை மாவட்ட வருவாய்த்துறை அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட வர்கள் கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

கல்வித்துறை மாற்றுச் சான்றிதழில் (டி.சி.) அதைக் கைவிட வேண்டும் என்பதுதான் அரசு ஆணை.

"வருவாய்த்துறை சார்பில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதால், மாற்றுச் சான்றிதழில் மாணவர் எந்தச் சாதியைச் சார்ந்தவர் என்று குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. மாற்றுச் சான்றிதழில் சாதியின் பெயரைக் குறிப்பிட வேண்டிய இடத்தில் 'வருவாய்த்துறை வழங்கும் சாதிச் சான்றிதழை ஏற்க வும்' என்று மட்டுமே குறிப்பிட வேண்டும்.

நாளைக் கொண்டாடுவதற்கு பிளக்ஸ் போர்டு வைத்து விளம்பரப் படுத்துவதை விடவும், இந்த அரசு ஆணைக்கு ஒவ்வொரு வீதி முனையிலும் அரசியல் கட்சிகள் விளம்பரம் செய்ய வேண்டும். ஆனால், அவ்வாறு கட்சிகள் செய்யவில்லை. அதற்கான மர்மக் காரணம் ஒரு வேளை சாதி களை, மதங்களை அரசியல் கட்சிகள் எதிர்ப் பதற்குத் தயங்குகின்றனவோ என்றே நினைக்க வேண்டியுள்ளது.

சாதி ஒழிப்பில் முனைப்பாக உள்ள சன்மார்க்க சங்கத்தில், தமிழக அரசு ஆணையை வரவேற்றுத் தீர்மானம் நிறைவேற்றி ஊர்வலமாகச் சென்று கொண்டாடி, மக்கள் மத்தியில் பரப்புரை செய்ய சன்மார்க்கிகள் முன்வர வேண்டும்.


– ந.நி.

(பொன் வால் நரி)



ஆங்கிலம்: **சி. சுப்பிரமணிய பாரதி**

தமிழில்: **ஈரோடு வே. ஜீவானந்தம்**



மகாகவி பாரதியாருக்குத் தமிழ்ப் புலமையைப் போல ஆங்கிலப் புலமையும் உண்டு. புதுவையில் அவர் இருந்தபோது ஒரே சமயத்தில் பாஞ்சாலி சபதத்தையும் 'பொன் வால் நரி' எனும் The fox with the Golden Tail என்ற ஆங்கிலப் புனைவையும் எழுதினார்.

பாஞ்சாலி சபதத்தைப் படித்த வாசகர் சிலர் பாரதியாரைப் பாராட்டவில்லை என்பதைவிட, ஆங்கிலப் படைப்பான பொன்வால் நரியைப் பாராட்டிக் கடிதம் எழுதியுள்ளனர்.

இதனைக் கண்டனம் செய்த மகாகவி பாரதிக்கு, பாஞ்சாலி சபதத் தைப் பாராட்டிப் பொன்வால் நரியைப் பாராட்டாமல் விட்டிருந்தாலும் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

இதனை மொழிபெயர்த்துள்ளவர் பாரதி படைப்புகளில் ஆழ்ந்த பயிற்சியும், பசுமை இயக்கவாதியும், காந்திய மார்க்சியவாதியுமான ஈரோடு மருத்துவர் வே. ஜீவானந்தம். அவர்களின் அருமையான மொழிபெயர்ப்பைச் சுவையாக வாசிக்கலாம். சென்னை மேன்மை பதிப்பகத்தின் வெளியீடாக இது வெளிவந்துள்ளது, இந்நூலுக்குக் கிடைத்த பெரிய மேன்மையாகும்.

'பொன் வால் நரி' நீதிக்கதையை மகாகவி பாரதி எந்த நீதியைப் போதிப்பதற்கு எழுதினார் என்பதை வாசகர்கள் படித்துப் புரிந்து கொள்வது சிரமம். ஆங்கிலத்தில் அது இருப்பதனால் மட்டுமல்ல, தமிழில் மொழி பெயர்த்து வாசித்தாலும் அப்படித்தான். காரணம், இந்த நீதிக் கதைக்குள் இழையோடியிருக்கக்கூடிய நீதியை, நியாயத்தை, சத்தியத்தை மேலதிகமாகச் சொன்னால் ஞானத்தைப் புரிந்து அனுபவிப்பதற்குத் ***திருக்குறளுக்குப் பரிமேலழகர் போல, பொன் வால் நரிக்கு ஒரு பெ.சு. மணி உதவினால்தான் புரிந்து கொள்ள முடியும்.***

இப்பொன் வால் நரி பற்றிய தமிழறிஞர் பெ.சு. மணியின் ஆய்வுரை, அடுத்த இதழில் வெளியிடப்பட உள்ளது.

– இ.ஆர்.

முன்னமொரு காலத்திலே நரிகளின் தேசத்திலே ஒரு கிழப்பெண் நரி வாழ்ந்து வந்தது. நரிச்சியின் துடுக்குப் பேச்சும், ஆணவப் போக்கும், பிற நரிகள் இதன்மீது வெறுப்புறச் செய்தன. வெறுப்புற்ற நரிகள் இதன் வாலை வெட்டிவிட்டன; ஒரு தண்டனையாக இருக்கட்டுமென்று.

"என்னருமைச் சோதரரே! என்னை உமது அரசியாக்கினால் என்ன?" என்று வாலி ழந்த பின்னும் கிழநரி கேட்டது. இதுகேட்ட நரி கள் ஓ என ஓலமிட்டுச் சிரித்தன. கேலியும் கிண்டலும்

செய்து கிழ நரியைக் காட்டை விட்டே விரட்டின. வாலிழந்த கிழ நரிச்சி ஜொலிக்கும் பொன் வால் ஒன்றை ஒட்டிக் கொண்டு கழுதை – குரங்கு களின் பழம்பெரும் பூமியில் குடியேறச் சென்றது.

''நீ யார்?'' கழுதைகள் கேட்டன.

''நானே புகழ்மிக்க பொன்வால் பெண் நரி, புத்திசாலிகளான நரிகளின் தேசத்திலேயே அதி புத்திசாலியான நரிச்சி. அவை என்னைத் தங்கள் தேசத்தின் தலைவியாக இருக்கப் பெரிதும் வேண்டின. நானோ அப்பதவியைச் சிறிதும் மதிப்ப தில்லை. ஆனால், கழுதைகளின் மெய்ஞானம் பற்றி மதிப்பும், போற்றுதலும் உண்டு. குறிப்பாக மூத்த கழுதைகள் சம்பந்தமாக. எனது இனத்தின் தலைவியாய் இருப்பதைக் காட்டிலும் தெளிந்த மெய்ஞானக் கழுதைகளின் எளிய பணிவான சீடராய் வாழ்வதே பெருமையென முடிவு செய் தேன். ஓ! வணக்கத்திற்குரிய கழுதைகளே! உங்களின் உன்னத ஞானத்தை எமக்கு அருளு வீர்'' எனக் குழைந்தது.

இதைக் கேட்ட கழுதைகள் யாவும் குறிப் பாகக் கிழக் கழுதைகள் மகிழ்ச்சியில் எக்காள மிட்டன. வீடுகள், சபைகள் எங்கும் இதே பேச்சானது.

''அற்பநரிகள் நம்மைவிடப் புத்திசாலிகளென வேடமிட்டு கர்வத்துடன் நம்மை இழிவு செய்யும் போது, நரிகளிலேயே புத்திசாலியான நரிச்சி நம்மைத் தேர்ந்த ஞானம் பெற்ற விலங்காக இனங் கண்டு, நம்மிடம் பாடம் கற்கவும் வந்துள்ளது. சோதரரே! என்ன சொல்கின்றீர்? நமது நாட்டின் மதியற்ற மந்திகளும், நரிகளுடன் சேர்ந்து நமது பழம்பெரும் கழுதையின் மரபுகளைக் கேலி பேசுகின்றன. இப்போது அக்குறுமதிக் குரங்குகள் என்ன சொல்ல முடியும்? இப்பொன்வால் நரியின் வரவு அவற்றின் நச்சுத் தன்மையுள்ள உளறல் களுக்கு முடிவுகட்டும். நமது சீர்மிகு கழுதை இனப் பண்பாட்டினை விமர்சித்துக் கிண்டல் செய்யும் குரங்குகளின் மதியீனத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும்.''

கழுதைகளின் கணிப்பு சரியானதாகவே இருந்தது. பொன்வால்நரியின் போக்கில் மயங்கிய மந்திகள், ''ஆம், ஞானமிக்க நரி சொல்வது எதுவும் சரியாகவே இருக்கும். மேதாவி நரியே கழுதையினக் கலாச்சாரத்தைப் போற்றிப் புகழ்மாலை சூட்டுமானால், நாம் நமது இனத் தாரை நாமே துச்சமாக மதித்து எள்ளி நகை யாடுவது சரிதானா என்பதைச் சற்று சிந்தித்து மறுபரிசீலனை செய்தல் வேண்டும்'' எனப் பேசத் தொடங்கின.


ஆனால், மாறுபட்ட சிந்தனைப் போக்குள்ள குரங்குகளும் இருந்தன. அவை, ''என்ன முட்டாள் தனம்? நமது பண்டை நாள் பழக்கத்தைக் கேவலம் ஒரு தனி நரி சொன்னதென்பதற்காக எப்படி மாற்றிக் கொள்ள முடியும்? பிற நரிகள் இன்னும் இக்கழுதைகளை மிகக் கேவலமாக நடத்துகையில் நாம் எப்படி மதிப்பது?'' எனச் சிந்திக்கத் தொடங்கின.

பெரும்பான்மை நரிகள் எதைச் சொல கின்றனவோ, அதையே நாம் ஏற்க வேண்டும். நரிகளிடையே கருத்து மோதல் உண்டாகுமாயின் பெரும்பான்மை நரிகளின் முறையும் பற்றிக் கற்றுத் தேர்ந்த கழுதைகளிடமும் முணுமுணுப்பு உருவானது.

நரிச்சி தனது தந்திரங்களைச் சற்று மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது. தனது சீடர்களின் நம்பிக்கையைப் பெறும் புதுவழிகளைச் சிந்திக்கத் தொடங்கியது. நீண்ட காதினத்தின் கிழக் கழுதைகளின் விசுவாசத்தில் அதற்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. நரிச்சி அக்கிழ விசு வாசிகளைத் தமது இனத்தின் பிரதிநிதிகளாக இரு உன்னதக் கழுதைக் குட்டிகளைத் தேர்ந் தெடுத்துத் தரும்படி கேட்டுக் கொண்டது. நரி யினத்தின் மகோன்னதக் கலாச்சாரத்தை அவற் றிற்கு ஊட்டி, தனது தெய்வீக சக்தியால் பொன் வால் கழுதைகளாக்குவேன் என அறிவித்தது.

''பொன்மயமாக்கும் எனது முயற்சிகள் வெற்றி பெற்றவுடன் பிற விலங்குகள் அவற்றை வணக்கத்திற்குரிய தெய்வீகப் பிறவிகள் எனப் போற்றுவதைக் காண்பீர்கள். கழுதையினத்திற்கு இவை மங்காப் புகழ் சேர்க்கும். எங்கும் கண்டு கேட்டும் இராத புதுமைகளை இவை நிகழ்த்தக் காண்பீர்கள்'' என முழங்கியது.

நீண்ட காதினத்தின் மங்காப் புகழுக்கு நம்பிக்கையூட்டும் நரிச்சியின் உணர்ச்சிப்பூர்வ மான அறிவிப்பு கழுதைகளுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியைத் தந்தது. இரு குட்டிகளை நரியின் பொறுப்பில் வளர்க்க ஒப்படைப்பதென முடிவு செய்தன.



நரிச்சி முதலாவதாகக் குட்டிகளின் வாலை ஒட்ட வெட்டியது. நமக்கு நேரும் இழிவுகளை உணரும் தன்மையும் அற்ற தமது சீடர்களிடமிருந்து மறைத்து குட்டிகளுக்கு இரும்புக் கவசமும் அணிவித்தது. குட்டிகளை எப்போதும் வீட்டின் சிறு அறைக்குள் அடைந்து கிடக்கும்படி செய்தது. யாராவது அவற்றைப் பார்க்க வரும்போது வால் தெரியாதிருக்கும்படி அவற்றின் பக்கம் மறைந்து இருக்கும்படி செய்தது.

குட்டிகளின் வால் சிறிதாக மாறி வருவதாகவும், அது முழுமையாகப் பொன்மயமானவுடன் உலகத்தோர் காண அனுமதிக்கப்படுமெனவும் அறிவித்தது.

விசுவாசமும், பக்தியும் மிக்க கழுதைகள் – மகோன்னதநிலை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் குட்டிகளுக்குத் தினமும் வழிபாடு நடத்த அனுமதி வழங்கியது. இவ்வதிசயிக்கத்தக்க நடைமுறைகள் கழுதை நாட்டில் மாபெரும் பரபரப்பை உண்டாக்கின.

சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று, கழுதையினம் முழுவதையும் மகோன்னதமான ஆன்மீகச் சிகரத்திற்கே கொண்டு செல்லும் பொன்வால் கழுதைகள் பிரசன்னமாகப் போகும் பொன்நாளை ஆவலுடன் கிழக் கழுதைகள் எதிர்நோக்கியிருந்தன.

ஆனால், மற்றவர்களைக் காட்டிலும் குட்டிகளுடன் பழகும் வாய்ப்புப் பெற்ற தந்தைக்கு மட்டும் அவற்றின் உண்மை நிலையின் ரகசியம் தெரிய வந்தது. தனது குட்டிகள் சகிக்க முடியாத இழிநிலைக்குத் தள்ளப்பட்டு, வாலிழந்து நிற்கும் நிலைகண்டு வெதும்பிக் கொதித்தது. பொன் நரியிடம் தனது எதிர்ப்பைத் தெரிவித்துக் குட்டிகளைத் தன்னிடமே ஒப்புவிக்கும்படி வேண்டியது.

குருபீடத் தலைவிக்கும், அதன் துதிபாடிகளான கழுதையின மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்களுக்கும், தமது இந்த ஏமாற்று வித்தை முழுவதும் வெளிபட்டுத் தீராத அவமானத்தை உண்டாக்கி விடுமோ என்ற அச்சம் கவ்வியது. அறிந்தே நரிச்சியின் இந்த ஏமாற்றில் பங்காளியாகிவிட்ட தலைமைக் கழுதை, பொன்நரியின் சார்பாகக் குட்டிகளின் தந்தையை அழைத்து அச்சத்தைத் தவிர்க்குமாறு சமாதானம் சொன்னது. மேலும் குட்டிகளை விரைவில் நரிகளின் தேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு மகத்தான நரியின் நாகரீகம் அவற்றிற்குப் பயிற்றுவிக்கப்படும் என்றும் தந்தையின் உணர்வுகளைப் பாதிக்கும் எதுவும் நடவாதபடி பார்த்துக் கொள்வதாகவும் உறுதி கூறியது.



இவ்வுறுதிமொழி குட்டிகளையும், தந்தையையும் திருப்தி செய்தது. இதற்குள் கழுதை குரங்குகளின் தேசத்தின் மூலைமுடுக்கெங்கும் இதுபற்றி வந்ததிகள் காட்டுத் தீயெனப் பரவின.

குரங்குகள் கழுதைகளைப் பார்த்துக் கிண்டலும், கேலியும் பொழிந்து தள்ளின. "ஓ! நீங்கள் பொன் கழுதைகளை இனி உற்பத்தி செய்யப் போகிறீர்கள். அப்படித்தானே! அந்தப் பொன்நரி உங்கள் குட்டிகளை மகோன்னதக் கழுதைகளாக்கப் போகின்றன. உன்னதமான மகோன்னதமான கழுதைகள்! ஆம் வாலிழந்த பின்னும்" எனக் கூவிச் சிரித்தன.

நரிகளின் தேசத்தில் குட்டிகளின் நீண்ட காதுகளும் வெட்டப்பட்ட செய்தி தந்தைக்குத் தெரிந்தது. பொன்நரியின் உத்தரவினால் கழுதையினத்திற்கு மட்டுமல்லாமல், வேறு எந்த இழிந்த விலங்குகளுக்கும் இழைக்கப்பட முடியாத சொல்லுங்கடங்காத இழிவுகள் தம் குட்டிகளுக்கு இழைக்கப்படுவதை அறிந்து மனம் நொந்தது.

"ஓ! அத்தலைமைக் கழுதையால் நாம் எவ்வாறு ஏய்க்கப்பட்டுவிட்டோம்! என்ன அவமானம்! கழுதைகள், ஆனால் வாலில்லை! கழுதைகள், ஆனால் நீண்ட காதுகளில்லை! ஏன், அந்த நரிச்சியையும், சதிகாரக் கிழக் கழுதையையும் நம்பி மோசம் போனேன்! என்னருமைச் செல்வங்களே, அக்கொடியோர் உங்களின் அழகிய வெள்ளி மூக்கையும் கூட வெட்டிப் போடலாம். என் செல்வங்களே! என்னைவிட்டு எத்தனை தூரம், எத்தனை காடுகளுக்கும், கடல்களுக்கும் அப்பால் கடத்திச் செல்லப்பட்டு விட்டீர்கள்!" எனக் கூறிப் புலம்பியது.

பொன்நரி தனது குட்டிகளைத் தன்னிடம் ஒப்படைக்கும் வாய்ப்பு எதுவும் இல்லை என்பதையும் தனது தோழர்களும் ஒருவரும் இயலாமையாலோ, விருப்பமின்மையாலோ தனக்கு உதவும் நிலையில் இல்லை என்பதையும் உணர்ந்து ஓலமிட்டது.

ஒரு காலத்தில் தேசமெங்கும் நிறைந்திருந்த வீரமிகு காளையினத்தின் வழித்தோன்றலான பரந்த மனமும், விரிந்த ஞானமும் கொண்ட காளையார் ஒருவரிடம் ஆலோசனை பெறச் சென்றது தகப்பன் கழுதை.

பொன் நரியின் இனத்தைச் சார்ந்த நெருங்கிய கூட்டாளி மீது அதற்கு எல்லையற்ற கோபம். தனது குட்டிகளுக்கு வெளியே சொல்லி அழவும் முடியாத அவமானங்களை இழைத்த பொன்நரியை எண்ணிக் குமுறிக் கொண்டிருந்தது. ஒருமுறை தகப்பன் கழுதை பொன்நரியிடம் தனது குட்டிகளை அவளுடைய கூட்டாளியின் தகாத உறவில் இருந்து பிரித்துத் தன்னிடம் ஒப்படைக்கும்படி வேண்டியது நரிச்சி. அதன் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காததுடன் 'கழுதையுலகிலேயே வடிகட்டின முட்டாள் கழுதை' எனத் திட்டி அவமானப்படுத்தி விரட்டியது.

காளையார் யாவற்றையும் கவனமுடன் கேட்டார். நீதி கேட்டு வழக்கு மன்றம் செல்ல அறிவுரை கூறினார். மேலும் ஓர் உன்னதமான விலங்கிடமிருந்து பேதைக் கழுதைக்கு எவ்வித உதவிகள் தேவையோ அவற்றையெல்லாம் செய்வதாய் உறுதி கூறினார்.

அவ்விதமே கழுதை நீதிமன்றத்தில் தனது குட்டிகளைப் பொன்நரி உடனடியாகத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டிக் கோரியது. நீதிமன்றம் தன்னைத் தனது குட்டிகளைக் காக்கும் யோக்கியதையற்ற கழுதையெனக் கருதுமாயின், நம்பிக்கைக்குரிய தக்க நபரிடம் குட்டிகளை ஒப்படைக்க உத்தரவிடும்படி வேண்டியது.

கழுதையின் துணிச்சலான முன்னுதாரணம் கழுதையினத்தாரிடையே நரிச்சியின் போக்கிற்கும் நடிப்பிற்கும் எதிரான கண்டனத்தைப் பிரகடனப்படுத்தியது. கழுதை இனத்தின் ஒத்துழையாமையுடன், பழிவாங்கும் உணர்வும் அலை அலையாகத் திரண்டன. தலைமைக் கழுதையும் அதனுடன் சேர்ந்த சில கழுதைகளும் மட்டும் இவ்வெழுச்சியினின்று ஒதுங்கி நின்று பொன்நரிக்குத் தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டன.

நீதிபதி குட்டிகளைத் தகப்பன் கழுதையிடம்

நரிச்சி ஒப்படைக்க வேண்டுமென உத்தரவிட்டார். பொன்நரி தனது நாட்டிற்கு ஒரு குட்டிப் பயணம் புறப்பட்டது. திரும்ப வரும்போது குட்டிகளை அழைத்து வருமெனக் கழுதைகள் ஆவலுடன் காத்திருந்தது, பொய்யானது.

ஆனால் இம்முறை நரிச்சி தனது பொன் வாலும் இன்றித் தனித்தே வந்தது. தனது பழைய போலிப் பணிவான தோற்றத்தையும், நல்ல குணங்களையும் விட்டு, வெளிப்படையாகவே மனித நீதிகளையும், தேவ வாக்குகளையும் மீறி நடக்கத் தொடங்கியது. அந்நாளில் தனது வாலை இழக்கக் காரணமான பழைய நடந்தைகள் மீண்டும் அதனிடம் குடியேறத் தொடங்கின.

ஒரு காலத்தில் உன்னத ஞானம் செறிந்த, நேசிக்கத்தக்க இனம் எனப் போற்றிய கழுதை யினத்தை மிகக் கேவலமான வார்த்தைகளால் தூற்றத் தொடங்கியது. இப்போது குரங்கினத் தைக் கவர அவை உலகின் மிகவும் நேசிக்கத் தக்க இனமெனப் புகழத் தொடங்கியது. மந்தியி னத்தின் மனம் கவரும் பல தலைப்புகளில் சொற் பொழிவுகள் ஆற்றத் தொடங்கியது.

1. நரிகளைத் தவிர்த்து அனைத்து வால் உள்ள மிருகங்களைக் காட்டிலும் வாலற்ற மிருகங் களின் மேன்மை.
2. நரியினத்திலும் வாலில்லா நரிகளின் உயர்வு.
3. நரிகளின் நாட்டிற்குக் கழுதை – குரங்குகள் இனத்தின் புனிதப் பயணத்தின் முக்கியத் துவம்.
4. கழுதைகள் – கடைகெட்ட விலங்குகள். (நீண்ட காது வெள்ளி மூக்கு இனத்திற்கு ஒப்பாரி).
5. கழுதைகளைக் குரங்குகளாக்குவது எப்படி?
6. குரங்குகளை நரிகளாக்குவது எப்படி?

இப்படிப் பல தலைப்புகளில் முழங்கியது.

நரிச்சியின் இச்சாகசங்களில் மயங்கும் நிலையில் மந்திகள் இல்லை. முன்னம் இப் பெண்நரி தம்மை மிகக் கேவலமான கேலி பேசி யது அவற்றின் மனதில் பசுமையாகவே இருந்தது. ஆகவே அவை நரியை ஏளனம் செய்து விரட்டின.

மீண்டும் கழுதைகளின் நம்பிகையினைப் பெறும் இறுதி முயற்சியினை முழு முயற்சியுடன் மேற்கொண்டது. கழுதைகளின் முட்டாள் தனத்திற்கும், ஏமாளித்தனத் திற்கும் ஓர் எல்லை உண்டல்லவா? அவையும் நரிச்சியை நோக்கி எக்காள மிட்டுக் கேலி செய் தன.



நீதிமன்றம் குட்டி களைக் கழுதைகள் தேசத்திற்குக் கொண்டு வந்து தந்தையிடம் ஒப்படைக்கும்படி நரிச்சியை நெருக்கியது. சட்டத்தின் கட்டளையை நிறை வேற்ற முடியாத அளவிற்குக் கோரமாக நரிச்சி குட்டிகளை உருக்குலைத்து வைத்திருந்தது.

ஒருநாள் கழுதைகளின் தேசத்துச் சட்டங்கள் எதுவும் செல்லுபடியாகாத எறும்புகள், தேனீக்களின் குடியரசிற்கு நரிச்சி ரகசியமாக ஓடிப் போனது.

எறும்புகள் – தேனீக்கள் தமது குடியரசின் தலைமைப் பீடத்திற்கு ஒரு வாலற்ற கிழ நரிச்சியைத் தேர்ந்தெடுக்கும் புனித நாளில் அவற்றின் தேசம் ஓர் உன்னத சொர்க்கமாகத் திகழும் எனவும் போதிக்கத் தொடங்கியுள்ளதா கவும் அறிகிறோம்.

அங்கே ''நரி–தேனீ–எறும்பிசம்'' எனும் புதிய மார்க்கத்தை அது உருவாக்கி உள்ளதாகக் கூறப் படுகிறது.

●

இசை ஞானசம்பந்தர்!

சைவக்குரவர் நால்வரில் மிக அதிகமான இசையுடன் கூடிய பனுவல்களைப் பாடியவர் ஞானசம்பந்தரே! 'நட்டப் பாடை', 'தக்கராகம்' என்று அவற்றின் பெயர்கள் இருப்பினும் இன்று வழக்கிலிருக்கும் கர்நாடக சங்கீத ராகங்களை அவை ஒத் துள்ளன. மொத்தம் 22 பண் களில் மூன்று திருமுறைகள் பாடி யவர் ஞானசம்பந்தர்.

*– **நெ. இராமன்,** சென்னை*

அட்டைப்பட விளக்கம்

ஒடிசா அருள்மிகு லிங்கராஜா கோவில்



ஒடிசாவில் புவனேஸ்வரில் உள்ள லிங்கராஜா கோவில் ஒரு சிவாலயமாகும். புவனேஸ்வரத்தின் அடையாளமாகத் திகழ்வது இந்தக் கோவில். பக்தர்கள் ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் இந்தக் கோவிலுக்கு வருகிறார்கள். அனைத்து இந்துக்களும் வருகிறார்கள். கோவில்களின் நகரம் எனப் புகழ்பெற்றது புவனேஸ்வரம். ஆயிரக்கணக்கான கோவில்கள் புவனேஸ்வரத்தில் உள்ளன.

லிங்கராஜா கோவிலின் மத்தியக் கோபுரம் 180 அடி உயரமாகும். இந்தக் கோவிலின் கட்டடக் கலை கலிங்கக் கட்டடக்கலையாகும். இந்தக் கோவில் கோபுரம், நான்கு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. கோவில் விமானத்தின்கீழ் கருவறை உள்ளது. அடுத்த பகுதி பக்தர்கள் கூடுகிற மண்டபம். அதற்கு அடுத்த பகுதி பண்டிகை மண்டபம். அதற்கடுத்து பூசை மண்டபம்.

ஒவ்வொரு மண்டபமும் அவர்களுக்கு முந்தைய அரசர்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோவிலுக்குள் 50 சன்னதிகள் உள்ளன. லிங்கராஜா எனப்படும் கடவுள் ஒரு மாமரத்தின் கீழ் இருந்ததாக 13–ஆம் நூற்றாண்டு சமஸ்கிருத சாஸ்திரங்கள் சொல்கின்றன.

இங்குள்ள சிவன், ஹரிஹரன் என்று வழங்கப்படுகிறார். இந்தச் சிவன் விஷ்ணுவும் சிவனும் கலந்த சிவன். அதனால்தான் இந்தச் சிவனை ஜகந்நாதன் என்கிறோம். இதன் அடையாளமாகத்தான் பூரி ஜெகந்நாதர் கோவில் 12–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

இக்கோவிலுக்கு தினசரி 6 ஆயிரம் பக்தர்கள் வருகிறார்கள். பண்டிகைக் காலங்களில் லட்சக்கணக்கானவர்கள் வருகிறார்கள். லிங்கராஜா கோவில் உற்சவங்களில் சிவராத்திரி பிரசித்தமானது. 2012–ஆம் ஆண்டு சிவராத்திரிக்கு இரண்டு லட்சம் பக்தர்கள் வந்ததாகப் பதிவு உள்ளது.

இந்து மதத்தினரல்லாதவர்கள் இக்கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனாலும், சுற்றுச் சுவருக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மேடையிலிருந்து கோவி லின் உள்பகுதி முழுவதையும் பார்க்க முடியும். இந்த ஏற்பாடு வைஸ்ராயாகப் பதவி வகித்த கர்சன் பிரபு இந்தக் கோவிலைப் பார்வையிட விரும்பியதாலும், அவர் இந்து மதத்தினர் அல்லாத வராக இருந்ததாலும் இந்த மேடை கட்டப்பட்டது.

லிங்கராஜா என்றால் லிங்க அரசன். சிவன் தான் லிங்கம். ஆரம்பத்தில் சிவன் கீர்த்திவாசன் என வழிபடப்பட்டார். அதன் பிறகு ஹரிஹரன் என வணங்கப்பட்டார். அதனால் இவரை திரிபுவனேஸ்வரர் என்று அழைக்கப்பட்டார். இதன் அர்த்தம், மூன்று உலகங்களின் எஜமான் என்பதாகும். அவை சொர்க்கம், பூமி, சொர்க்கமும் பூமியுமல்லாத பிரதேசம்.

புவனேஸ்வரிதான் இங்குள்ள தாய்த் தெய்வம். இந்தக் கோவிலைப் பற்றி வரலாற்றறிஞர் ஜேம்ஸ் பெர்கூசன் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது, இந்துக் கோவில்களிலெல்லாம் மிகச் சிறந்த கோவில் இது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கோவிலின் சுற்றுச் சுவரின் நீளம் 560 அடி. அகலம் ஏழரை அடி.


போக மண்டபம் என்ற ஒன்று இக்கோவிலில் உள்ளது. இங்கே சமைக்கப்பட்ட சாதம், காய்கறிகள், இனிப்புகள் அனைத்தும் சிவனுக்குப் படைக்கப்படுகின்றன. பின்னர் அவை மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. எல்லாக் கோவில்களிலும் சாதப் பிரசாதம்தான் அதிகமாகச் சட்டிகளில் வைத்து ஊர் மக்களுக்குத் தருகிறார்கள். ஊர் மக்கள் வீடுகளில் சமைக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்குக் கோவில் பிரசாதமே போதும் என்கிற அளவில் இந்தச் சாதம் விற்பனையாகிறது.

– ந.நி.

விவாதம்

மும்மொழிக் கல்விக் கொள்கை

மத்திய அரசின் கல்வி அமைச்சர் மும்மொழிக் கொள்கையை இந்தி இல்லாதவாறும் அறிவித்துவிட்டார்.


கஸ்தூரி ரங்கன்

இந்தியா போன்ற பல மொழிகள் பேசும் தேசத்திற்கு மத்திய அரசின் தொடர்பு (Link) மொழியாக ஏதாவது ஓர் இந்திய மொழியைத் தேர்வு செய்யத்தான் வேண்டும். அதில் தார்மீகமும் நியாயமும் இருப்பது அவசியம்.

இந்தியா என்ற தேசமே பிரிட்டிஷ் ஆட்சியில்தான் உருவானது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பிருந்த இந்தியா, 543 சமஸ்தானங்களாகவே இருந்தன. பூகோள ஆசிரியர்கள் இந்தியாவை உபகண்டம் (Sub Continental) என்றே கூறியுள்ளனர்.

இவற்றை இணைத்துத்தான் இந்தியா ஒரு தேசமாக உருவாக்கப்பட்டது. கேதார்நாத் முதல் ராமேஸ்வரம் வரை யாத்திரை போகும் 5 ஆயிரம் ஆண்டுப் பழமையான பாரதம், சுவாமி விவேகானந்தர் கண்ட ஆன்மிக இந்தியா. அது 200 ஆண்டு அரசியல் இந்தியாவுக்கு மிக மிக முந்தியது.

மகா ராஜாக்களின் ஆட்சிகளில் மக்களிடம் இருந்தது ராஜபக்தி. இந்தியா தேசமாகிய பிறகு உருவாகியது தேச பக்தி.


பிரதமர் நரேந்திர மோடி

இப்போது நம் முன்புள்ள முதல் கேள்வி, அரசியல் இந்தியா என்ற இப்புதிய தேசத்தை நாம் ஒப்புக் கொள்கிறோமா, இல்லையா? என்பது தான்.

இந்தியாவை ஒரு தேசமாக ஒப்புக் கொள்ளவில்லையென்றால், அதைப்பற்றி விவாதிக்கவே தேவை இல்லை. பிரிட்டிஷை எதிர்த்துப் போராடியது போல இந்தியாவை எதிர்த்துப் போராடித் தனி நாடு கேட்பவர்கள் கேட்கலாம்.

இந்தியாவை ஒரு தேசமாக ஒப்புக் கொள்வோமானால், இந்தியா என்பது ஜப்பான் போல ஒரு மொழி பேசுகிற தேசம் அல்ல, பல மொழிகளைப் பேசினாலும் தேசம் ஒன்றே என்கிற புரிதல் அவசியம். அரசியல் சாசனத்திலேயே 22 மொழிகளை இனங்கண்டு, தேசிய மொழிகளாக அவற்றை அரசியல் சட்டத்திலேயே பதிவும் செய்துள்ளோம்.

இந்நிலையில், ஓர் இந்தியன் 22 மொழிகளையும் படிக்கக் கடமைப்பட்டவன் என்றாலும் தவறில்லை. ஆனால் அது சாத்தியமில்லை என்பதால்தான், குறைந்த பட்சம் மூன்று மொழிகளையாவது கற்பது நியாயமானது. மூன்று மொழிகளில் கட்டாயமாகப் படிக்க வேண்டியது தாய் மொழி. அடுத்த கட்டாயம் உலகத் தொடர்பிற்கான ஆங்கிலம். மூன்றாவது, இந்திய ஒருமைப் பாட்டுக்கான ஓர் இந்திய மொழி.

மத்திய அரசின் திருத்தப்பட்ட கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கையில் இப்படித்தான் சொல்லப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்குள் இந்தி மொழி மூன்றாம் மொழி என்ற முக்காடு போட்டு ரகசியமாகப் புகுத்தப்படுகிறது என்பவர்கள், இந்தியா ஒரு தேசமாக உருவாகி விடுமானால், தமிழுக்கு ஆபத்து எனப் பீதி அடைகிறார்கள்.

தமிழ்நாட்டில் மொழிக்கலவரம் ஏற்பட்டது 1965–இல். அதற்கான அரசியல் ஆதாயத்தை 1967 தேர்தலில் அறுவடை செய்தது தி.மு.க. காங்கிரசு ஆட்சி கை மாறியது. 1967 தேர்தலில் முதலமைச்சரான அண்ணா, தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை உருவாக்கினார்.

உண்மையைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் தமிழ்நாட்டின் வரலாற்றுப் பக்கங்களை ஊன்றிப் படித்துச் சிந்திப்போமானால், 1967–இல் தமிழ்நாட்டில் கடுமையான அரிசிப்பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் துன்பத்துக்கு ஆளானார்கள் என்பதை மறுக்க முடியாது. அப்போது அண்ணா அவர்கள், 'தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், 1 ரூபாய்க்கு 3 படி லட்சியம், 1 படி நிச்சயம்' என்று பாமர மக்களைக் கவருமாறு பேசினார். மேலும், இதனை நிறைவேற்றவில்லை என்றால், முச்சந்தியில் வைத்துச் சவுக்கால் அடிக்கலாம் எனவும் சொன்னார்.

அரிசிப் பஞ்சத்தைப் பயன்படுத்தியே தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. **1965–இல் தி.மு.க. இந்தியை எதிர்த்துக் களத்தில் போராடவில்லை. தூண்டிவிடப்பட்ட மாணவர்கள்தான் போராடினார்கள். இந்திப் பிரச்சனையால்தான் தி.மு.க. 1967–இல் ஆட்சிக்கு வந்தது எனக் கூறுவது வரலாற்றுப் பிழையாகும்.**

1967 முதல் 2019 வரை கடந்த 53 ஆண்டுகளில் அண்ணாவின் இருமொழிக் கொள்கை 4 ஆயிரம் அரசுப் பள்ளிகளிலும், 3500 அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் இலவசமாகக் கற்பிக்கப்பட்டது. தாய்மொழித் தமிழை விரும்பிப் படிக்கும் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் குறைந்துவிட்டனர். ஆங்கில வழிக் கல்வி தருகிற மெட்ரிக் மற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைக் கட்டணம் செலுத்திப் படிக்க வைப்பதுதான் பெற்றோர்களின் விருப்பமாகியது.

ஆண்டுதோறும் மாணவர் எண்ணிக்கை அரசு ஆரம்பப்பள்ளிகளில் சரிந்து கொண்டே வந்து விட்டதால், 1150 ஆரம்பப் பள்ளிகள் சென்ற ஆண்டு மூடப்படும் நிலைமை ஏற்பட்டது எல்லோருக்கும் தெரியும்.

இந்தியைத் தவிர்த்த இருமொழிக் கொள்கை தமிழுக்கு முக்கியத்துவம் தராமல், ஆங்கிலத்திற்கு ஆதரவாக அமைந்துவிட்டது. அதனால், சென்ற அரை நூற்றாண்டுக் காலத்தில் தமிழையும் சரிவரக் கற்காமல் ஆங்கிலத்தையும் சரிவரக் கற்காத தலைமுறை உருவாகி விட்டது.

முதல் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை தாய்மொழியில் மட்டும்தான் பாடம் கற்பிக்கப்படும். 6 முதல் 10–ஆம் வகுப்பு வரைதான் மூன்றாம் மொழி கட்டாயம் என்பதே மத்தியக் கல்விக் கொள்கை.

இந்தியா என்கிற தேசத்தில் தமிழ்நாடு ஒரு மாநிலமாக இருப்பதால்தான் கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தியாகும் காவிரியில் நமது பாத்தியதையை நிலைநாட்டினோம். மத்திய அரசின் உத்தரவின்படி நமது பங்குக்கான பாசன நீரைக் கேட்க முடிந்தது. இதேபோல முல்லைப்பெரியாறு அணையிலும் உரிமையைக் கோரிப் பெற்றோம். பாலாற்றில் ஆந்திரா தடுப்பணை கட்டுவதைத் தடுக்க மத்திய அரசை நாடுகிறோம், நம்புகிறோம்.

இந்தியா என்ற இக்கட்டமைப்பில் தமிழ்நாடு மாநிலமும் உள்ளதால், நமக்குப் பல ஆதாயங்களும் உண்டு. சில

சேதங்களும் இருக்கத்தான் செய்யும். இந்தியாவில் மூட்டை தூக்கும் தொழிலாளி முதல், கல்லூரிப் பேராசிரியர் வரை எல்லோரும் ஒரே மொழியில் உறவாடுபவர்கள் இல்லை.

உ.பி.யில் 16 கோடிப் பேருக்கும் ம.பி.யில் 7 கோடிப்பேருக்கும் இந்தி தெரியும். டில்லியில் 2 கோடிப்பேர், ராஜஸ்தானில் 6 கோடிப்பேர், பீகாரில் 7 கோடிப்பேர் இந்தி தெரிந்தவர்கள். இப்படிக் கூட்டிப் பார்த்தால், நமது ஜனத்தொகை 130 கோடியில், ஏறக்குறைய 60 கோடிப் பேருக்கு இந்தி மொழி ஏற்கனவே தெரியும். ஆங்கிலம் தான் அநேகருக்குத் தெரியாது.

50 ஆண்டுகளுக்கு முன்பு 1965–களிலேயே மும்மொழிக் கொள்கையை மத்திய அரசு தென் இந்திய 3 மாநிலங்களிலும் அமல் படுத்தியது. அதனால் கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா முதலிய தென் மாநிலங்களிலும், இந்தி பேசாத ஒடியா, வங்காளம், முதலிய வட மாநிலங்களிலும் 40 கோடிப் பேருக்கு இந்தி தெரியும்.

ஆனால், தமிழ்நாட்டின் வரலாறு சற்று வித்தியாசமானது. இங்கே இருந்த நீதிக்கட்சி காங்கிரசிற்கு எதிரியாக இருந்தது. காங்கிரஸ் கட்சிதான் தேசிய விடுதலை இயக்கமாகப் போராடி வந்த கட்சி. நீதிக்கட்சியோ, ஆங்கிலேய ஆட்சிக்கு ஆதரவாக இருந்த கட்சி.


இந்தப் பின்புலத்தில் தான் தமிழ்நாட்டில் அரசியலாக்கப்பட்ட இந்தி எதிர்ப்பை இன்னும் தொடர வேண்டுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

நமது மாநில இருமொழிக் கொள்கையை ஒரு நிபந்தனையுடன் மும்மொழிக் கொள்கையாக்கி உள்ளதை வரவேற்கலாம், வழிமொழியலாம்.

இந்தி மொழியைக் கட்டாயமாகப் படிக்காமல், விரும்பினால் படிக்கலாம். விரும்பாவிட்டால், ஏதேனும் ஓர் இந்திய மொழியைப் படிக்கலாம். ஆனால், மூன்று மொழிகளாவது படிப்பது அவசியம்.

மும்மொழித் திட்டம் வேண்டுமா? வேண்டாமா? என்பதே நம் முன்புள்ள இரண்டாவது கேள்வி. வேண்டாமென்றால், ஆங்கிலத்தின்மீதுதான் அதிகம் கவனம் செலுத்தப்படும். தாய்மொழித் தமிழ் தவிர்க்கப்படுவது தொடரும். மும்மொழிகளைக் கற்பிக்கும் கர்நாடகா, கேரளா, ஆந்திராவில் கன்னடத்தையோ, மலையாளத்தையோ, தெலுங்கையோ தவிர்க்கவே முடியாது.

பேச்சு என்பது மொழி மூலமாகவே நிகழ்கிறது. மனிதன் ஆதியில் சப்தங்களைத்தான் செய்திருக்க முடியும். சப்தங்களுக்குப் பிறகு சமிக்ஞைகளைச் செய்திருக்க வேண்டும். ‘ஆ’, ‘ஊ’ என்ற ஓசைகளை எழுப்பிய ஆதி மனிதனின் அந்த ஒலி அடையாளம்தான் துயரத்திலோ, ஆனந்தத்திலோ ஆ, ஊ என்கிற இன்றைய நவீன மனிதனிடமும் உள்ளது.





அப்படியானால், ஒலி எனப்படும் குரல் அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கையால் வழங்கப்பட்டுள்ளது. உடல் அமைப்பில் தொண்டையிலிருந்துதான் குரல் தொடங்குகிறது. தொண்டைக்குள் குரல் வளை என்கிற உறுப்புத்தான் ஒலியை எழுப்புவதற்கு உதவுகிறது. மற்ற ஜீவராசிகளின் குரல் வளை உறுப்பு நமக்குப் போலப் பரிணாம வளர்ச்சி பெறவில்லை.

ஆனால், மனிதனின் குரல்வளை, மனிதனின் தொடர் முயற்சியால், வித விதமான ஒலிகளை உற்பத்தி செய்யும் வினோதத்தைப் பெற்றுவிட்டது என்கிறார் மொழியியல் அறிஞர் நோவாம் சாம்ஸ்கி.

ஒலிதான் மொழியாகப் பரிணாமம் பெற்று நமது பயன்பாட்டுக்குக் கிடைத்துள்ளது. மனிதனுக்கு உயிருக்குச் சமமானது அவனுடைய பேச்சுதான். மரணம் சமீபித்துவிட்ட மனிதனுக்கு முதலில் பேச்சுதான் நின்றுவிடுகிறது. மரணம் சம்பவித்துவிட்டால் மூச்சு நின்றுவிடுகிறது.

மனிதனின் மூளைப் பகுதியில் உள்ள மேடு பள்ளங்களில்தான் சிந்தனைகள் சுரக்கின்றன. சிந்தனைகள் வெறுமனே உருவாவதில்லை. சொற்களாகவே அவை எண்ணப்படுகின்றன. அதனால், மொழியில்லாமல் சிந்திப்பது சாத்தியமாகாது.

சிந்திப்பது நியூட்டனுக்கு மட்டுமல்ல, நமது அன்றாடப் பணிகளுக்கும் அவசியமாகிறது. சிந்திப்பு இல்லாமல் நாம் செயல்பட முடியாது. சிந்தனைகளை நினைவுகளாகச் சேமிக்கிறோம். இவை அனைத்தும் நமது மூளைக்குள் சொல்வெட்டுக்களாக இடம் பெறுகின்றன.

ஒரு பகுதியில் உள்ள மக்களின் மொழி வேறு பகுதி மக்களின் மொழியோடு ஒத்துப்போக வேண்டிய அவசியமில்லை. உலகில் 6 ஆயிரத்திற்கும் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றில் 3 ஆயிரத்திற்கும் அதிகமான மொழிகளுக்கு எழுத்து வடிவமே இல்லை.

மொழி என்பது மனித வசிப்பிடங்களில் அவர்களின் உணவுக்குச் சமமானதாக உள்ளது. உணவு உண்ணாமல்கூடச் சில நாட்கள் இருக்க முடியும். ஆனால், பேச்சு இல்லாமல் ஒரு நாள்கூட ஒருவரால் இருக்க முடியாது.

பனிப் பிரதேசத்தில் வாழ்கிற எஸ்கிமோக்களுக்கும் பேச்சு மொழி தேவை. இருண்ட கண்டமென இனங்காணப்பட்ட ஆப்பிரிக்கக் கருப்பர்களுக்கும் பேச்சு மொழி உள்ளது.

தாய்ப்பால் அருந்துகிற பருவத்திலிருந்து குழந்தைக்கு மொழிதான் கற்பிக்கப்படுகிறது. மூளையின் தனிச்சிறப்பே அதற்குத் தேய்மானமே இல்லை என்பதுதான். முடி உதிரலாம். மூட்டு எலும்புகள் தேயலாம். பார்வை மங்கலாம். ஆனால் மூளையின் ஆரோக்கியத்திற்கு ஓயாது சிந்திப்பது அவசியம்.


மூளையின் சிந்திப்புத்தான் நரம்பு மண்டலத்தைத் தூண்டிவிட்டு அதிலுள்ள திசுக்கள் வேகமாக வளர்வதற்கு உதவுகிறது. 3 முதல் 8 வயதுக்குள் குழந்தைப் பருவத்திலேயே 85 சத மூளை வளர்ச்சி ஏற்பட்டுவிடுகிறது. குழந்தைகளுக்கு அப்பருவத்தில் எத்தனை மொழிகளைக் கற்பித்தாலும் மூளை அவற்றை உரம் போல உறிஞ்சிக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்கும் என்கிறார்கள் குழந்தை மருத்துவ விஞ்ஞானிகள்.

குழந்தைகளைப் பற்றியும் மூளையின் திறன் பற்றியும் இத்தகைய புரிதல் இல்லாதவர்கள், மொழி கற்றலை நமது சிசுக்களை ஏதோ பூதத்திடம் ஒப்படைப்பதாகப் பீதியடைகிறார்கள்.

குழந்தைகளை வகுப்பறையில் வரிசையாக அமர வைத்து, ஆசிரியர் அவர்களுக்குக் கற்பிக்கப் பழைய முறைக்கு மாற்றாகப் புதுமுறைக்கல்வி வந்துவிட்டது. பாரதி சொன்னது போல, “ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா” என விளையாட்டுப் பள்ளிகள்தான் பாப்பாக்களுக்கு இப்போது தேவை. அங்கே நடக்கும் கற்றல் ஒருவித சந்தோஷமான அனுபவமாக அமையும் என்கிறார் விஞ்ஞானி கஸ்தூரி ரங்கன். பின்லாந்தில் 7 வயதில்தான் வகுப்பறைக் கல்வியே தொடங்குகிறது.

இந்தியாவில் ஏனைய மாநிலங்களில்

இல்லாமல், தமிழ்நாட்டில் மட்டும் மும்மொழிக் கொள்கையைக் கல்வியாளர்களைவிட, அரசியல்வாதிகளே விடாமல் விவாதிக்கிறார்கள். ஏதோ டில்லியில் ஏகாதிபத்திய ஆட்சி இருப்பது போலவும், அது தமிழர்களைக் கொத்தடிமைகளாகச் செய்வதற்கான சதியாகவும் இந்தி மொழி கற்பதைப் பற்றிப் பகுத்தறிவுவாதிகள், இடதுசாரிகள், மதச்சார்பற்றவர்கள், தமிழர் வாழ்வுரிமைவாதிகள் பேச்சுகளை ஒலி மாசு என்றே கூறலாம்.



இவர்களுக்கு நியூட்ரினோ தெரியாது. தேனி மலையில் ஒரு விஞ்ஞானக் கூடம் கட்டுவதை எதிர்ப்பார்கள். எண்ணூர் அனுமின் நிலையத்தை எதிர்க்க மாட்டார்கள். கூடங்குளத்தை எதிர்ப்பார்கள். ஹைட்ரோ கார்பன், மீத்தேன் எரிவாயு, நீட் தேர்வு என எல்லாவற்றையும் எதிர்த்து விவசாயிகளை, தொழிலாளர்களைத் திரட்டுவார்கள். அதுபோலவே இந்தித் திணிப்பும் எதிர்க்கத் தக்கது என்றே முழங்குவார்கள். மேட்டூர் அணைக்குள் மூழ்கிப்போன கிராமங்கள் பல. அணை கட்டியதால்தான் தஞ்சைத் தரணியில் 13 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கிறது. சாலை போட்டால் சிலருக்குப் பாதிப்பும், பலருக்குப் பலனும் கிடைக்கும் என்பதே உண்மை.

கற்பிப்பதைத் திணிப்பு எனக் கூறுகிறார்கள். அண்ணாவின் இருமொழிக் கொள்கை அகில இந்தியாவிற்கும் விரிவாக்கப்பட வேண்டும் என்கிறார்கள். அந்த அளவுக்கு அது தொலைநோக்குடைய சிந்தனை என்று அண்ணாவுக்குப் புகழாரம் சூட்டுகிறார்கள்.

தமிழ்நாட்டை, அதனுடைய தேசிய நீரோட்டத்திலிருந்து துண்டிப்பதற்குத்தான் இது பயன்படுகிறது.

மும்மொழியில் இந்தி இருப்பது இந்தி பேசுகிறவர்களுக்கு இலகுவாகவும், இந்தி பேசாதவர்களுக்குக் கஷ்டமாகவும் இருக்கும் என்பது அண்ணாவின் கண்டுபிடிப்பு. எல்லோருக்கும் சமமான கஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தி பேசுவர்களுக்குக் கட்டாயமாக ஆங்கிலத்தைக் கற்பிக்க வேண்டும் என்கிறார் அண்ணா.

ஏற்கனவே 60 கோடிப் பேருக்கும் மேலும் இந்தி பேசாத மாநிலங்களில் 40 கோடிப் பேருக்கும் இந்தி தெரியும். மிச்சமுள்ள மிகச் சொற்பமானவர்களும் இந்தியைக் கற்றுக் கொள்வது தீராத பாவமாகிவிடாது. கஷ்டங்களைச் சமமாக்குவதைவிட, 100 கோடிப்பேரைக் கஷ்டத்திலிருந்து விடுவிப்பதுதானே நல்ல சிந்தனை.

மத்திய அரசுக்கான தொடர்புக்கு ஆங்கிலமே போதும் என்கிறார் அண்ணா. சுதந்திர இந்தியாவின் தொடர்பு மொழியாக பிரிட்டிஷாரின் ஆங்கிலம் என்றால், அடிமை இந்தியாவின் அடையாளமாகத்தானே அது இருக்கும். சுதந்திரம் பெற்றும் சுயமரியாதை இருக்காது. இந்தியாவின் இறையாண்மை என்பது இந்தச் சுயமரியாதைதானே.

மும்மொழிக் கொள்கையை அதனுடைய வீரியத்தைக் குறைத்து வெளியிட்ட மத்திய அரசை மலினப் படுத்துவது நமக்குப் பலன் தருமா என்பதை எல்லாம் பற்றி வாசகர்களாகிய நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ, அவற்றை எழுதுங்கள் ஜூலை 15–க்குள்.

– ***பி.சி.***

அஞ்சலி

கிரேசி மோகனும்





இரா. மோகனும்

சென்ற மாதம் தமிழ் நாட்டில் நாடகம், சினிமாவில் புகழ் பெற்ற ‘கிரேசி மோகன்’ மறைந்தார். அவர் ‘கிரேசி தீவ்ஸ் இன் பாலவாக்கம்’ என்ற நாடகத்தின் மூலம் புகழ் பெற்றவர். அவரது மறைவிற்குத் தமிழக முதல்வரே இரங்கல் தெரிவித்தார். மற்ற அரசியல் தலைவர்களும் இவ்வாறு அஞ்சலி செலுத்தியதைச் சொல்லத் தேவையில்லை.

ஏனென்றால், அவர்கள் தேவர் சமாதி, ஆதித்தனார் சிலை என எல்லாத் தலைவர்களின் நினைவு நாட்களிலும் அஞ்சலி செலுத்துகிறார்களோ, இல்லையோ ஆஜராகத் தவறுவதில்லை. என்ன காரணம்? எல்லாம் ஓட்டுக்குத்தான், நாட்டுக்கு அல்ல.

சென்ற மாதம் அதே வாரத்தில் மதுரையில் வாழ்ந்து வந்த தமிழறிஞர் டாக்டர் இரா. மோகன் அவர்கள் மறைந்துவிட்டார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்தவர். பேராசிரியர் பாப்பையா பட்டிமன்றத்தில் ஆரம்ப காலத்தில் அதை சுவாரஸ்யமாகச் செய்த ஆளுமைகளில் ஒருவர் டாக்டர் இரா. மோகன். அதனால், தமிழகத்தில் பிரபலமானவர்.

இவருடைய துணைவியார் நிர்மலா மோகன் அவர்களும் தமிழ்ப் பேராசிரியர். மாதம் தவறாமல் மோகனுடைய நூல்களை சென்னை வானதி பதிப்பகம் வெளியிட்டுக் கொண்டே வந்தது.

அதுமட்டுமல்ல, தமிழகத்தில் சகல நகரங்களிலும் அவருடைய இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்ந்துள்ளன. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்குத் தகுதிப்பாடு காரணமாக விண்ணப்பித்தவர். ஆனால், ஏனோ இதற்கப்பால் இருக்கிற வேறு சில அம்சங்களை அவரால் ஏற்பாடு செய்ய முடியவில்லை.

இவ்வளவு பின்புலம் கொண்ட ஒரு பேராசிரியர், பண்பாளர், ஒழுக்கமுள்ளவர், நாவலர், நற்றமிழ்ச் சான்றோர் இறந்துபோன செய்தியை கிரேசி மோகன் மறைவைத் தொலைக்காட்சி ஊடகங்கள் தெரிவித்ததைப் போல, இவரைப் பற்றி ஒரு தொலைக்காட்சி ஊடகமும் கண்டு கொள்ளவில்லை. பத்திரிகை ஊடகமும் பெட்டிச் செய்தியாக வெளியிட்டிருந்தால் தமிழறிஞருக்கான அங்கீகாரம் கிடைத்திருக்கும். அந்த ஊடகமும் பெட்டிச் செய்தியை வெட்டிச் செய்தி என்று ஒதுக்கிவிட்டது போலும். இதற்கு என்ன காரணம்? இவரால் என்ன ஓட்டுக் கிடைக்கும்?

அரசியல் தலைவர்களும், திரைத்துறையினரும் இவரை நிமிர்ந்து பார்க்காமல் விட்டது ஆச்சரியமில்லை. ஆனால், கிரேசி மோகனுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அதே அளவு மரியாதை டாக்டர் இரா. மோகனுக்கும் கிடைத்திருக்க வேண்டுமல்லவா?

சமீபத்தில் விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. கு. ராதாமணி மறைந்ததற்கு அவருடைய இறுதி நிகழ்ச்சியில் காவல்துறை துப்பாக்கிக் குண்டுகள் முழங்க மரியாதை செய்தது. நியாயம்தான். மக்கள் பிரதிநிதிக்கு இந்த மரியாதை அவசியம். அதே போல, வாழ்க்கையில் நொந்துபோய்க் கிடக்கும் நம்மைப் போன்றவர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துக் கவலைகளை மறக்கச் செய்த கலைஞர் கிரேசி மோகனுக்குத் திரைத்துறையும், அரசியல் துறையும் தந்த மரியாதை நினைவுகூரத் தக்கது. ஆனால், தமிழறிஞர் இரா. மோகனுக்கு ஏன் இந்தப் பாரபட்சம்?

நாமெல்லாம் இந்தித் திணிப்புக் கூடாது என்றும், தமிழ்வழிக் கல்விதான் வேண்டும் என்றும் முழக்கமிடுகிறோம். ஆனால், தமிழ்ச் சான்றோரின் மறைவை மட்டும் ஏனோ மறந்துவிட்டோம். இது என்ன நியாயம்? அவருக்கு அஞ்சலி செலுத்துகிறபோது இப்படி ஆத்திரமும் வருகிறது.

– இ.ஆர்.

ஜூன் 2019 இதழ் விதாம்

கமல்ஹாசனின் அநீதி மய்யக் கருத்து

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

அறிவுஜீவி என்ற போர்வையில் அறிவிலித்தனமாய்க் கருத்துக்களை அள்ளித் தெளிப்பதில் தமிழக அரசியல் வியாதிகளிடையே நடைபெறும் போட்டியில் கமல்ஹாசன் முதலிடம் பெறத் துடிப்பதின் அடையாளமே இந்துத் தீவிரவாதப் பேச்சு! முளையில் களையப்பட வேண்டிய நபர் இவர். மத வியாபார நச்சுத்தீ! கவனம்.

– **மு. சுரேஷ்குமார்,** நங்கைநல்லூர்.

நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் மிக்கவர்தான் கமல். தீவிரவாதி என்றாலே முஸ்லிம்கள்தான் என்ற தவறான எண்ணம் மக்கள் மனதில் விழுந்து விட்டது. இதைப் போக்குவதற்காகவும் பேசி இருக்கலாம். முஸ்லிம் வாக்குகளைப் பெறுவது என்ற நோக்கத்திற்காகப் பேசியிருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. மேலும் கோட்சே போன்ற தீவிரவாதியுடன் ஓர் இனத்தையும் பேசியிருப்பது தவறுதான். வளர்ந்து வரும் ஒரு கட்சியுடைய தலைவர் யார் மனதையும் புண்படாதவாறு பேச வேண்டும்.

– **ப. அடைக்கலம்,**
திருவில்லிப்புத்தூர்.

தாங்கள் கமல்ஹாசனின் பேச்சை அநீதி மையக் கருத்து என்று கூறிய தலைப்பை வரவேற்கிறேன். கமல்ஹாசன் வாய் தவறிக் கூறிய கருத்தை வாபஸ் வாங்கி அறிக்கை வெளியிட வேண்டும். பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கலைஞர் போல் இனிமேல் யாரும் அரசியலுக்கும், ஆட்சிக்கும் வரமுடியாது. இனிமேல் தமிழ் மக்கள் சினிமா நடிகர்களை மதித்து ஓட்டளிக்க மாட்டார்கள். அரசியலை விட்டு நடிகர்கள் ஒதுங்கியிருப்பது நல்லது.

– **தி.ஈ.தி. ஈசுவர்மூர்த்தி,**
ஸ்ரீவில்லிப்புத்தூர்.

இசுலாமிய மக்கள் அதிகம் வாழும் பள்ளப்பட்டியில் கமல்ஹாசன் பேசியதற்குக் காரணம், அவர்களின் வாக்குகளைப் பெறவேண்டும் எனும் பேராசையே! பெரும் மக்கள் திரளைப் பார்த்தவுடன் உணர்ச்சிவசப் பட்டு விட்டார். வளர்ந்து வரும் அரசியல் தலைவர் கமல்ஹாசன், வரலாற்றை முழுதும் அறியாமல் இப்படிப் பேசியிருப்பது சறுக்கல்களையே அவருக்குத் தரும் என்பது நிதர்சனம்!

– **நவீன்குமார்,** நடுவிக்கோட்டை.

மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்சே இந்துவாக இருக்கலாம். ஆனால், கொலை செய்ததன் பின்னணி வேறு. ஏதோ முஸ்லீம்கள் மிகுந்த பகுதியில் வாக்குகள் சேகரிக்கத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட கமல்ஹாசன் முஸ்லீம்களுக்கு ஆதரவாக இந்துத் தீவிரவாதம் எனப் பேசியுள்ளார். அரசியலில் கால் எடுத்து வைக்கும்போதே அரசியல் தந்திரப் பேச்சுக்களைப் புரிந்து வைத்துள்ளார் என்ற அளவில் வேண்டுமானால் கமலைப் பாராட்டலாம்.

– **அ. சம்பத்,** திருவரங்கம்.

களாக்காய்க்காகப் பலாக்காயை இழந்த நிலையில் இருக்கிறார் கமல்ஹாசன். அவரது அரவக்குறிச்சிப்

பேச்சால் அங்கு மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் ஓர் ஓட்டுக்காக ஒன்பது ஓட்டுக்களைப் பறிகொடுத்து விட்டார். எந்த ஒரு விஷயத்திலும் யாரிடம் நாம் யோசனை கேட்கிறோமோ, அதிலேயே நமது வெற்றி, தோல்வி அமைந்து விடுகிறது. பாவம் கமல்ஹாசன். மீண்டும் அவர் சினிமாவுக்கோ, பிக்பாஸ் நிகழ்ச்சிக்கோ போய்விடலாம்.

– **வரதன்,** திருவாரூர்.

விவாதத்திற்கான தலைப்பிலேயே கமல்ஹாசனின் மக்கள் நீதிமய்யத்தின் செயல்பாடுகள் எப்படியிருக்கக்கூடும் என்பதை யோசிக்க வைத்திருந்தது. அதிலும் குறிப்பாக, அதன் நிறுவனர் கமல் ஹாசன் இந்து தீவிரவாதம் குறித்து உளறிக் கொட்டியிருந்ததன் மூலம், நீதிக்கும் தனக்கும் கடுகளவும் சம்பந்தமில்லை என்பதை உணர்த்திவிட்டார்.

– **இரா. வளையாபதி,**
தோட்டக்குறிச்சி.

விவாதத் தலைப்பே தப்பு. அது எப்படி 'அநீதி மய்யம்' என்று அழைக்கலாம்? எல்லா மதத்திலும் மதம் பிடித்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதை பயங்கரவாதம், அநியாயவாதம், தீவிரவாதம், கொலை பாதக வாதம் எனப் பிரிக்கலாம். ஆணவக் கொலை போல, தன் கருத்துக்கு ஒவ்வாதவரைக் கொலை செய்வது தீவிரவாதம்தான். முதலாவதா, தொடர்ந்தா என்பது அல்ல முக்கியம். கோட்சே செய்தது இந்துத்வாவை ஆதரித்த கொலைதான். சொன்ன கருத்தின் மய்யம் சரிதான். சொன்ன நேரம்தான் தப்பு.

– **சீத்தலைச்சாத்தன்,** திருப்பத்தூர்.

இந்து மதத்தோடு தீவிரவாதியைத் தொடர்புபடுத்திக் கமல்ஹாசன் பேசியதை முஸ்லிம்கள்கூட வரவேற்கவில்லை. முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பள்ளப்பட்டியில் இது போன்ற அபத்தமான கருத்துக்களை அவர் பேசியதற்கு முன்பாகவே, அவர் நடித்த திரைப் படங்களான அன்பேசிவம், தசாவதாரம், விருமாண்டி, மன்மதன் அம்பு முதலியவற்றில் இந்துக் கடவுள்களைக் கேலி செய்து பேசியுள்ளார். 'இந்துவாக இறப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்' என்று கோட்சே கூறியதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

– **த. நாகராசன்,** சிவகாசி.

கமல்ஹாசனின் பேச்சு மிகவும் கண்டிக்கத்தக்கது. சிறுபான்மையினரின் வாக்குகளைக் குறியாக வைத்தே இப்படிப் பேசியிருக்கிறார். மத உணர்வைத் தூண்டும் பேச்சு இது. அரசியல் கத்துக்குட்டியான இவர், ரசிகர்கள் கை தட்டும் சினிமா டயலாக்காக எண்ணி விட்டார். கொலைகாரன், தீவிரவாதி, பயங்கரவாதிக்கு உள்ள வேறுபாடு அறியாமல் பிதற்றியிருக்கிறார். தேச பக்தி ஊட்டப்பட்டு வளர்ந்த கோட்சே, காந்தியைக் கொலை செய்த நோக்கம் தேச நலனுக்காகவும், இந்து மக்களுக்காகவும்தான். இந்துக்களுக்கு எதிரி ஒரு சில இந்துக்களே! இந்தப் பட்டியலில் கமல்ஹாசனும் சேர்கிறார்.

– **மு. கணபதி,** பெருந்துறை.

காந்தி – ராஜாஜியின் பேரன் ராஜ்மோகன் காந்தி எழுதுகிறார்: 1916–இல் காந்தி – கஸ்தூரிபாய் படத்தை ராஜாஜி தன் வீட்டில் மாட்டியிருந்தார். அவரது பத்து வயது மகள் நாமகிரி 'அவன், இவன்' என்று காந்தியைக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படிச் சொல்லக்கூடாது எனக் கண்டித்தார் ராஜாஜி. 'ஏன்? அவர் பிராமணரா?' எனக் கேட்டாள் மகள். 'இல்லை; ஆனால், காந்தியும் அவரது மனைவியும் ராமர் – சீதையைப் போன்றவர்கள்' என்றார் தந்தை. அப்படியான ராமரைப் போன்றவரைக் கொன்றவன் ராமர் பெயரைக் கொண்ட கோட்சே. கொடுமை! இது பற்றிக் கமல்ஹாசன் இடம், பொருள், ஏவல் அறிந்து பேசவில்லை.

– **மு. அங்கமுத்து,** இடைப்பாடி.

கொலைகாரனும், பயங்கரவாதியும் வேறு வேறானவர்கள். காந்தியைக் கொன்ற கோட்சே, ஒரு கொலைகாரன். காந்திஜியைக் குறிவைத்துச் சுட்டுக் கொன்றான். பயங்கரவாதி ஒரு கூட்டத் தையே அழிப்பவன். திரு. கமல்ஹாசன் கோட்சேயை முதல் இந்து பயங்கரவாதி எனக் குறிப்பிட்டது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. தேர்தல் பரப்புரையின் போது முஸ்லிம்கள் நிறைந்த பள்ளப் பட்டியில் அவர் அவ்வாறு பேசியது வாக்கு வங்கியைக் குறிவைத்துப் பேசிய பேச்சாகும்.

– **தி. குமாரராஜா,**
உடுமலைப்பேட்டை.

பிரபல நடிகராக இருந்துவரும் கமல், கோட்சேவைத் தீவிரவாதி என்று கூறியிருப்பதை மறப்போம், மன்னிப் போம் என்று விட்டுவிடாமல், அந்தப் பரபரப்பான கருத்துக்குப் பரப்புரை தேவையில்லை என்பதே எனது அழுத்த மான கருத்து.

– **ப. மூர்த்தி,** பெங்களூர்.

கமல்ஹாசனும் ஓர் இந்துதான். மேலும், தேர்தல் சமயத்தில் இவ்வாறு தேவையில்லாத சர்ச்சைகள் குறித்துப் பேசுவது என்பது வழக்கமான ஒன்று தான். ஏன், மோடி கூட ராஜீவ்காந்தி எப்பவோ இராணுவக் கப்பலை உல் லாசப் பயணத்திற்குப் பயன்படுத்தி னார் என்று பேசவில்லையா? கமல் பேசிய இடம்தான் பிரச்சனையாகி விட்டது. அப்படி முஸ்லிம்கள் நிறைந்த இடத்தில் பேசியதால், முஸ்லிம்கள் அனைவரும் சந்தோஷப்பட்டு அவருக்கு ஓட்டளித்து விட்டார்களா?

– **பே. சண்முகம்,** செங்கோட்டை.

கமல்ஹாசன் எப்போதும் தன்னை அறிவுஜீவியாகவும், திறமைசாலியாகவும் காட்டிக் கொள்ள முயல்பவர். இஸ்லா மியர்கள் அதிகம் வசிக்கும் இடத்தில் போய், தன் தாய் மதத்தின்மீது சேற்றை வாரி இறைத்தது அரசியல் மோகத் தால்தான். அரசியலில் இறங்கிய நடிகர் கள் ஆட்சியைப் பிடித்ததற்கு அவர் களின் நாகரிகமான பேச்சும், நடத்தை யும்தான் காரணம். அவர்கள் இவரைப் போலச் சொந்தக் காசில் சூனியம் வைத்துக் கொள்ளவில்லை.

– **இரா. கல்யாணசுந்தரம்,** மதுரை.

தேர்தலில் பொதுமக்களிடம் வாக்குக் கேட்பதற்கும், ‘சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி ஓர் இந்து. அவர் பெயர் நாதுராம் கோட்சே’ எனச் சொல்வதற்கும் என்ன தொடர்பு என்பது புரியவில்லை. கமல் ஹாசன் பள்ளப்பட்டியில் இதுபோன்று பேசியதும், யாகாவாராயினும் நாகாக்க’ என்ற குறள்தான் நினைவுக்கு வந்தது. குறிப்பாக, கலைஞானி கமல்ஹாசன் போன்றோர் வாக்குகளுக்காக வழுக்கி விழுவது ரசிக்கத்தக்கதல்ல.

– **ரவிச்சந்திரன்,** ஆவுடையாள்புரம்.

‘**க**மல்ஹாசனின் அநீதி மய்யக் கருத்து’ – இந்தத் தலைப்பிலிருந்தே கமலின் கருத்து அநீதி என்பது தெளிவு. தன் அரசியல் லாபத்திற்காக, கோட்சே ஓர் இந்துத் தீவிரவாதி எனக் குறிப்பிட் டது தவறு. தன் குறுகிய கால அரசிய லில் கமல் தேவையில்லாமல் பிரதமர் மோடியைச் சாடியது வருந்தத்தக்கது. கமல் ஒரு நாத்திகனாக இருப்பது அவரது சொந்த விருப்பம். அதற்காக ஆன்மிகப் பெருமக்களைக் கேலி செய்யக்கூடாது!

– **ராமன் தர்மலிங்கம்,** நீலகிரி.

இந்து மதம் உயர்வானது என்பதிலோ, உன்னதமானது என்பதிலோ யாருக்கும் எப்போதும் எந்தவித ஐயமு மில்லை. ஆனால், இந்துக்கள் எல் லாருமே மேற்கண்ட போதனையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று உறுதி யாகக் கூறிவியலாது. விதி விலக்காகச் சிலர் நல்ல மரத்தில் ஒரு புல்லுருவியாய் அமைந்து விடுவதுண்டு. அவர்களில் ஒருவனே நாதுராம் கோட்சே ஆவான். தேர்தலில் தன் கட்சிக்கு வாக்குகளைப்

பெற வேண்டுமென்ற சுய லாபத்தின் காரணமாக, இக்கருத்தை வெளியிட்ட தற்காக வேண்டுமானால், கமலைக் குறை கூறலாமே தவிர, அவர் கூறிய கருத்து முற்றிலும் சரியானதே!

– **மேலை. தமிழ்க்குமரன்,** மேலைச்சிவபுரி.

தேர்தலின்போது கமல்ஹாசன் 'சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி ஓர் இந்து. அவன் பெயர் நாதுராம் கோட்சே' எனப் பேசியிருக்கக் கூடாது. அடுத்து, கோட்சே தீவிரவாதியில்லை. விலங்குணர்வின் மதவெறிக் கொலை யாளி. இதே வெறித்தனம் தமிழ்நாட்டில் நடந்ததுண்டு என்பதற்குப் பெரிய புராணத்தில் முத்தநாதன் என்பவன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொலை செய்ததைக் கூறலாம். எனவே, கமல் ஹாசன் கூறிய முதல் தீவிரவாதி என்ப தில் உள்ள முதல் என்றதற்கான சொற் பொருள் ஆராய்ச்சி தேவையற்றது. ஆக, கோட்சேவை மதவெறிக் கொலை யாளி எனலாம்!

– **தெ. முருகசாமி,** புதுச்சேரி.

கோட்சே, காந்தியைக் கொன்றது மதவெறியில்லாமல் வேறென்ன? தேர்தல் பிரச்சாரத்தில் கோட்சே ஏன் நுழைந்தான்? கமல் அரசியலுக்குப் புதிதுதானே, பள்ளப்பட்டியில் உளறி விட்டார். பாவம், மன்னிப்போம். கமல் ஒரு நாத்திகவாதி எனப் பெயர் பெற்ற வர். நாத்திகவாதிகளுக்கு மதம் கூடாது. ஏற்றுக்கொள்ளலாம். தேர்தல் பிரச் சாரத்தில் மதம் நுழையக்கூடாது. நாத் திகத்தைத் தன்னளவில் வைத்துக் கொண்டால் பெருமைதான். இல்லை யென்றால் சிறுமையே!

– **சு.ம. பாலகிருஷ்ணன்,** சின்னாளப்பட்டி.

கமல்ஹாசன் தீவிரவாதி எனச் சொல்வதால், கோட்சேவை இந்து தீவிர வாதியாகக் கருதிவிட முடியாது. இதையே ஒரு பிச்சைக்காரன் சொல்லியிருந்தால் இப்படி அரசியல் ஆக்கப்படுமா? மக்கள் பிரச்சனைகள் எவ்வளவோ இருக்கும்போது இந்த ஒன்றும் இல்லாத விசயத்தை அரசியல் ஆக்கியதே மிகப்பெரிய கேவலம்.

ஒன்று மட்டும் அவலமான உண்மை. இந்த விவகாரத்தில் சம்பந்தப் பட்ட அனைவருக்கும் இந்திய வரலாற் றில் எந்த அளவில் அறிவு இருக்கிறது என்பதைத் தெளிவாக்குகிறது. இந்த விவகாரத்தில் செய்தித் தாள்கள், ஊட கங்கள் மக்களுக்குப் பொய்யான தகவல் களைக் கொடுத்தது சரியல்ல. மக் களுக்கு எந்த வகையிலும் பயனில்லாத பொய்யான செய்தி.

– **சி. பிரகாஷ்,** முத்தரசநல்லூர்.

தேர்தல் பிரச்சாரத்தில் வாக்கு களைப் பெற எதை வேண்டுமானாலும் பேசலாம், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்குக் கமல்ஹாசனின் பேச்சே உதாரணமாகும். தேர்தல் நடத்தை விதிகள், கட்டுப்பாடுகளை விதித்த போதும், அரசியல் தலைவர்கள் அதனைப் பெரிதாக மதிப்பதில்லை. ஏனென்றால், அப்படிப் பேசியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்குவதற்குத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லாததே காரணம். இசுலாமியருக்கு ஆதரவாக அண்ணல் காந்தியடிகள் செயல்படு கிறார் என்ற கோபத்தில், பின் விளைவு களை எண்ணிப் பார்க்காமல், புத்தி பேதலித்துச் செய்த செயல்தான் கோட் சேவின் செயல். இதற்கும் மதவாதத் திற்கும் எப்படித் தொடர்பு படுத்த முடி யும்? கமல்ஹாசன் கருத்து ஏற்புடையது அன்று.

– **புலவர் கருமலைத்தமிழாழன்,** ஒசூர்.

கமல்ஹாசன் அவர்களின் கருத்து, பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியது உண்மை. அவருடைய இந்த மாதிரி யான தேர்தல் பிரச்சாரமே அவருடைய தேர்தல் தோல்விக்குக் காரணம்.

இந்தியர் என்று சொல்வது நாகரிக மானது. அதைவிட்டுச் சாதியினைக் குறிப்பிட்டுச் சொல்வது அடுத்தவரை மிகவும் வேதனைப்படுத்தும் என்று புரியாமல் சொல்லியிருக்கிறார்.

அவர், தேர்தலைத் திரையில் நடக்கும் ஒரு தேர்தல் என்று எண்ணித்தான் ஷூட்டிங்கில் இருப்பதாக நினைத்துப் பேசியிருக்க வேண்டும். தீவிரவாதம் என்பது ஒரு கொடிய நோய். இந்த நோய் இவர்களுக்குத்தான் வரும் என்று சொல்ல முடியாது. யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். அந்த நோய்க்குச் சாதி, மதம் என்று எதுவும் தெரியாது என்ற சின்ன விஷயம்கூடத் தெரியாமல் கமல்ஹாசன் பேசியதை இந்நேரம் தேர்தல் முடிவினைப் பார்த்து உணர்ந்திருப்பார்.

– **உஷா முத்துராமன்,** மதுரை.

கமல் பேசிய ஒரு பேச்சு எப்படிப் பிரச்சனை ஆகியதோ, அது போன்றே, கோட்சேயின் செயல் வற்றாத வடுவாகி விட்டது. ‘குருதிப்புனல்’ எனத் தமிழில் பெயர் கொண்ட நிழற்படம் முழுமையாக மேலைக் கலாச்சாரத்தை ஒற்றியே அமைந்து போனது. அதுபோல் முரண்படுதல்கள் எங்கிலும் வெளிப்படும்; படலாம். அறப்போராட்டம் என்ற நிலையில் ஒரு தவறான இலக்கு கைகூடலாகா என்ற நோக்கில் வன்மம் மிக்க வேண்டுகோள் அண்ணலார் உரைத்ததும் (தம் பிரேதத்தின் மீது நடந்து சென்று) துரதிருஷ்டமாகிப் போனது கூட ஒரு படிப்பினைதான்! ‘வாளெடுத்தவன் வாளால் மடிவான்’ என்ற உன்னத மொழியை எவர் ஏற்றாலும், ஏற்காவிடிலும் விபரீதம், பின்விளைவுகளை மோசமாக்கி விடுகிறது. இதில் மதம் என்ன, சாதி என்ன, இனம் என்ன, தேசம் என்ன?

– **எஸ்.ஜி. இசட்கான்,** திருப்பூர்.

இந்திய நாடே போற்றிப் புகழ்ந்து வணங்கி மகிழ்ந்த காந்தியடிகளைத் துடிதுடிக்கச் சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே மேற்கொண்ட செயல் தீவிரவாதம் இல்லையா? அவர் இந்து மதத்தைச் சார்ந்தவர்தானே! தீவிரவாதிகள் எல்லா மதத்திலும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே கமல் அவ்வாறு பேசியிருக்கிறார். இதில் தவறேதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. தீவிரவாதத்தை மேற்கொள்பவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என்பதுதான் அவர் பேசியதன் உள்ளடக்கம்.


– **உ.மு.ந. ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

கோட்சே கொலைக் குற்றத்திற்காகத்தான் தண்டிக்கப்பட்டார், பயங்கரவாதத்திற்காக அல்ல. எந்த ஓர் இந்திய நீதிமன்றமும் அவரைப் பயங்கரவாதி என்று பிரகடனப்படுத்தவில்லை. எனவே, கமல்ஹாசனின் அறிக்கை வரலாற்று உண்மைகளுக்கும், நீதிமன்ற ஆவணங்களுக்கும் முற்றிலும் முரணானது. உள்நோக்கம் கொண்ட தவறான அறிக்கை. இஸ்லாமியர்களின் வாக்குகளைப் பெறவே கமல்ஹாசன் அவ்வாறு பேசியிருக்கிறார்.

– **என். ஆர். ஜெயசந்திரன்,**
காவேரிப்பட்டணம்.

கமல்ஹாசன் கூறிய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷயமே அல்ல. அதுவும் தேவையுள்ள கருத்துக்களை எடுத்துக் கூறுவதை விட்டுவிட்டுத் தேவையற்ற கருத்துக்களைக் கூறக்கூடாது. முஸ்லிம்கள் நிறைந்த சின்னத்தாராபுரம், பள்ளப்பட்டி முதலிய பகுதிகளில் மக்களைச் சாதி, மதம், இனப் பாகுபாட்டைப் பேசுவது சரியான முறை அல்ல. குறிப்பாக கோட்சே பற்றிக் கமல் பேசியது தேவையற்ற செயல். கோட்சேவைப் பற்றிக் குறிப்பிட்டால் அவனது தனிப்பட்ட செயலைக் குறிப்பிடாமல், அவனது கட்சி என்ன? என்று பேசுவது படுமுட்டாள்தனம் ஆகும்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.



காந்திஜி

நீங்களும் இப்படி சிந்திக்கலாமே!

மகாத்மா காந்தியை அகிம்சாவாதி என்று கூறுகிறபோது, அவருடைய சகிப்புக் குணத்தைக் காட்டுவதாகவே உள்ளது. உண்மையில் அவர் சமரசம் செய்து கொள்ளாத போராளி. எதிரியையும் ஆதரவாளராக ஆக்கிக் கொள்ளும் நம்பிக்கையோடு செயல்பட்டவர். "இன்னா" செய்தவர்கள் வெட்கப்படுமாறு அவர்களுக்கு நன்மை செய்தவர். அவருடைய அகிம்சை, முற்றிலும் வித்தியாசமான போராட்ட முறையாகும். துப்பாக்கியைக் கோழைகளின் ஆயுதம் என்றவர் அவர். நிராயுதபாணிக்குள்ள மனத் துணிச்சலில் அதீத நம்பிக்கை கொண்டவர்.

குழந்தையின் போராட்டத்தைக் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். தாய், தந்தையைவிடக் குழந்தைக்குப் பலம் குறைவுதான். ஆனால், குழந்தை அவர்கள் இருவதையும் எதிர்த்துப் போராடத் தனது உடல் பலத்தை உபயோகிப்பதில்லை. சாப்பிட மறுக்கும். சாப்பிடமாட்டேன் என்று பிடிவாதம் செய்யும். அக்குழந்தை, சாப்பிட மறுப்பதைத் தாயும், தந்தையும் சகித்துக் கொள்ளவே மாட்டார்கள். சமரசத்துக்கு வருவார்கள். பின்னர் தான் குழந்தை சாப்பிடும். அந்தச் சந்தோஷத்தைப் பொற்றோர்கள் அனுபவிப்பார்கள்.

பலத்தைப் பிரயோகிக்காமல் குழந்தை கையாண்ட இப்பிடிவாதத்தை ஆழமாகச் சிந்தித்தால், அதுதான் அகிம்சா முறைப் போர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

காந்திஜி எத்தனையோ சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்தியவர். உப்புச் சத்தியாக்கிரகம்/ சட்ட மறுப்பு/ ஒத்துழையாமை முதலிய போராட்டங்கள் எல்லாமே வன்முறையற்ற போராட்டங்கள். அறப் போராட்டங்கள் என அவற்றைத் தற்காலத்தில் பேசுகிறோம்.

காந்திஜி காலத்திற்குப் பிறகும் இந்த அறப் போராட்டங்களைக் கட்சி அரசியல்வாதிகள் செய்து வருகிறார்கள்.

ஆனால், ஒரே ஒரு போராட்டத்தை மட்டும் கட்சி அரசியல்வாதிகள் செய்வதே இல்லை. ஏனைய போராட்டங்கள் ஆட்சியை எதிர்த்து அதிருப்தியை உருவாக்கி, ஆட்சியைக் கைப்பற்றுவதற்குக் கட்சித் தலைவர்கள் கையாண்ட போராட்டங்கள்.

ஒரே ஒரு போராட்டத்தை மட்டும் காந்திஜிக்குப் பிறகு யாரும் கையாள்வதில்லை. அது என்ன போராட்டம்?

1930–இல் காந்திஜி உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முடித்த பிறகும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. அதனால், மக்களிடம் சென்று

அரசுக்கு வரி செலுத்தாதீர்கள் என்று, வரி கொடா இயக்கத்தைத் தொடங்கினார்.

மக்கள் அரசுக்கு வரி செலுத்தாத நிலையில் அரசுக்கு உரிய வருமானம் கணிசமாகக் குறையத் தொடங்கியது. அரசு அசையத் தொடங்கியது. அதனால், வரிகொடா இயக்கம்தான் காந்திஜியினுடைய போராட்டங்களிலேயே அரசை அதட்டிப் பணிய வைத்த போராட்டமாகும்.

காந்திஜியின் மறைவிற்குப் பிறகு அகிம்சைப் போராட்டத்தை அரசியல் கட்சித் தலைவர்கள் அறப்போராட்டமாக இப்போது செய்து வருகிறார்கள். உண்ணாவிரதம், தர்ணா, மனிதச் சங்கிலி, சாலை மறியல் என அனைத்தும் இதில் அடங்கும். இதில் பலாத்காரம் இடம் பெறுவதில்லை.

இந்தப் போராட்டத்தின் வீச்சை உணர்ந்து அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கலாம். பரிசீலிக்காமலும் விட்டுவிடலாம். கடந்த 70 ஆண்டுக் காலத்தில் அறப் போராட்டங்கள்தான் இந்தியா முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், எந்த ஓர் அரசியல் கட்சியும் காந்திஜி கையாண்ட அரசை நிலைகுலையச் செய்யக்கூடிய வரிகொடா இயக்கத்தை மட்டும் செய்வதில்லையே, ஏன்?

இதில் வன்முறை இல்லை, பழி வாங்கல் இல்லை, அரசு கட்டடங்களோ, அலுவலகங்களோ சேதமடைவதில்லை. விவசாயிகளாக, வியாபாரிகளாக, வேறு பல தொழிலாளர்களாக மக்கள் இருந்தாலும் அவர்கள் நகராட்சிக்கோ, மாவட்ட ஆட்சிக்கோ, மாநில அரசுக்கோ நிலவரி, வீட்டு வரி, தொழில் வரி முதலிய வரிகளைச் செலுத்த மறுத்துவிடுவார்கள்.

எந்த ஓர் அரசாங்கமும் வரி வருமானத்தைத் திரட்டித்தான் ஊழியர்களுக்குச் சம்பளம் தருகிறது. மக்களுக்குச் சில நலத்திட்டங்களை நிறைவேற்றுகிறது. பேரிடர்க் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி செய்கிறது. மக்கள் வரி கொடுக்கவில்லையென்றால், அரசு நிலை குலைந்து போய்விடும்.

இந்தப் போராட்டத்தை இந்தியாவில் இருக்கிற தீவிரம் பேசுகிற கம்யூனிஸ்டுகள் கூடச் செய்யவில்லை. இது ஓர் ஆச்சரியம். விவரம் தெரிந்தவர்கள்தான் இதனை விளக்க வேண்டும்.

வரி கொடாப் போராட்டம் போல்தான் இன்னொரு போராட்ட முறை பொது வாக்கெடுப்பு. காஷ்மீர் மாநிலம் இந்தியாவிற்கா? பாகிஸ்தானுக்கா? என்பதை ஷேக் அப்துல்லா பொது வாக்கெடுப்பு நடத்தித் தீர்மானிக்க ஒரு கட்சியைத் தொடங்கினார். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை. ஷேக் அப்துல்லாவின் மகன் டாக்டர் பரூக் அப்துல்லா, அவருடைய மகன் உமர் அப்துல்லா ஆகிய வாரிசுகள்கூட பொது வாக்கெடுப்புப் பற்றி எப்போதும் பேசுவதில்லை.

உண்மையில், பொது வாக்கெடுப்பு என்பது ஒரு தேர்தலையே தவிர்ப்பதாகும். தேர்தல் வரை காத்திருக்காமல் ஒரு தேசியப் பிரச்சனையின்மீது மக்களின் மனப்பான்மை எப்படிப்பட்டது என்று அறிந்து கொள்வதற்கு இது உதவுகிறது.

ஐரோப்பிய யூனியனில் இங்கிலாந்து ஓர் உறுப்பு நாடு. அதனை விட்டு அது வெளிவர விரும்பியது. வெளியேறலாமா, வேண்டாமா என்பதற்குப் பொது வாக்கெடுப்பு நடத்தியது.

ஸ்வீடன் நாட்டில் ஓரினச் சேர்க்கை சட்ட விரோதக் குற்றம். இதைப்பற்றி மக்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளப் பொது வாக்கெடுப்பு நடத்தியது. ஓரினச் சேர்க்கையைக் குற்றவியல் தண்டனைக்கு உரியதல்ல என்று மக்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். அதனால், ஓரினத் திருமணத்திற்கு அனுமதி கிடைத்தது.

இந்தியாவில் கடந்த 70 ஆண்டுக்காலத்தில் எத்தனையோ பிரச்சனைகள் பரபரப்போடு பேசப்பட்டன. உதாரணம், அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டுமா? என்பது ஒரு பிரச்சனை. அதனைப்பற்றி ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தியிருந்தால், அந்த வாக்கெடுப்பில் இந்துக்களும், இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும், சீக்கியர்



களும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லி இருப் பார்கள். அதன் மூலம் பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயத்தை அரசு தெரிந்து கொள்ள அது உதவியிருக்கும்.

ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் ஒரு குறிப் பிட்ட கட்சி அயோத்தியில் ராமர் கோயில் கட்டு வோம் என்கிறது. இன்னோர் அரசியல் கட்சி, அதைக் கட்ட அனுமதிக்க மாட்டோம் என்கிறது.

எதற்காக இதை அரசியல் பிரச்சனை ஆக்க வேண்டும்? மக்கள் பிரச்சனையாக இதனைக் கருதி, அவர்களுடைய மனப்பான்மை என்ன என் பதை அறிந்து கொள்ள மக்களை வாக்களிக்கச் சொல்லலாம். இதற்கான தீர்ப்பைப் பெரும்பான்மை அடிப்படையில் ஒரே நாளில் பெற்றுவிட முடியும்.

இதேபோல, விவசாயிகளின் நிலத்தைப் பாதிக்கப்படக்கூடிய ஹைட்ரோ கார்பன், மீத்தேன், எரிவாயுக்குழாய் பதித்தல், ஆறுவழிச் சாலை, எட்டுவழிச் சாலை, சுற்றுவட்டச் சாலை, விமான நிலைய விஸ்தரிப்பு ஆகியவற்றைப் பொது மக்களின் நலனுக்காக அரசு திட்டமிடுகிறது.

ஆனால், சிலருடைய பூமிகள் கையகப் படுத்தப்படுவதால், இப்பிரச்சனையைக் கட்சிகள் அரசியலாக்கி, பொது நன்மையைத் தரக்கூடிய இத்திட்டங்களை நிறைவேறாமல் கட்சிகள் தடுக் கின்றன. அரசு உரிய இழப்பீடு கொடுத்துத்தான் சம்பந்தப்பட்டவர்களின் நிலத்தைக் கையகப் படுத்துகிறது. ஆனாலும், காலதாமதமாகிறது.

உதாரணமாக, சேலம் – சென்னை எட்டு வழிச்சாலை 4 ஆயிரம் ஏக்கர் விவசாய பூமி களைப் பாதிக்கக்கூடியதாகக் கணக்கிடப்பட்டது. ஆனால், 200 கி.மீ. தொலைவு இந்த 8 வழிச் சாலை வசதியால் ஏற்படும் என்பதையும் இத் திட்டம் விளக்கியது.

8 வழிச்சாலையை உருவாக்கினால், சேலம் சம்பந்தப்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். ஆனால், தமிழ்நாடு முழுவதும் ஏன் இந்தியா முழுவதும் அச்சாலையில் பயணிப்பவர் களுக்கு, 200 கி.மீ. தூரம் குறைவதால், பெட் ரோல் மற்றும் நேரம் மிச்சமாகிறது.

இது எல்லோருக்கும் பலன் தரக்கூடியது. பாதிக்கப்பட்டவர்களின் பூமிகளுக்கு இழப்பீடு வழங்கிவிடலாம். இது குறித்துத் தமிழ்நாடு அளவில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தியிருந் தால் மக்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள அது உதவியிருக்கும். இதை வைத்தே அரசியல் செய்யும் கட்சிகள் அவ்வாறு செய்ய முடியாமல் போய்விட்டிருக்கும். அதனால், அக்கட்சிகளால் இப்பொது வாக்கெடுப்பை எதிர்த்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பொது வாக்கெடுப்பு முறை நமது நாட்டில் உபயோகப்படுத்தப் படுவதே இல்லை.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகச் சீர்திருத்த அமைப்பு, (Association for Democratic Reforms) ஒரு கண்டுபிடிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, நாடாளுமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 543 எம்.பி.–க்களில் 233 பேர் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளனவாம்.

இவர்களைக் கட்சி வாரியாகச் சொன்னால், பா.ஜ.க.–வின் 116 எம்.பி.க்கள் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளன. அவர்களில் 87 பேர் கடு மையான கிரிமினல் குற்றவாளிகள். காங்கிரஸ் கட்சி எம்.பி.–க்களில் 29 பேர் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளன. அவர்களில் 19 பேர் கொடு மையான குற்றவாளிகள்.

இதேபோல, தி.மு.க. எம்.பி.க்களில் 10 பேர் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளன. அவர்களில் 6 பேர் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன. 543 எம்.பி.க்களில் 159 எம்.பி.–க்கள் மீது கொலை, கற்பழிப்பு, மோசடி, ஆள்கடத்தல் முதலிய குற்றங்கள் உள்ளன. எல்லாக் கட்சி களிலும் இவர்கள் உள்ளனர்.

543 எம்.பி.க்களில் இவ்வாறு ஏறக்குறைய பாதிக்குப்பாதி கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப் பட்டவர்கள் உள்ளனர். இவர்கள்தான் நாடாளு மன்றத்தில் புதிய புதிய சட்டங்களை உருவாக்கித் தரக்கூடிய கடமையைச் செய்யப்போகிறவர்கள். எப்படிப்பட்ட சட்டங்களை இவர்கள் உருவாக்கித் தருவார்கள் என்று நாம்தான் யூகிக்க வேண்டும்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு உச்சநீதிமன்றம் பொது நல வழக்கு ஒன்றில் ஒரு தீர்ப்பளித்தது. அகமதாபாத் மற்றும் பெங் களூர் ‘இந்தியன் மேனேஜ்மெண்ட் கழகத்தின்’ (ஐ.ஐ.எம்.) பேராசிரியர் குழுதான் அந்த வழக்கைத் தொடுத்தது.

இந்த வழக்கு, 1999–இல் தாக்கல் செய்யப் பட்டது. இதற்கான உச்சநீதிமன்றத் தீர்ப்பு 2004–இல் வெளியாகியது. ஆனால், 2002 – 2003–இல் ஒரு கட்டளையை நீதிமன்றம் பிறப் பித்தது. அதன்படி, தேர்தலில் போட்டியிடக்கூடிய அனைத்துக் கட்சி வேட்பாளர்களும் தங்கள் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகள், நிதி மோசடிகள், கல்வித்தகுதி ஆகிய அனைத்தையும் தங்களுடைய வேட்பு மனுவுடன் இணைத்துத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும் என்கிறது அந்தக் கட்டளை. இதன் மூலம், தேர்தல் ஆணையமும் அந்த வேட்பாளர்களைப் பற்றி அவர்கள் தந்த தகவல்களை வாக்காளர் களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. தெரிவித்ததா என்றே தெரியவில்லை.



இதேபோல 'நேசனல் எலக்ஷன் வாட்ச்' (NEW) என்ற அமைப்பு, போட்டியிடும் வேட்பாளர்களைப் பற்றிய தகவல்களை வாக்காளர்களுக்குத் தெரிவிக்க முயற்சி எடுத்தது. அதன்படி சுமார் 2 லட்சம் வேட்பாளர்களின் பின்புலம் முழுவதையும் தகவல்களாகத் திரட்டி, இணைய தளத்தில் வெளியிட்டது. இதனால் வாக்காளர்கள் தங்களின் வேட்பாளர்களைப் பற்றி ஆதாரப்பூர்வமாகத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது.

உச்சநீதிமன்றம் 2013–இல் வெளியிட்ட ஒரு தீர்ப்பில் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மீது நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப் பட்டிருக்குமானால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி தங்களுடைய எம்.பி., எம்.எல்.ஏ. பதவியை அவர்கள் இழந்துவிடுவார்கள் என்று அறிவித்தது.

இதன்பிறகு, வேட்பாளர்கள் தங்கள் மீது குற்ற வழக்குகள் இருந்தால், அவற்றை வாக்காளர்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஊடகங்கள் மூலமாக விளம்பரங்கள் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. ஆனால், ஊடகங்கள் மூலமாக அவ்வாறு விளம்பரங்கள் செய்யப்படவில்லை. சம்பந்தப்பட்ட வேட்பாளர்களை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்தியது. குற்றம் சாட்டப்பட்ட அந்த வேட்பாளர்கள் உச்சநீதிமன்றத்தின் கட்டளைகளை மீறவில்லையென்றும், நிறைவேற்றி விட்டதாகவும் கூறினார்கள்.

எப்படி என்று உச்சநீதிமன்றம் கேட்டபோது, தொலைக்காட்சி ஊடகத்தில் தங்களின் குற்றப் பின்புலத்தை விளம்பரப்படுத்தியுள்ளதாகவும், பத்திரிகையிலும் அதேபோலச் செய்துள்ளதாகவும் வாதிட்டார்கள். அப்போதுதான் ஒரு ரகசியம் வெளியானது.

யாருமே பார்க்காத தொலைக்காட்சி ஊடகங்கள் பல உள்ளன. அதேபோல் யாருமே படிக்காத பத்திரிகைகளும் பல உள்ளன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றில் தங்களுடைய குற்றப் பின்புலத்தை இந்த வேட்பாளர்கள் விளம்பரப் படுத்தி, உச்சநீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றியுள்ளனர். இது அவர்களுடைய சாமர்த்தியத்தைத்தான் காட்டியது.

அதனால்தான் வாக்காளர்களுக்கு எதுவும் தெரியாமல் குற்றப் பின்புலம் உள்ள 233 பேர் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். வாக்காளர்களுக்கு மத்தியில் இந்த வேட்பாளர்கள் தாங்கள் செய்த குற்றத்திற்காக ஜாமீனில் வெளிவந்திருப்பதாகவும் பெயில் வாங்கி நடமாடுவதாகவும் எல்லோரும் பார்க்கக்கூடிய பிரபலமான தொலைக்காட்சி ஊடகங்களிலும், பிரபலப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தியிருந்தால், நிச்சயமாக வாக்காளர்களுக்கு மத்தியில் அவர்களைப் பற்றி ஓர் அபிப்பிராயம் உருவாகியிருக்கும்.


ஆனால் இவர்களோ, சட்டப்படி விளம்பரப் படுத்தியதாகச் சொன்னாலும் அதனைச் சாமர்த்தியமாகச் செய்துள்ளனர். இதனைக் கண்ட உச்சநீதிமன்றமே பிரபலமான தொலைக்காட்சி ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் ஏன் விளம்பரப்படுத்தவில்லை எனக் கேட்க வேண்டியதாகியது. அதனால், பிரபலமான தொலைக்காட்சி ஊடகத்திலும் பிரபலமான பத்திரிகையிலும் விளம்பரம் செய்யுங்கள் என்று உச்சநீதிமன்றம் சொன்னால், உச்சநீதிமன்றமே அவற்றை ஆதரிப்பதாக ஆகிவிடும்.

அதனால், குற்றம் சாட்டப்பட்ட இந்த எம்.பி.–க்களின் பின்புலம் வாக்காளர்களுக்குத் தெரியாமலேயே போய்விட்டது. 233 பேர் அப்படி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை ஜனநாயகச் சீர்திருத்த அமைப்புதான் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளது.

இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும் சம்பந்தப்பட்ட கட்சிகள் முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இப்போதாவது நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுக்குமானால், இந்த எம்.பி.–க்களால் அந்தக் கட்சிக்கான பலம் குறையாதா என்ற கேள்விக்கு விடை இல்லை. நீங்களும் இது போன்றவற்றை எழுதி அனுப்பலாமே!

– ஆரோ

வாசகர் கடிதங்கள்



பிரதமர் மோடி மோன நிலையில் தியானத்தில் வீற்றிருக்கும் இனிய அழகுக் காட்சியை 'ஓம் சக்தி' 2019 ஜூன் இதழின் அட்டையில் கண்டு மிகவும் மகிழ்ந்தேன்.

– மு. இராமு, திருமங்கலம்.

பாரத நாட்டின்மீது தேசபக்தி ஏற்பட, தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்திட வேண்டும் என்று 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியிருந்த ஐயா மகாலிங்கனாரின் கருத்து நேற்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும் தேவையான பரந்த சிந்தனை.

– ப. மூர்த்தி, பெங்களூரு.

எழுத்துக்களின் திசை வடிவம் குறித்தான பேரா. இரா. மதிவாணனின் தகவல் அரியது. இதுகூட, சிந்துச் சமவெளியே நாகரிகத்தில் முந்தையது என்பதைப் பறைசாற்றுகிறது.

– எஸ்.ஜி. இசட்கான், திருப்பூர்.

'ஓம் சக்தி' 2019 ஜூன் இதழில் டாக்டர் எஸ். பத்மநாபன் வழங்கியிருந்த வள்ளுவரின் வரலாற்றுச் சுவடுகள் கட்டுரை, வள்ளுவப் பெருந்தகையின் மறுபக்கத்தினைப் புரட்டிக் காண்பித்தது.

– இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

மரபின் மைந்தன் முத்தையாவின் 'பழகிப் பார்த்ததில் இவர்கள்' பகுதியில், கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் பற்றிய தகவல்கள் சிறப்பான கருத்துக்களடங்கிய தொகுப்பு. இதுபோன்ற பலரின் சம்பவங்கள் மேலும் விரியட்டும்.

– மு. இலக்குமணன், திருச்சி.

'கிருஷ்ணனுக்குக் காது குத்துதல்' என்ற கட்டுரையைப் படித்தபோது, கிருஷ்ணனுக்குக் காது குத்தும் விழாவில் நேரில் கலந்து கொண்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. கட்டுரையாசிரியருக்குப் பாராட்டுக்கள்!

– ரவிச்சந்திரன், ஆவுடையாள்புரம்.

'ஓம் சக்தி' ஜூன் 2019 இதழ், பிரதமர் மோடி குகையில் தியானம் செய்யும் அட்டைப்படம் அருமை. தியானத்தின் பெருமையைப் போற்றுவதாக அமைந்திருந்தது.

– சுப்ரமண்ய வெங்கடாசலம், கூழிபிறை.

கட்சிக் கொடிகளைக் கைவிட்டுத் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தினால், தேசபக்தியை வளர்க்கலாம் என்று 'சுரங்கம்' பகுதியில் அருட்செல்வர் கூறியுள்ள கருத்துக்களை எல்லா மாநில அரசுகளும், மத்திய அரசும் உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

– என்.ஆர். ஜெயசந்திரன், காவேரிப்பட்டணம்.

ஆர்னிகா நாசரின் 'வாசியுங்கள் வாரிசுகளே' எனும் சிறுகதை, மிக அருமை. நம் இளைய தலைமுறையினர் பலரைச் சிந்திக்க வைக்கும் கருத்து. முடிவும் சிறப்பு!

– ஜெயா ராஜாமணி, மதுரை.

டாக்டர் எஸ். பத்மநாபன் அவர்களின் 'வள்ளுவரின் வரலாற்றுச் சுவடுகள்' கட்டுரை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழக வரலாற்றைக் கிளறிக் காட்டியது.

– இராம. கண்ணப்பன், திருநெல்வேலி.

ஜூன் மாத 'ஓம் சக்தி' இதழில் வெளியான 'புவி அடையாளக் குறியீடு பெற்ற ஈரோடு மஞ்சள்' கட்டுரை, அவ்வட்டாரத்து மஞ்சள் மகிமையினைப் பறைசாற்றுவதாக இருந்தது. அற்புதமான கட்டுரை.

– உஷா முத்துராமன், திருநகர்.

விவசாயிகளின் விடியல் 'உயிர் அக்ரி கல்ச்சர்' நேர்காணல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இத்திட்டத்தை வீடு தோறும் பரவிடச் செய்ய வேண்டும்.

– லிங்கம் சின்னசாமி, தாராபுரம்.

குழந்தையை மையமாக வைத்து மு. இராகுலதாசன் படைத்திருந்த 'வீடு' சிறுகதை வித்தியாசமான கருத்தோட்டத்துடன் அமைந்திருந்தது.

– ஏ. பாஸ்கர், சேலம்.

சொல்லில் அமுதூறும் காலம்



கிழக்கில் எழுந்துவரும் – சிறு
கீற்றென நீயிருந்தாய்
பழகப் பழகிடவே – பொன்
பவுர்ணமி யாகிவிட்டாய்.

முதன்முதல் பார்க்கையிலே – உன்
மோகனப் புன்னகையில்
இதயத்தில் நீநுழைந்தாய் – பின்
என்னையே கொள்ளையிட்டாய்.

பார்க்கும் பொழுதெல்லாம் – விழியால்
பாடம் நடத்தி நீ
சோர்ந்துநான் நிற்கையிலே – சொல்லில்
சோகம் அழித்ததையும்

சின்ன மலருதட்டில் – நீ
செதுக்கிய சிற்பங்கள்
துன்பம் துடைத்ததையும் – நான்
சொல்ல முடிந்திடுமோ?

கொஞ்சும் மொழியறிவேன் – உன்
கோலச் சிரிப்பறிவேன்
நெஞ்சத் துடிப்பினிலே – உன்
நினைவின் சுமையறிவேன்.

கண்ணில் சுடர்வீசும் – நம்
காதல் நெருப்பினிலே
என்னை உருக்கிவிட்டாய் – அதை
எப்படி நான் சொல்வேன்?

ஞாபகப் புல்வெளியில் – நீ
நாட்டிய மாடுகிறாய்
தாபங்கள் தீர்ந்திடுமோ? – நம்
தவிப்புகள் தீர்ந்திடுமோ?

மனமெனும் வீணையினை – நீ
மவுனத்தில் வாசித்தே
எனக்கொரு வானத்தை – நீ
எடுத்துக் கொடுத்துவிட்டாய்.

மோகன ராத்திரிகள் – உன்
முகத்தை நினைத்தபடி
சாகசம் செய்யுதடி – மனச்
சங்கடம் தீருதடி.

சொல்லில் அமுதூறும் – உன்
சுந்தரப் புன்னகையில்
உள்ளத்தில் எத்தனையோ – தேன்
ஊற்றுகள் ஊறுதடி!

காலை இளங்காற்று – என்
காதைத் தழுவுகையில்
சோலை மலர்வனமே – என்
சிந்தை குளிருதடி!

பொன்னொளி பூத்துவரும் – இந்தப்
பூமிப் பரப்பெங்கும்
உன்முகம் காணுகிறேன் – ஏதோ
உன்மத்தம் ஏறுதடி!

என்மனச் சித்திரமே! – உனை
எண்ணித் தவிக்கையிலே
என்னை இழந்திருப்பேன் – நான்
எப்படி வாழ்ந்திருப்பேன்?



– கவிஞர் சென்னிமலை தண்டபாணி

திருக்குறளில் உள்ளவை பாலியல் வன்முறைகள் அல்ல!



திருவள்ளுவர்

'ஓம் சக்தி' ஏப்ரல் 2019 இதழில் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் 'இன்றைய வாழ்வியல் சிக்கல்களும் திருவள்ளுவர் தரும் தீர்வுகளும்' என்ற கட்டுரையை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில் பாலியல் வன்முறைப் பதிவுகள் திருக்குறளில் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்வினையாகப் 'பாலியல் வன்முறைகள் குறித்த பதிவுகள் திருக்குறளில் இல்லை' என்று நான் எழுதிய கட்டுரை 'ஓம் சக்தி' மே இதழில் இடம்பெற்றது.

இப்போது மறுபடியும் 'திருக்குறளில் பாலியல் வன்முறை' என்று ஜூன் மாத இதழில் முனைவர் கு. மோகனராசு எழுதியிருக்கிறார்.

திருக்குறளில் பாலியல் வன்முறைப் பதிவுகள் இருப்பதாகக் கூறும் இவர், அதற்குத் திருக்குறளில் உள்ள 'பிறன்இல் விழையாமை' என்ற அதிகாரத்தை முதலில் சுட்டிக் காண்பிக்கிறார்.

பிறன்இல் விழையாமை என்பதற்குப் பிறர் மனைவியை விரும்பாமை என்பது பொருள். இதில் பாலியல் வன்முறையை இவர் எப்படிக் காண்கிறார்? 'பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு' (குறள் 148) என்பது இந்த அதிகாரத்தின் ஒரு குறள்.

மற்றொருவர் மனைவியை விரும்பாத பெருமைமிகு சான்றோருக்கு இது அறம் மட்டுமன்று, சிறந்த ஒழுக்கமும் ஆகும் என்பது இக்குறளின் பொருள்.

ஆக, பிறரது மனைவியைப் பெண்டாள விரும்புவது ஒழுக்கக்கேடு, அறத்துக்குப் புறம்பானது என்று பலவாறு

பழித்துரைக்கிறார் வள்ளுவர். மற்றொருவர் மனைவி மீது விருப்பம் கொண்ட அளவில் அது எப்படிப் பாலியல் வன்முறையாக ஆகிவிடும்?

'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில், சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் / நிறைகாக்கும் காப்பே தலை' (57) என்ற குறள் உள்ளது. சிறைப்படுத்துவது போல் மனையாளை வீட்டிலேயே கட்டுப் படுத்தி வைப்பதால் என்ன பயன்? மனைவியின் நிறை என்னும் கற்பின் காவலே தலைசிறந்த காவலாகும் என்கிறது இக்குறள். இங்குப் பாலியல் வன்முறையை எப்படிக் காண்கிறார் கட்டுரையாளர் என்பது புலப்பட வில்லை.

காமத்துப்பாலின் முதல் ஏழு அதிகாரங்களைக் களவியல் என்று பரிமேலழகர் பிரித்தது தவறு என்றும், இவற்றில் புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதல் சிறப்புரைத் தல் ஆகிய மூன்று அதிகாரங்களும் களவிற்கு உரியன அல்ல, கற்பிற்கே உரியன என்றும், மீதமுள்ள நான்கு அதிகாரங்கள் – தகையணங்கு உறுத் தல், குறிப்பு அறிதல், நாணுத்துறவு ரைத்தல், அலர் அறிவுறுத்தல் ஆகியவையே களவியலுக்கு உரியன என்றும் வரையறுக்கிறார் கட்டுரை யாளர்.

இந்தக் களவியல் அதிகாரங்களில் ஆண் – பெண் உறவு பற்றி எதுவும் இல்லை என்கிறார். இவர் குறிப்பிடும் அலர் அறிவுறுத்தல் அதிகாரத்தில் ஒரு குறள் :

"உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து" (1143)

காதலைப் பற்றி ஊர்மக்கள் பழித் துப் பேசுவது எமக்குப் பொருந்தாதா? அவளது காதலை, மறுபடியும் யான் பெறாவிட்டாலும் ஊரவர் பழிச்சொற் களால் நான் அதனைப் பெற்று

க.சி. அகமுடைநம்பி

விட்டது போல் உணர்கிறேன் என்று தலைவன் கூறிக் கொள்வதாக இக் குறள் அமைந்துள்ளது.

நாணுத் துறவுரைத்தல் அதிகாரம் தலைவன் மடல் ஏறுவதை விவரிக் கிறது. நாணத்துடன் நல்ல ஆண்மை யையும் கொண்டிருந்த நான் இப் போது எங்கள் காதலை ஊர்அறியச் செய்ய மடல் ஏறியுள்ளேன் (1133) என்று தலைவன் கூறுகின்றான். இவை போன்ற குறள்கள் தலைவனும் தலைமகளும் களவியலிலேயே உடல் உறவைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதைச் சொல்லாமல் சொல் கின்றன. புணர்ச்சி மகிழ்தல் கள வியலில் இருப்பதால் தானே தலை வனின் இவை போன்ற உருக்கமான புலம்பல்கள் வெளிப்படும்?

'அணங்கு கொல்' என்று தொடங் கும் குறள் ஆய்மயில் கொல்லோ என்று தொடர்கிறது. குறிஞ்சி நிலத் துக்குரியது மயில் என்கிறார் கட்டுரை யாளர். ஆனால் குறிஞ்சி நிலத்தில் மட்டுமின்றி, எங்கெல்லாம் மரங்கள் அடர்த்தியாக உள்ளனவோ, அங்கெல் லாம் மயில்கள் இருக்க வாய்ப்பு உண்டு.

மதுரை மாவட்டம் தே.கல்லுப் பட்டி ஒன்றியத்தில் தி.குன்னுத்தூர் என்ற ஊரில் உள்ள 20 ஏக்கர் கரிசல் நிலத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான எண்ணிக்கையில் வேப்ப மரங்களை வளர்த்து வருகிறேன். இந்த வேப்பந் தோப்பில் இருபதுக்கும் மேற்பட்ட மயில்கள் இருப்பதைக் காண்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில், கட லுக்கு அருகில் உள்ள தேரிக்காட்டில் மயில்கள் இருப்பதாக கே.எஸ். இராதாகிருஷ்ணன் தினமணி (6.4.2019)–யில் எழுதியுள்ள கட்டுரை யில் தெரிவித்துள்ளார்.

ஆக, திருக்குறள் காமத்துப்பாலில் திருவள்ளுவர் காண்பிக்கின்ற தலைமகள், தலைமகன் இருவரும் முறையே குறிஞ்சி, நெய்தல் நிலத்துக்கு உரியவர்கள் என்று கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பது அவரது கற்பனை வளத்தைக் காண்பிக்கலாம்; மெய்ம்மை நிலையாகாது.

ஆகவே, திருக்குறளில் கலப்பு மணம் என்று கூறுவது சரியாகாது. சாதி, சமயம், மொழி, இனம், இடம் என்ற எந்தப் பிரிவுக்கும் உட்படாத, உலகப் பொது அறப்பனுவலாம் திருக்குறளில் கலப்புமணம் என்ற சொல்லாடலைப் புகுத்த வேண்டாம் என்று முனைவர் மோகனராசு அவர்களைச் சிரம் தாழ்த்தி வேண்டுகிறேன்.

கணவன் – மனைவியிடையே ஒத்த காமம் – சமமான அளவில் காம உணர்வு இருப்பது இருவருக்கும் இனியது என்பதை, ‘ஒருதலையான் இன்னாது காமம்காப் போல / இருதலை யானும் இனிது’ எனும் குறள் தெளிவுப்படுத்துகிறது என்கிறார் கட்டுரையாளர்.

நன்று. காம உணர்வெழுச்சி கணவன் – மனைவி இருவர்க்கும் ஒரே நேரத்தில் ஏற்படுவதில்லை. சில நாட்களில் மனைவியிடம் காம எழுச்சி முந்துறும். ‘பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால் / காம நோய் சொல்லி இரவு’ (1280) என்ற குறள் இதனைச் சுட்டுகிறது.

மனைவியின் கண்கள் அவளது காம எழுச்சியை வெளிப்படுத்தி, அதிலிருந்து தன்னை விடுவிக்குமாறு, தலைவனை இறைஞ்சுகின்றனவாம். இது எப்படி உள்ளதாம்; பெண்ணின் பெண்மைக்கு மேலும் பெண்மையைச் சேர்ப்பதாக உள்ளதாம். இதனைக் கண்ணுற்ற கணவன் தானும் எழுச்சியுற்று உடல் உறவுக்கு ஆயத்தமாவான். இது ஒரு நிலைப்பாடு.

“பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்

பெண்மை உடைக்கும் படை” (1258).

பல்வகை மாயம் செய்கின்ற கள்வரான இவருடைய பணிவான சொற்கள் அல்லவா நம் பெண்மையின் இறுக்கத்தை உடைத்திடும் படையாக உள்ளன என்பதை உணர்கின்ற மனையாள் உடல் உறவுக்கு அணியமாகிறாள்.

இவ்வாறாகக் காமம் உந்துதல் மனையாளுக்கு ஒரு நாள் என்றால் கணவனுக்கு இன்னொரு நாள் முந்தி ஏற்படுவதும் குடும்ப வாழ்க்கையில் இயல்பான நடைமுறையாகும். ஒருவரிடம் காம உணர்வு தோன்றாச் சூழலில் மற்றொருவர் உடலுறவு கொள்ள முந்துகிறார் என்ற நிலையிலும் சமநிலை உறவு இயல்பாகவே ஏற்பட்டுவிடும். இங்குப் பாலியல் வன்முறை என்ற கேள்விக்கே இடமில்லை.

“மலரினும் மெல்லிது காமம் சிலரதன்


செவ்வி தலைப்படு வார்” (1289)

என்ற குறளின்படிக் காமத்தை மலரைவிட மென்மையாகக் கருதிக் கையாள்பவர்கள் சிலரேயாவர். பெரும்பாலான ஆடவர்களும் பெண்களும் அப்படிக் கருதுவதில்லை. இதுதான் உலக நடைமுறை. அதனால் பெரும்பாலானவர்கள் பாலியல் வன்முறையில் ஈடுபடுகிறார்கள் அல்லது இந்த வன்முறைக்கு இலக்காகிறார்கள் என்று சொல்லிவிட முடியுமா?

நடைமுறையில் சிலர் வன்முறையில் ஈடுபடலாம் அல்லது வன்முறைக்கு இலக்காகலாம். ஆனால், பாலியல் வன்முறைப் பதிவு எதுவும் திருக்குறளில் இல்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். ●

மூலாதாரம் எங்கே உள்ளது?

டாக்டர் மரு. இரத்தின ஜனார்த்தனன்



மூலாதாரம் என்பது நமது உடலிலுள்ள ஏழு சக்கரங்களில் ஒன்று. 1) மூலாதாரம், 2) சுவாதிஸ்டானம், 3) மணிபூரகம், 4) அனாகதம், 5) விசுத்தி, 6) ஆக்னா, 7) சகஸ்ராரம் (துரியம்).

‘மூலாதாரத்தின் மூண்டெழும் கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவித்தே...’ என்று ஔவையார் பாடுகின்றார். மூலாதாரத்தில்தான் குண்டலினி சக்தி என்ற ஆற்றல் உற்பத்தியாகிறது. அதனைக் காலால் எழுப்புதல் என்பது மூச்சுப் பயிற்சிக்குரிய காற்றால் உருவாக்குவதாகும் (கால் என்பது காற்று). இந்தச் சக்தியை ஒருவரால் மூச்சுப் பயிற்சியின் மூலம் உருவாக்கத் தெரிந்து கொண்டுவிட்டால், அவருக்கு அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும் வாய்க்கும் என்கிறார் ஔவையார்.

மூலாதாரம் என்பது புராஸ்டேட் சுரப்பிக்குக் கீழே அமைந்துள்ளது. இதற்கும் ஆண்களின் பாலியல் சுரப்பிக்கும் தொடர்புள்ளது. இந்தப் புராஸ்டேட் சுரப்பி என்பது ஆண்களுக்கு மட்டுமே உள்ளது. பெண்களுக்கு இதற்கு இணையானது அவர்களின் கருப்பையில் உள்ள சினை முட்டையை உற்பத்தி செய்யும் சுரப்பியாகும். சித்த மருத்துவத்தில் இது குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

சித்த மருத்துவம் நோய்களை வாதம், பித்தம், கபம் என்று மூன்று பிரிவுகளாகப் பகுத்துள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்குச் சித்த மருத்துவம் பல்லாண்டுகளாகச் சிகிச்சை அளித்துவருகிற மருத்துவமாகும்.

இதேபோல பாரசீகப் பகுதியில் யுனானி, சீனாவில் அக்குபங்ச்சர், கேரளாவில் ஆயுர்வேதம், ஜெர்மனியில் ஹோமியோபதி, ஐரோப்பாவில் அறுவைச் சிகிச்சையோடு சேர்ந்த அலோபதி எனச் சிகிச்சை முறைகள் உள்ளன.

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா அவர்கள் இந்த விதவிதமான சிகிச்சை முறைகளை எல்லாம் பரிசீலித்து, ஒரு சிகிச்சை முறையில் குணப்படுத்த முடியாத வியாதியை எந்தச் சிகிச்சை முறையில் குணப்படுத்த முடியுமோ அதனை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுவார். உதாரணம், மஞ்சள் காமாலை நோய். இந்த நோயாளிக்குக் கண்கள் மஞ்சளாக இருக்கும். சிறுநீர் கழித்தால் மஞ்சளாக இருக்கும்.

இதற்குக் காரணம், கல்லீரலில் (லிவர்) நோய் ஒருவருக்குப் பாதித்துள்ளது என்று பொருள். இது மரணத்தைச் சம்பவிக்கக் கூடியது. இதற்கு அலோபதி வைத்தியத்தில் ஒருவிதச் சிகிச்சை முறை உள்ளது. ஆனால், நமது சித்த மருத்துவத்தில் இந்த மஞ்சள் காமாலை நோய்க்குக் கீழாநெல்லி என்ற ஒரு தாவரத்தின் இலையை அரைத்து, கலக்கி குறிப்பிட்ட நாள்கள் குடித்தால், கல்லீரலைத் தாக்கியுள்ள நோய்க் கிருமிகளை அது

கொன்றுவிடும். நோயாளியும் விடுதலை பெறுவார்.

எல்லா வைத்தியங்களையும்விட, இந்தக் கீழாநெல்லி ஒன்றுதான் மஞ்சள் காமாலைக்குச் சிறப்பான சிகிச்சையாகும் என்று ஒப்புக்கொண்ட அலோபதி எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள் கீழாநெல்லி இலையைக் கேப்சூல்களாக மாற்றி விற்பனைக்கு அனுமதித்துள்ளனர்.

அப்படியென்றால், ஒரு சிகிச்சை முறையில் குணப்படுத்தத் தாமதமாகும் வியாதியை இன்னொரு சிகிச்சை முறையில் விரைவில் குணப்படுத்த முடியும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது.

அதனால்தான் அருட்செல்வர் இந்த அனைத்து வைத்தியங்களின் சிகிச்சை முறைகளையும் சேர்த்து 'ஒருங்கிணைக்கப்பட்ட சிகிச்சை முறை' (United Treatment) என்ற ஒன்றை உருவாக்க வேண்டுமென்று விரும்பினார். அதற்காகவே கோவையில் சித்த மருத்துவ இலவசச் சிகிச்சையைத் தொடங்கினார்.

இந்தப் பின்புலத்தில் புராஸ்டேட் கிலாண்ட் கேன்சர் எனப்படும் இந்த நோயைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், அதை வருமுன் தடுப்பதற்கும், வந்தபின் குணப்படுத்துவதற்கும் உரிய சேவையை டாக்டர் மரு. இரத்தின ஜனார்த்தனன் அவர்கள் பாண்டிச்சேரியில் செய்து வருவதை ஒரு கட்டுரையாக வழங்கியுள்ளார். வாசகர்கள் அதைப் படித்துப் பயன்பெறலாம்.

– **இ.ஆர்.**

மலக்குடலின் முடிவிலும், சிறுநீர்ப் பையின் சிறுநீர்த் தாரையின் முதலிலும் உள்ள இடைப்பட்ட வெளியில் அமைந்துள்ள சுரப்பிதான் 'மூலாதாரச் சுரப்பி'. இதனைப் புராஸ்ட்டேட் சுரப்பி (Prostate Gland) எனலாம்.

மூலாதாரச் சுரப்பி முழுக்க முழுக்க ஓர் ஆணின் பாலியல் சுரப்பியாகும். அதாவது 'டெஸ்ட்டிஸ்' (Testes) என்று சொல்லப்படும் விந்தகங்களில் உருவாகும் விந்தணுக்கள், விந்துச் சவ்வறையில் (Epididymis) தங்கி, அங்கு உற்பத்தியாகும் ரசப் பொருள்களோடு விந்துக் குழல்கள் (Vas Deferens) வழியாக, இரு பக்கங்களிலும் பயணம் செய்து விந்துப் பைகளில் (Seminal Vesicles) தேக்கி வைக்கப்படுகின்றன.

இதனூடே ஒருங்கிணைக்கப்பட்டுள்ள மூலாதாரச் சுரப்பி, ஓர் ஆண் வயதடைந்த பிறகு உடலுறவின் காரணத்தாலோ, இரவு நேரக் கனவுகளின் உந்துதலின் காரணத்தாலோ அல்லது சுய இன்பம் காரணத்தாலோ ஊக்குவிக்கப்பட்டு, விந்துக் கழிவோ, விந்துக் கசிவோ ஏற்படுகின்றது. அப்போது இவையெல்லாம் ஒன்றாக இணைந்து விந்துநீர் (Seminal Fluid) என்ற பெயரோடு ஆணின் சிறுநீர்த்தாரை வழியாக வெளியேறுகின்றது.

இந்த விந்துநீரில் கிட்டத்தட்ட உயிரணுக்கள் (Spermatozooa) நீங்கலாக மொத்தம் முப்பத்தி ஐந்திலிருந்து நாற்பதுக்கும் வேறுபட்ட உப்புக்களும், தாதுக்களும், மாவுப் பொருள்களும் இருக்கின்றன. இந்தப் பொருள்களில் 30 முதல் 32 மிக முக்கியமான பொருள்கள் மூலாதாரச் சுரப்பியிலிருந்து உற்பத்தியாகின்றன.

பத்து வயது வரை இச்சுரப்பி எந்த வளர்ச்சியும் இல்லாமல் இருக்கும். சிறுகச் சிறுக இதன் தசைகளும் சுரப்பிகளும் நாளுக்கு நாள் வளரத் தொடங்கி, வாலிப வயதில் இரண்டு மடங்காக உருப்பெருக்கம் ஏற்படும். ஆணின் உடல் வளர்ச்சிக்குப் பயன்படும் ஆண் பால் ஹார்மோன்களின் (Male Hormones) உதவியால், இந்த வளர்ச்சி ஊக்குவிக்கப் படும். நாற்பத்தி ஐந்திலிருந்து ஐம்பது

வயதுவரை இதன் வளர்ச்சியில் எந்த மாற்றமும் இன்றி இதே நிலையில் காணப்படும். இதற்குப் பிறகு வயதின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்ப இதன் பெருக்கம் மாறுபட்டு அதிக மாகும்.

சுரப்பி வீக்கம் ஏற்பட்டு வயதான காலத்தில் சிறுநீர்த் தாரை அடை பட்டுப் போவதைப் போன்றே இள மைக் காலத்தில் திடீரென்று ஏற்படு கின்ற சீழ்க்கட்டிகள் சிறுநீர் வழியைத் தடுத்து அதே நிலையை உருவாக்குவது உண்டு. இதோடு மிகக் கொடூரமான ஜுரமும், வலியும், நீரடைப்பும், நீர் எரிச் சலும், ஆசனவாய்க் கடுப்பும் ஏற்படு வதுமுண்டு. நீண்டகாலத்தில் பல சிறு சிறு கற்கள் உருவாகி இச்சுரப்பியின் சதைகளை அழித்து, இதன் உருவத் தையே சுருக்கிவிடுவதும் உண்டு. சிறுநீர் அடைப்பை உண்டாக்குவதும் உண்டு. இதனால் நீர்த்தேக்கம் ஏற்பட்டுப் பல வியாதிகள் உண்டாவது உண்டு.

சில நேரங்களில் நோயாளி உடலின்




டாக்டர் மரு. இரத்தின ஜனார்த்தனன்

அடிப் பகுதியில் அழுத்தத்தை ஏற் படுத்தி முக்கி முனகிச் சிறுநீரை வெளி யேற்றுவார். இவ்வளவு சிரமத்திற்குப் பிறகும் சிறுநீர் முழுவதும் பையிலிருந்து வெளியேறாமல் தங்கிவிடுவதால், மீண் டும் சிறுநீர் கழிக்க வேண்டிய ஓர் உணர்வு ஏற்பட்டு நோயாளிக்குச் சுக வீனமும் மனவீனமும் ஏற்படும்.

ஒரு நாள் ஒரு சொட்டுக்கூட சிறுநீர் வெளியேறாமல் முழு அடைப்பு ஏற் பட்டு சிறுநீர்த் தடை ஏற்பட்டுவிடும். சிறுநீர்த் தேக்கமும் சிறிது சிறிதாக ஏற்படும்.

நாளாவட்டத்தில் சிறு நீர்ப்பை சுருங்கி விரியும் தன்மை குறைந்து, அது ஒரு செயலிழந்த உறுப்பாகி, நரம்பியக்கமும் குறைந்து நோயாளியே உணர முடியாமல் சிறுநீர்க் கசிவு தொடர்ந்து ஏற்படும்.

சிறுநீர் கழிப்பதற்கு முன்பும் பின்புமாக ஓரிரு சொட்டு இரத் தக் கசிவும் ஏற்படுவதுண்டு.



ஆணின் சிறுநீர்த்தாரை வழியாக இயல்பாக அமைந்துள்ள மூலாதாரச் சுரப்பி

பொதுவாக ஐம்பது அல்லது அறு பது வயதைக் கடந்த ஆண் மக்கள் மேலே குறிப்பிட்டுள்ள அறிகுறிக ளோடு வருவார்கள். பொதுவாக எல்லா நோயாளிகளையும் ஆய்வு செய்வதைப் போன்று இவர்களுடைய உடலைப் பரிசோதனை செய்ய வேண் டும். இதில் முக்கியமான பரிசோதனை

மூலவாய்ப் பரிசோதனை (Rectal Examination) அதாவது ஆசனவாய் துவாரத்தில் மருத்துவரின் ஆள்காட்டி விரலை மேலுறையுடன் உட்பொருத்திச் செய்யப்படும் சோதனையாகும். இந்த ஆய்வு மிக முக்கியமான ஆய்வாகும்.

இந்த முறையில் பெருத்தும், பருத்தும், வளர்ந்தும், வீங்கியும் உள்ள மூலாதாரச் சுரப்பி, சிறுநீர்த் தாரைக்கும் மலக் குடலுக்கும் இடையிலே எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது, கனபரிமாணங்கள் எவ்வளவு, அதிலுள்ள சதைப் பிடிப்பு எத்தன்மை வாய்ந்தது, புற்றுநோய் சம்பந்தப்பட்டதா, அல்லது சாதாரணமானதா, இதனுள் சீழ்க் கட்டிகள், கற்கள் ஏதாகிலும் அடங்கியுள்ளனவா என்பதை நீண்ட அனுபவமுள்ள திறமையான சிறுநீரியல் மருத்துவ வல்லுநர்கள் (Urologists) கணித்து விடுவார்கள்.

மருத்துவத் துறையில் அநேக சிறப்பான உள்நோக்கிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் சிறுநீர்ப்பை உள்நோக்கி (Cystoscope) அல்லது சிறுநீர்த்தாரை மற்றும் பை உள்நோக்கியாகும் (Cysto-Urethroscope). இதன் உதவியால் நோயாளியின் சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீர்த்தாரை மாற்றங்கள், வியாதிகள், தாரையின் ஆரம்பத்தில் அமைந்துள்ள மூலாதாரச் சுரப்பி, அதிலுள்ள அதனுடைய வளர்ச்சி, பெருக்கம், தாரையை அழுத்துகின்ற இறுக்கம், இதனால் ஏற்படுகின்ற அமைப்பு இவற்றை நன்குக் கணிக்க முடியும்.

வயது காரணமாக, பெருக்கம் அல்லது வீக்கம் அடைகின்ற சாதாரண நிலை வீக்கத்திலிருந்து (Benign) மாறுபட்ட புற்றுநோய் (Cancer - Malignant) எல்லாவிதத்திலேயும் நோயாளிக்குக் கடுமையான நிலையை உண்டாக்கி விடும். காரணம், புற்றுநோயின் பிறப்பு, வளர்ச்சி, ஆதிக்கம், அழிக்கும் சக்தி, முடிவு இவை உறுப்புக்கு உறுப்பு மாறுபட்டவை. திசுவுக்குத் திசு மாறுபட்டவை. மற்றும் நோயாளிக்கு நோயாளி மாறுபட்டவை.

மூலாதாரச் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் வெகுவேகமாக வளர்ந்து சில நோயாளிகளை மிக விரைவிலேயே கொன்றுவிடுவதுண்டு. ஆனால், சிலரிடம் தொடர்ந்து பல ஆண்டுகள் வளர்ந்து சிறுகச் சிறுகச் சாகடிப்பதுமுண்டு. ஆண்களின் புற்றுநோய் மரணத்திற்கு நூற்றுக்கு இருபது விழுக்காடு மூலாதாரச் சுரப்பியின் புற்றுநோயே (புராஸ்ட்டேட் கேன்சர்) காரணமாகும்.

மூலாதாரச் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் பக்கத்தில் உள்ள உறுப்புகளையும், தூரத்தில் உள்ள உறுப்புகளையும் தாக்குவதுண்டு. புற்றுநோய் செல்கள் உதிர்ந்து இரத்த நாளங்கள் மூலமாகவும், நிணநீர் நாளங்கள் மூலமாகவும் பக்கத்திலும் தூரத்திலும் இருக்கின்ற உறுப்புகளுக்குச் சென்றடைந்து, அங்கே உள்ள உறுப்புகளைத் தாக்கிச் சீரழிப்பதுண்டு.

சான்றாக, இரத்த நாளங்கள் மூலமாகச் செல்லும் செல்கள் இடுப்பு எலும்பு, தொண்டை எலும்பு, முதுகுத் தண்டுவட எலும்பு மற்றும் மூளையைச் சுற்றியுள்ள கபால எலும்பு இவற்றைத் தாக்கி எலும்பு முறிவையும், மரணத்தையும் ஏற்படுத்தும்.

புராஸ்டேட் கேன்சரை மருத்துவ சோதனை மூலம் அறிந்து உரிய சிகிச்சையை உடனடியாகச் செய்து கொண்டால், அதிலிருந்து தப்பித்து விடலாம்.

(டாக்டர் மரு. இரத்தின ஜனார்த்தனன் பாண்டிச்சேரியில் மருத்துவத் தொழில் செய்து வருகிறார். தமிழ்மொழி மீது அளப்பரிய ஈடுபாடுள்ளவர். காந்தியப் பேராசிரியர் சி.எஸ். இராமகிருஷ்ணன் இவரிடம் சிகிச்சை பெறும் நோயாளி மட்டுமல்ல, அந்த டாக்டரின் நலம் விரும்பியுமாவார்.)

●

கட்டுரை



இடைப்பாடி அமுதன்

தமிழகப் பருத்திக்கு ஆங்கிலேயர் பெற்ற பரிசு



ஈரோடு மாவட்டம் பெருந்துறை மற்றும் திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையில் விளைந்த பருத்திக்கு, சென்னை ராஜதானியின் முதல் தரப் பருத்தி என்ற பரிசைப் பெற்றுத் தந்த ஆங்கிலேயரின் பெயர் ஜார்ஜ் ஃபிரடெரிக் ஃபிஷர் (George Frederick Fischer : 1805 - 1867). அவர் சேலத்தைச் சேர்ந்தவர். சேலம் நகரின் ஜமீன்தாராகவும் இருந்தவர்.

கொங்கு நாட்டில் கோயம்புத்தூருக்கு முன்னதாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி, வணிகப் பிரதிநிதி, சென்னை கோட்டையின் நேரடிப் பிரதிநிதியாக இருந்தார். மாவட்டத்தில் சர்வ அதிகாரம் கொண்டிருந்த கலெக்டரிடம் அவர் தன் காரியங்களைச் சாதுர்யமாக நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

அரசாங்கத்தின் நிர்வாகம், வரி வசூல், நீதி பரிபாலனம், பாதுகாப்பு முதலிய பணிகளில் கலெக்டர் ஈடுபட்டிருந்த வேளையில், இங்குக் கிடைக்கும் பொருள்களில் சகாயமானவற்றை

சேலம் மாவட்டத்தில் ஏற்பட்டது (1792). கம்பெனியின் ஆட்சிக்கு வணிகமும் வருமானமும் பிரதான நோக்கங்களாக இருந்தன. கம்பெனி ஆட்சி அமைந்ததும், அதன் வணிகப் பிரதிநிதியாக ஓர் ஆங்கிலேயர் சேலத்தில் நியமிக்கப்பட்டார்.

சில மாதங்களில் அவர் மாற்றப்பட்டு, ராபர்ட் டேஷ்வுட் என்பவர் நியமிக்கப்பட்டார். அந்த இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்தும், உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டும் அதிக லாபம் கிடைக்கச் செய்வது வணிகப் பிரதிநிதியின் வேலை.

இவ்வாறான நோக்கம் கலெக்டருக்கும் இருந்தது. நீலச் சாயம் போட்ட சேலம் துணிகளுக்கு இங்கிலாந்தில் நல்ல வரவேற்பு இருந்தது. அப்படிப்பட்ட நிலையில் சேலம் மாவட்டத்தில்



ஃபிஷர் அணைக்கட்டு

கரும்பு, பருத்தி, துணிகளுக்கு நீலச்சாயம் ஏற்றப் பயன்படும் அவுரிச் செடி (இண்டிகோ), மல்பெரி முதலிய பணப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கி அதிக லாபம் ஈட்டுவதற்காகப் புதிய முயற்சிகளையும் கம்பெனி நிர்வாகம் மேற்கொண்டது.

1799–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் ஜில்லாவும் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. அப்போது கி.பி. 1800–இல் கம்பெனி அரசாங்கத்தின் சார்பில் கோவை மாவட்டத்தில் விரிவாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட டாக்டர் பிரான்சிஸ் புகானன் என்ற அரசு அதிகாரி, சத்தியமங்கலம் பகுதிக்கும் வந்தார். சேலத்திலிருந்த வணிகப் பிரதிநிதி சத்தியமங்கலத்திற்கு வந்து சென்றதைப் பற்றிப் புகானன் குறிப்பிட்டுள்ளார்.

ஃபிரடெரிக் ஃபிஷர் சமாதி



“இந்தப் பகுதியிலுள்ள நெசவாளர்கள் 800 தறிகளை வைத்துள்ளனர். அவர்களில் ஐம்பது பேர் கோணிப்பை நெய்பவர்கள். அவர்கள் பயன்படுத்தும் பருத்தி நூல் இப்பகுதியில் தயாராவதுதான். அவர்கள் தயாரிக்கும் துணிகளின் ஓரத்தில் பயன்படுத்தும் ஜரிகைக்கான பட்டு நூல் சேலத்திலிருந்து வருகிறது. அவ்வாறு தயாராகும் துணிகள் இங்குள்ள அக்கம், பக்கத்து ஊர்களுக்கும், மைசூர் – சீரங்கப்பட்டணத்திற்கும் அனுப்பப்பட்டு விற்பனையாகிறது.

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு சேலத்திலுள்ள வணிகப் பிரதிநிதி, இப்பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று பார்த்து வந்துள்ளார். நெசவாளர்களின் தலைவராக அவர்களில் ஒருவரை நியமித்து, ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்திற்கும் ஒரு மாத உற்பத்தி அளவிற்கான தொகையை முன்பணமாகக் கொடுத்துச் சென்றுள்ளார். அந்தப் பணத்திற்கு அவரே ஜவாப்தாரி. நெசவாளர்களிடமிருந்து வாங்கும் துணிகளுக்கு அவருக்குக் ‘கமிஷன்’ கிடைக்கிறது.

அவர் முன் பணம் கொடுக்கும் துணிகளுக்கு ‘சேலம்பூரு’ என்று பெயர். சிறிது மொத்தமான நூல். இருந்தாலும் அது வங்காளத்தின் ‘பாஃபட்’ துணியைப் போலிருக்கும். இந்தத் துணி மலிவான விலைக்குக் கிடைக்கிறது. இவ்வகைத் துணி அந்த வணிகப் பிரதிநிதி வருவதற்கு முன்பு இங்குத் தயாரிக்கப்பட்டதில்லை.

இவ்வாறு ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்திற்கும் அவர் முன் பணம் கொடுத்து, நெசவாளர்களைத் தொடர்ச்சியாகக் கடன் பட்டவர்களாக வைத்திருக்கும் தந்திரம் தெரிந்தவர் அந்த வணிகப் பிரதிநிதி. அப்போதுதான் அவர்கள் இவருக்கு மட்டுமே துணியை நெய்து தர வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுவார்கள். வெளியாருக்குக் கூடுதல் லாபத்திற்கு விற்கும் நிலை அவர்களுக்கு வராது...”

ஆகவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் (சேலம்) ஆட்சியில் பருத்தி உற்பத்திக்கும், பருத்தித் துணி தயாரிப்பிற்கும் சாயம் போட்டு வண்ணத் துணிகளின் தயாரிப்பு முயற்சிகளுக்கும், சேலம் – கோவைப் பகுதிகளின் கம்பெனி ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஊக்கம் தந்து வந்தனர். சேலம் – பொன்னம்மாப்பேட்டையில் திருமணிமுத்தாற்றின் இடது கரையை ஒட்டி கம்பெனியின் ‘அவுரி’ சாயப்பட்டறை இயங்கத் தொடங்கியது. டேஷ்வுட், தன் அலுவலகம் – குடியிருப்பிற்காக அங்கு பங்களா ஒன்றைக் கட்டினார். அவருக்கு உதவியாளராக சார்லஸ் கார்பென்டர் என்பவர் சேலத்திற்கு வந்தார் (1792).

பின்னர் ராபர்ட் டேஷ்வுட் மாற்றப்பட்டு, கார்பென்டர் (1774 – 1818) சேலத்தின் வணிகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார் (1795). இவர் பிரபல ஆங்கிலக் கவிஞர் – நாவலாசிரியரான சர் வால்டர் ஸ்காட்டின் (1771 – 1832) மைத்துனர் ஆவார் – சகோதரியின் கணவர். இவர் நகரிலுள்ள பொன்னம்மாப் பேட்டையின் வடக்கே திருமணிமுத்தாறைச் சேர்ந்தாற்போலப் பண்ணை நிலம் வாங்கி, பங்களா கட்டிக்கொண்டு அங்கே வசித்தார்.

அவர் நீண்ட காலம் சேலம் வணிகப் பிரதிநிதியாக இருந்தவர். அவர் காலத்தில் துணை வணிகப் பிரதிநிதியாக ஜெ.எம். ஹீத் (J.M. Heath) என்பவர் சேலத்திற்கு வந்தார் (1812). கார்பென்டர், ஹீத் – இருவரும் உறவில் சகலைகள்.

பவானியில் கோயம்புத்தூர் கலெக்டராக இருந்த வில்லியம் கேரோ (W. Garrow) ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தபோது 1815–இல் இறந்தார். அப்போது கேரோவின் தனிப்பட்ட கடிதம் காகிதங்களைப் பரிசீலிக்க ஹீத் அனுப்பப் பட்டார். அப்போது அவருக்குக் கோவை மாவட்டத் தொடர்புகள் கூடியிருக்கும்.

அவர் இரும்புத் தொழில் மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். சேலத்தின் கஞ்சமலையில் உள்ள இரும்புத் தாதுவைக் கண்டறிந்து, பின்னாளில் காவிரிக்கரை பூலாம்பட்டியில் சேலம் இரும்புத் தொழிற்சாலையை நடத்தினார்.

கார்பென்டர் 1818–இல் இறந்துவிட்டார். அவரது சமாதி சேலம் கலெக்டர் அலுவலகம் அருகில் இன்றும் உள்ளது. அவர் தனது திரண்ட சொத்துக்களை வால்டர் ஸ்காட்டின் குடும்பத்தின ருக்கு எழுதி வைத்திருந்தார். (ஆனால் ஸ்காட் டின் இரு மகன்களும் சந்ததியின்றி இறந்தனர் என்பது வேறு கதை).

பொன்னம்மாப்பேட்டையில் ஏற்கனவே கார்பென்டருக்கு உடமையாயிருந்த தோட்டத்தை ஒட்டிய நிலங்களை வணிக நோக்கத்திற்காக ஹீத்தும், திருமதி கார்பென்டரும் 99 ஆண்டுக் காலக் குத்தகைக்கு எடுத்தனர். 1820–ஆம் ஆண்டின் அந்த ஒப்பந்தப்படி ஹீத்திற்கு 4 காணி 18 கிரௌண்டு நிலம், திருமதி கார்பென்டருக்கு 8 காணி 23 கிரௌண்டு நிலம் என ஒதுக்கப்பட்டது. இந்நிலங்களை அடுத்து, கம்பெனியின் சாயப் பட்டறை, அவுரி நிலங்கள் இருந்தன. இவை அனைத்தையும் பின்னர் ஃபிஷர் வாங்கினார்.

ஹீத் வணிகப் பிரதிநிதியாக இருந்தபோது, அவருக்கு உதவியாகச் சேலத்திற்கு வந்தவர் ஜார்ஜ் ஃபிரடெரிக் ஃபிஷர் (1822–இல்). சேலத்தில் வணிகப் பிரதிநிதி அலுவலகம் 1825–இல் மூடப்பட்டது. ஹீத் இங்கிலாந்திற்குத் திரும்பினார் – இரும்புத் தொழில் பற்றி ஆய்வு செய்ய.

ஹீத்தின் சொத்துக்கள், வணிகத்தின் பொறுப்புகளை ஃபிஷர் கவனித்துக் கொண்டார். ஹீத் 1830–இல் திரும்பி வந்தார். இரும்புத் தொழிற்சாலைகளைத் தொடங்கினார். நட்டம் ஏற்பட்டது. 1833–இல் ஹீத்தின் சொத்துக்களை ஃபிஷர் வாங்கினார். அவற்றில் ஈரோட்டிலிருந்த தொழிற்சாலையும், சேலம், ஆத்தூரிலிருந்த இண்டிகோ (சாயம்) தொழிற்சாலைகள், ஈரோடு, கோயம்புத்தூரிலிருந்த கிடங்குகள் முதலியவை அடங்கும்.

பல வகைகளில் தொழில், விவசாயம் சார்ந்த முதலீடுகளில் கிடைத்த லாபம் மூலம் பெரும் தன



கார்பென்டர்
சமாதி

வந்தரானார் பிரடெரிக். சென்னை ராஜதானியில் புகழ் பெற்றவரானார். சேலம் நகரின் வளர்ச்சியில் இவரது பங்கு அபரிமிதமானது. வெடியுப்புத் தயாரிப் பிற்கு அரசாங்கத்தின் மொத்த ‘கான்ட் ராக்ட்’ இவருக்குக் கிடைத்தது. துணிகளுக்கு வண்ணம் பூசும் ‘இண்டிகோ’ தயாரிப்பு, பருத்தி – கம்பளித் துணிகளின் விற்பனை, சேர்வராயன் மலையில் மிகப்பெரிய காபித் தோட்டம், தென் தமிழ்நாட்டின் பல ஜமீன்தாரர்களுக்குப் பிரதிநிதி என்று பல வகைகளிலும் ஈடுபட்டுப் பணம் ஈட்டினார்.

அவரது உச்ச சாதனையாக, சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் கொண்ட சேலம் ஜமீன் உரிமையை 1836–இல் திருமதி நைனம்மாள் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். ஆண் டிற்கு கிஸ்தி ரூ. 17,500 கட்ட வேண்டும். ஜமீ னின் நிகர வருமானம் ரூ. 32 ஆயிரம் ஆக இருந் தது. சேலம் ஜில்லாவில் வருமானம் அளவில் பெரியதாக சேலம் ஜமீன் இருந்தது.

‘ஃபிஷர் அன் கோ’ என்ற பெயரில் காபி, பருத்தி, இண்டிகோ, வெடியுப்பு முதலிய பொருள் களின் உற்பத்தி விற்பனை நிறுவனத்தை நடத்தி வந்தார் ஃபிஷர்.

1862–ஆம் ஆண்டில் இந்தியாவின் கவர்னர் ஜெனரல், பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க ஒரு போட்டியை அறிவித்தார். மொத்தப் பரிசுத்தொகை ரூ. 10 ஆயிரம். சென்னை ராஜதானியில் தரமான, அதிக உற்பத்தித் திறன் கொண்ட பருத்தியை உற்பத்தி செய்பவர்களுக்கான போட்டி அது. உள் நாட்டு விதைகளைக் கொண்டு விளையும் பருத்தி, வெளிநாட்டு விதைகளைக் கொண்டு விளையும் பருத்தி என இரண்டு பிரிவுகளில் போட்டி.

சென்னைக்குத் தெற்கில் உள்ள கோவை, சேலம், தென்னார்க்காடு, திருச்சி, தஞ்சை முத லிய மாவட்ட விவசாயிகளுக்கு முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் என்று ரூ. 3,500–க்கு ஒரு போட்டி; சென்னைக்கு வடக்கிலுள்ள வடஆர்க் காடு, நெல்லூர் முதல் விசாகப்பட்டினம், கஞ்சம் வரையான மாவட்டங்களின் விவசாயிகளுக்கு மொத்தப் பரிசுத்தொகை ரூ. 4,500 என மற்றொரு போட்டி.

வெளிநாட்டுப் பருத்தி வகையைப் பயிரிடும் விவசாயிகளுக்காக, எந்த மாவட்டத்தைச் சேர்ந்த வரானாலும் முதல், இரண்டாம் பரிசுகளாக ரூ. 2 ஆயிரம் என மொத்தப் பரிசுத்தொகை ரூ. 10 ஆயிரம் ஆகும்.

போட்டிக்கான விதி முறைகள் : குறைந்தது பத்து ஏக்கர் நிலத்தில், போட்டியிடும் விவசாயி பருத்தியைப் பயிரிட வேண்டும். ஏக்கருக்கு நாற்பது பவுண்டுக்குக் குறையாமல் உற்பத்தி இருக்க வேண்டும். வெளிநாட்டு விதை என்றால், ஏக்கருக்கு அறுபது பவுண்டுக்குக் குறையாமல் உற்பத்தியாக வேண்டும். இதற்காக அப்பகுதியின் மாவட்ட அல்லது கோட்டத்தின் ஐரோப்பியத் தலைமை வருவாய் அதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும்.

அந்தச் சான்றிதழுடன் பத்து பவுண்டுக்குக் குறையாத பருத்தியை மூடி முத்திரையிட்டு, சென்னையிலுள்ள வர்த்தக சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலத்தில் விளைவிக்கப்பட்டது, எத்தகைய விதை பயன்படுத்தப்பட்டது, எப்போது விளைந்தது, ஏக்கருக்கு விதைக்கப்பட்ட விதைகளின் எடை, விதைக்கப்பட்ட நாள், அறுவடை நாள், அப்பகுதியின் தட்ப வெப்பநிலை, நிலத்தின் மண் வகை, நீர்ப்பாசன வகை, ஏக்கருக்கு உற்பத்தி எவ்வளவு? விதை நீக்கப்பட்ட சுத்தப் பருத்தியின் எடை, விதையை நீக்கப் பயன்பட்ட இயந்திரத்தின் வகை முதலிய நுணுக்கமான விவரங்களைப் போட்டியாளர் தரவேண்டும்.

சென்னையின் வர்த்தக சபையினர் தங்களுக்கு வந்து சேர்ந்த மாதிரிப் பருத்தியை, உற்பத்தியான மொத்தப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கப் போட்டியாளர் அனுமதிக்க வேண்டும்.

மொத்தம் இரண்டு போட்டியாளர்கள் மட்டும் கலந்து கொண்டனர். அவர்கள் 1. பின்னி அன் கோ, 2. சேலத்தின் ஃபிஷர் அன் கோ. சென்னை வர்த்தக சபையின் தலைவர் மற்றும் இருவர் 24 ஜூலை, 1863 அன்று கூடிப் பரிசுக்குரிய பருத்தியைப் பற்றி ஆய்ந்தனர்.

ஃபிஷர் அன் கோ–வினர் கோயம்புத்தூர் சப்–கலெக்டர் வழங்கிய சான்றிதழை இணைத்திருந்தனர். இரு போட்டியாளர்களும் சமர்ப்பித்த சான்றிதழ்கள், போட்டியில் அறிவிக்கப்பட்ட சான்றிதழ் படிவத்தில் இல்லாமல் மாறுபட்டிருந்தன.

இருவரும் சமர்ப்பித்த உள்நாட்டுப் பருத்தி, போட்டியில் எதிர்பார்த்த மாதிரி இருந்ததாகக் கமிட்டியினர் முடிவு செய்தனர். அதுபோல, சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டு வகைப் பருத்தியும் எதிர்பார்க்கப்பட்ட மாதிரிக்கு ஏற்றாற்போல இருந்தது.

ஃபிஷர் அன் கோ சமர்ப்பித்த பருத்தி, நிபந்தனையின்படி ஏக்கருக்கு 60 பவுண்டுக்கு மேல் விளைந்ததாகத் தெரிய வந்தது. இரண்டு போட்டியாளர்களும் சமர்ப்பித்த சான்றிதழ்கள் மாதிரிப் படிவத்தில் இல்லாதிருந்தாலும், அவர்கள் சமர்ப்பித்த மாதிரிப் பருத்தி எதிர்பார்த்த அளவுக்கு இருந்ததைக் கமிட்டியார் உறுதிப்படுத்தினர்.

உள்நாட்டுப் பருத்தியைப் பொறுத்தவரை, ஃபிஷர் அன் கோ சார்பாக உடுமலைப்பேட்டை தாலுகா குடிமங்கலம் கிராமத்தின் முன்சீப் – மணியக்காரரான கிருஷ்ணம நாயக்கன் என்பவர் 28 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டார். விளைச்சலின் மொத்தப் பருத்தியும் பெருந்துறை தாலுகா ஈரோடு குடோனில் வைக்கப்பட்டிருந்தன.

அதுபோல வெளிநாட்டுப் பருத்தி, பெருந்துறை தாலுகா, பாலமங்கலம் கிராமத்தில் 17 ஏக்கர் 22 சென்ட் நிலத்தில் ஃபிஷர் அன் கோவால் பயிரிடப்பட்டது. பாலமங்கலத்தில் வானிலை காரணமாக வறட்சியாக இருந்தது. குடிமங்கலத்தின் வானிலை அருகிலுள்ள ஆனைமலை, தளி மலைகளின் காற்று ஈர்ப்பால் கிட்டத்தட்ட ஈரப்பதமாக இருந்தது என இரு ஊர்களின் பொதுவான தட்ப வெப்ப நிலவரத்தையும் போட்டியாளர் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே, போட்டியின் முடிவாக ‘ஃபிஷர் அன் கோ’–வை உள்நாட்டுப் பருத்தியின் முதல் பரிசான ரூ. 2 ஆயிரத்திற்கும், வெளிநாட்டுப் பருத்திக்கான முதல் பரிசான ரூ. 1500க்கும் தேர்வு செய்தனர். இரண்டாம், மூன்றாம் வகைப் பரிசுக்குப் போட்டியாளர்கள் இல்லாதிருந்ததைக் கமிட்டியார் வருத்தத்துடன் குறிப்பிட்டனர். ஒருவேளை அரசாங்கம் அறிவித்த பரிசுத்தொகை விவசாயிகளைக் கவரவில்லையோ எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

ஃபிஷர் அன் கோ தமது போட்டிக் கடிதத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு வகைப் பருத்தியை உற்பத்தி செய்வது சம்பந்தமாகத் தெரிவித்த குறிப்புகளை மாவட்ட கெஜட்டுகளில் பதிவு செய்திட அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யக் கமிட்டி முடிவெடுத்தது.

இவ்வாறு, சேலத்து ஆங்கிலேயரான ஃபிஷர், கொங்குநாட்டுப் பகுதி பருத்தி விளைச்சலுக்கு ஏற்ற பூமி என்பதை உணர்ந்து, ராஜதானி அளவிலான போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசைப் பெற்றமை போற்றுதலுக்குரியது!

●



சிரித்து வாழ வேண்டும்!

சிரிப்பு என்பது மனித குலத்திற்கே உரிய சிறப்பான அம்சம். மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் செயல்தான் சிரிப்பு. சிரிப்பது உடல் நலத்திற்கு நல்லது. பல ஆராய்ச்சிகளில் இது உறுதி செய்யப் பட்டுள்ளது. சிரிப்பு முக வசீகரத்தைக் கூட்டும் சிரிப்பினால் முகம் அழகு பெறுகிறது.

சிரிப்பதால் மன அழுத்தம், மன இறுக்கம், மன உளைச்சல் குறைகிறது. உடலின் ரத்த ஓட்டம் சீராகிறது. இதனால் இருதயத் துடிப்பும் சீராகும். இரத்த அழுத்த நோய் உள்ளவர்களுக்குச் சிரிப்பு நல் மருந்து!

சிந்தனை, செயல் அதிகரிக்கச் சிரிப்பே சிறந்த மருந்து. யோகாவில் 'சிரிப்பு யோகா' (Laughter Yoga) என்ற பிரிவும் உள்ளது. 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பார்கள். மருத்துவர்கள், செவிலியர்களின் டென்ஷனைக் குறைக்கச் சில மருத்துவமனை களில் 'சிரிப்பு யோகா'வைக் கட்டாயமாக்கியிருக் கிறார்களாம்!

புத்தரின் அமைதி மிகுந்த ஓர் உபந்நியாசக் கூட்டத்தில் திடீரென காஷ்யபன் என்ற சீடர் வாய்விட்டுச் சிரித்தார். உடனே புத்தர் தனது கையிலிருந்த தாமரையை அவரிடம் கொடுத்துச் சென்றார் என்பது புத்த மதத்தில் பிரபலமான கதை. சிரிப்பு என்பது மருத்துவ ரீதியானது மட்டுமல்ல, தெய்வீகமானதும் கூட!

'சிரிப்பை என்னிடமிருந்து எடுத்துக் கொண் டால், அந்த நொடியே நான் இறந்து விடுவேன்' என்று காந்தியடிகள் கூறினார்.

நன்கு சிரித்துப் பழகத் தெரிந்தவர்களுக்கு நண்பர்கள் பலர் இருப்பார்கள். நாம் சிரித்தால் பலரும் நம்மோடு சேர்ந்து சிரிப்பார்கள். ஆனால், அழுதால் தனிமைதான் கிடைக்கும்.

நன்கு சிரிக்கின்றபோது உடலுக்குத் தேவை யான ஆக்சிஜன் நன்கு கிரகிக்கப் படுகிறது. சிரிப்பின் மூலம் மூளையில் 'எண்டோர்ஃபின்' என்ற ஹார்மோன் சுரக்கிறது. இதன்மூலம் மூளை யானது சுறுசுறுப்படைகிறது. மேலும் ஒரு முக்கிய மான விஷயம், அதிகமாகச் சிரிப்பவர்களுக்கு உடலில் உள்ள தேவையற்ற கலோரிகள் எரிக்கப் படுகின்றன. இதனால் உடல் எடை அதிகரிப்பதும் குறைகிறது.

சிரிப்புகளில் பல வகைகள் உண்டு.

இலேசாக வாய் திறக்காமல் சிரித்தால் அதன் பெயர் புன்னகை. அதாவது ஆங்கிலத்தில் Smile!

பற்கள் வெளியே தெரியச் சிரித்தால் 'இளிப்பு' என்பார்கள். ஆங்கிலத்தில் Grin!


வாயை மூடிக்கொண்டு குலுங்கக் குலுங்கச் சிரிப்பதற்குப் பெயர் 'குபீர் சிரிப்பு!' ஆங்கிலத்தில் Chuckle என்பார்கள்.

மற்றவர்களைப் பார்த்து அலட்சியமாய்ச் சிரிப் பதற்கு 'ஏளனச் சிரிப்பு' என்பார்கள். அதை Giggle என்பார்கள் ஆங்கிலத்தில்.

உரத்த குரலில் பெரிதாய்ச் சிரித்தால் 'அட்ட காசச் சிரிப்பு' என்பார்கள். Guffaw என்பது இதன் ஆங்கிலப் பெயர். 'A guffaw a day keeps all worries away' என்பது, 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்ற பழமொழியின் பொருளைத் தருகிறது! எனவே, வாய்விட்டுச் சிரித்து வளமான வாழ்வைப் பெறுவோம்.

– மைதிலி

கட்டுரை



கைம்மைக் கோலமா? கைம்மை வேடமா?

வாலியைக் கொன்று கிஷ்கிந்தை நாட்டிற்குச் சுக்ரீவனை மன்னனாக்குகிறார் இராமன். ஆட்சி நிர்வாகத்தைச் சீர்செய்த பிறகு நான்கு திங்கள் கழித்துத் தன்னை வந்து பார்க்குமாறு சுக்ரீவனுக்குக் கட்டளையிட்டு அனுப்புகிறார் இராமன். அரச போகங்களில் மூழ்கிய சுக்ரீவன் நான்கு திங்கள் கழிந்தும் இராமனைக் காண வரவில்லை.


இலக்குவன்

சினமுற்ற இராமன் சுக்ரீவனைக் கண்டு எச்சரித்து வருமாறு இலக்குவனை அனுப்புகின்றார். சினத்தோடு ஆர்ப்பரித்து வந்த இலக்குவனைத் தடுத்து நிறுத்த அனுமன் வாலியின் மனைவி தாரையிடம் ஒரு திட்டத்தைக் கூறுகிறான்.

அனுமனின் திட்டப்படி, தாரை இலக்குவனை வழிமாற்றம் செய்ய அழகிய இளம் பெண்கள் குழுவை அவன் வரும் வழியில் நிறுத்தி வைக்கிறாள்.

இளம்பெண்கள் கூட்டத்தைக் கண்ட இலக்குவன் அவர்களின் முகத்தைக் காண நாணி நிற்கின்றார்.

அவ்வமயம் தாரை இலக்குவன் கண்ணெதிரில் வந்து நிற்கிறாள். அவள் நின்ற கோலத்தைக் கம்பர் பின் கண்டவாறு காட்சிப்படுத்தியுள்ளார்.

“மங்கல அணியை நீக்கி
மணிஅணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றி
குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக்
கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல்
நயனங்கள் பனிப்ப நைந்தான்”

(கிட்கிந்தைப் படலம் 52)

தாரையின் கைம்மைக் கோலம் இலக்குவனுக்குத் தன் அன்னையர் மூவரின் கைம்மைக் கோலத்தை நினைவுப் படுத்தியது. அவன் உள்ளம் நைந்தது

“ஆர்கொலோ உரை செய்தார் என்று
அருள்வர சீற்றம் அஃக
பார்குலாம் முழுவெண் திங்கள்
பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தி னாளை
இறைமுகம் எடுத்து நோக்கி
தார்குலாம் அலங்கல் மார்பன்
தாயரை நினைந்து நைந்தான்”

(கிட்கிந்தைப் படலம் 51)

கா.மு. சிதம்பரம்

இவ்விடத்தில் ஆய்வுக்கு உரியதாக இருக்கும் சொற்றொடர் "கொங்கலர் கோதை மாற்றி" என்பது. மலர்களைக் களைந்த குழலை உடையவளாக நின்றாள் என்று கூறப்பட்டுள்ளது.

கணவனை இழந்த மகளிர் மலர்சூடாது இருப்பது பல காலமாகப் பின்பற்றப்படும் மரபாகும். அம்மரபின்படி அவள் நின்ற கோலம் வழிபடுதற்கு உரியது.

ஆனால் இந்நிகழ்ச்சி நடைபெறுவதற்குச் சற்று நேரத்திற்கு முன்னர் இலக்குவனின் வேகத்தைத் தடுக்க இளம் பெண்களைத் தாரை அனுப்புகிறாள். அக்காட்சியைக் கூறும் கம்பர் பின்வருமாறு காட்டியுள்ளார்.

"உரைசெய் வானர வீரர் உவந்துறை
அரசர் வீதி கடந்து அகன்கோவிலைப்
புரசை யானையன்னான் புகலோ டுமவ்
விரைசெய் வார்குழல் தாரை விலக்கினாள்"

(கிட்கிந்தைப் படலம் 44)


கம்பர்

இலக்குவன் முன் வந்து நின்ற தாரை மலர் களைக் களைந்து கைம்மைக் கோலத்தில் காணப்பட்டாள். ஆனால் அந்நிகழ்ச்சி நடைபெறுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் விரைசெய் வார்குழலை உடைய தாரையாகக் காணப்பட்டாள். இது ஒரு முரண்பாடாக உள்ளது. தாரை இலக்குவன் முன் நின்றது கைம்மைக் கோலமா? கைம்மை வேடமா? என்பது சிந்திக்கத் தக்கது. ●



தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

இம்மாதராசி பலன்

**"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.7.2019 அன்று கோள்கள் நிலை

		சந்திரன்	சுக்கிரன் ராகு சூரியன்
	08.7.2019 புதன் – வக்ரம் 16.7.2019 சூரி. – கடகம் 23.7.2019 சுக். – கடகம் 26.7.2019 புதன் – வக்ர நிவர்த்தி 30.7.2019 புதன்–மிதுனம்		செவ்வாய் புதன்
சனி (வ) கேது	குரு		



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் ஏற்ற இறக்கங்கள், பாதிபுகள் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை. மாறாக, நற்பலன்கள் தொடரும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உடல் நலிவுகள், வீண் அலைச்சல்கள் ஏற்படக்கூடும். பெற்றோர்க்குச் சிறு உபத்திரவங்கள் ஏற்படக் கூடும். உங்கள் ராசி அதிபதி செவ்வாய் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால் இம்மாதம் மனோபலம், உடல் பலம் குறைந்து காணப்படுவீர்கள். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் கடன், வியாதி, உறவினர்கள் வகையில் பிரச்சனைகள் தோன்றி மறையும்.

குரு 8–இல் நேர்கதியில் சஞ்சரிப்பதால், சுப காரியங்கள் ஈடேற வாய்ப்பில்லை. பொருள் முடக்கம் ஏற்படும் அல்லது உங்களது காரியங்களில் முட்டுக்கட்டை இருந்துவரும். ராகு, சுக்கிரன் 23–ஆம் தேதி வரை 3–ஆம் வீட்டில் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் காமம், மோகம் தலை தூக்கும். இளைஞர்கள் வகை தொகையறிந்து நடந்து கொள்ள வேண்டும். ஒரு சிலருக்குப் பயணங்களில் இனிய அனுபவங்கள் ஏற்படலாம். 9–இல் சனி – கேது சஞ்சரிப்பதால் தர்ம ஸ்தாபனங்கள் நடத்துபவர்கள், ஆன்மிகப் பணிகளில் உள்ளவர்கள் மேன்மையடைவர். புது முயற்சிகளை மாதத்தின் முற்பாதியில் தொடங்கலாம்.



ரிஷப ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பணத்தேவை அதிகரிக்கலாம். சூரியன் – ராகு சேர்க்கையுடன் சுக்கிரனும் சேர்க்கை பெறுவதால் கடன்கள் மூலமாகச் சிலர் பயன் பெறுவர். வயதானவர்களுக்குக் கண் பார்வைக் கோளாறு ஏற்படக்கூடும். ஒரு சிலர் இனிமையாகப் பேசித் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வர். வில்லங்க விவகாரங்களில் வெற்றி ஏற்பட்டுப் பணம் கிடைக்கலாம். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் காரிய வெற்றி ஏற்படும். தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படும். மனோபலம் உற்சாகம் கூடும். பயணங்களால் நன்மை ஏற்படும்.

செவ்வாய் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால் சகோதர வர்க்கத்தார் அல்லது வாழ்க்கைத் துணைவர் வழியில் நன்மை, தீமை ஏற்படலாம். 7–இல் குரு சஞ்சரிப்பதால் சிலருக்குத் திருமண

வாய்ப்புகள் கூடிவரும். புதிய சூழ்நிலையில் சிலர் வாழ வேண்டி வரும். ஒரு சிலர் வாழ்க்கைத் துணைவரை எதிரியைப் போல் பாவிப்பர். 8–இல் சனி – கேது சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் அவசரப்பட்டு முடிவுகளை எடுப்பது கூடாது. மேலும் போக்குவரத்துகளில் மிகக் கவனம் தேவை. பிற மதத்தவரால் சிலர் பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் குழந்தைகளால் செலவும், வருத்தமும் சில நேரங்களில் ஏற்படக்கூடும்.

மிதுனம்



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதிவரை சூரியன் ராசி மீது சஞ்சரிப்பதால், பற்பல சிந்தனைகள் மனதில் ஊற்றெடுக்கும். சலன மனப்போக்குக் காணப்படும். சூரியன் – சுக்கிரன் – ராகு இணைவு காரணமாக மிகக் கூர்மையாக எவ்விஷயத்தையும் ஊடுருவிப் பார்ப்பீர்கள். சில சமயம் உணர்ச்சி உங்களை வென்று புத்தி மழுங்கடிக்கப்படும். குரு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதாலும், சூரியன் – செவ்வாய் இணைவு பெற்று 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதாலும் உடல் நலிவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. வீண் செலவுகள் ஏற்படும். உறவினர்களாலும், ரத்த சம்பந்தம் உடையவர்களாலும் நன்மை, தீமை இரண்டும் சமமாக ஏற்படும்.

சனி – கேது 7–இல் சஞ்சரிப்பதால் சோர்வு காரணமாக உங்களது கடமைகளைச் சரிவர நிறைவேற்ற இயலாது. உங்களது ராசியதிபதி வக்கிர கதியில் சஞ்சரிப்பதால் எந்த ஒரு விஷயத்திலும் முடிவுகளைத் தற்சமயம் மேற்கொள்வது உகந்ததல்ல. திருமணம் முதலிய சுப காரியங்களை எதிர் நோக்கியுள்ளவர்கள் இன்னும் 4 – 5 மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும். நண்பர் பகையாவதும், பகைவர் நண்பராவதும் இம்மாதம் நடைபெற வாய்ப்புண்டு. ஒரு சிலர் பல்வலி முதலியவற்றால் அவதிப்படுவர்.

கடகம்



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் விரயஸ்தானத்தில் ராகுவுடன் சஞ்சரிப்பதால், அரசாங்கத் தண்டனை அல்லது நிந்தனை ஏற்படக்கூடும். புத்திர வர்க்கத்தாரால் சங்கடங்கள் ஏற்படும். தெரிந்தே ஏமாற்றம் அடைய வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் சூரியன் செவ்வாயுடன் இணைவு பெற்று ராசி மீது சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் இறுக்கமான சூழ்நிலைகள் ஏற்படும். கோபம் கொள்வீர்கள். பற்பல தேவையற்ற சிந்தனைகள் வந்தகலும்.

குரு 5–ஆம்வீட்டில் சஞ்சரிப்பதால் எல்லா விதமான பிரச்சனைகளிலிருந்தும் மீண்டு விடுவீர்கள். சுப காரியங்கள் சிலருக்குக் கைகூடி வரும். செல்வம், செல்வாக்கு வரும் மாதங்களில் குறிப்பாக அக்டோபர் மாதம் வரை கூடும். 6–இல் சனி, கேதுவுடன் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால் சிலருக்குச் சொத்து, சுகம் சேர்க்கை ஏற்படும். ராகு, சுக்கிரன் 23–ஆம் தேதி வரை 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ரகசிய உறவுகள் சிலருக்கு ஏற்படும். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் சகோதர வர்க்கத்தார் யாரேனும் பிரச்சனைகளைச் சந்திக்க வாய்ப்புண்டு. புதிய முயற்சிகள் எதுவும் இம்மாதம் வேண்டாம். வெற்றி ஏற்படுவது கடினம்.

சிம்மம்



சிம்ம ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் 11–ஆம் வீட்டில் ராகுவுடன் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் வேற்று மதத்தவர்களது நட்பால் நன்மை அடைவீர்கள். வழக்கு விவகாரங்களில் உங்களுக்குச் சாதகம் ஏற்படும். பொருள் வரவு ஏற்படும். தொழில் வகை பிரபலஸ்தர்களின் நட்பால் நலம் அடைவீர்கள். மாதத்தின் பிற்பாதியில் கவனம் தேவை. சூரியன் செவ்வாயுடன் இணைவு பெற்று 12–இல் சஞ்சரிப்பதால், உங்களது உடைமைகள், சொத்து சுகங்கள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படலாம் அல்லது ஞாபக மறதியால் பொருள் இழப்பு வரும். தீயவர்கள் உங்களின் உடைமைகளைக் கைக்கொள்ளலாம்.

சனி – கேது 5–இல் சஞ்சரிப்பதால் குழந்தைகளின் நலனில் அதிக கவனம் வேண்டும். நீங்களும் ஸ்திரமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். குரு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பதவி உயர்வு யோக திசை நடைபெறுபவர்களுக்குக் கிட்டும். சுக்கிரன் 23–ஆம் தேதி வரை பெண்களால் நன்மையை ஏற்படுத்தும். திருமணம் முதலிய சுப காரியங்கள் குறிப்பிட்ட சிலருக்கே கைகூடும். புதிய முயற்சிகளை மாதத்தின் முற்பாதியிலேயே தொடங்க நன்மை ஏற்படும். இம்மாதம் பிறர் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டாம்.


கன்னி



கன்னி ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 10–ஆமிடத்தில் சஞ்சரிப்பதாலும், ராகுவின் சேர்க்கை சனியின் பார்வை பெறுவதாலும் தொழில் உத்தியோகத் துறைகளில் மாற்றங்கள் ஏற்படலாம். கூடவே ஏதேனும் சிக்கலும் ஏற்படலாம். தகப்பன் – மகன் உறவு பாதிக்கப்படலாம். ஒருசிலர் கோர்ட்டு, வில்லங்க விவகாரங்களில் இறங்க நேரிடலாம். செவ்வாய், சூரியன் இணைவு பெற்று 11–ஆமிடத்தில் மாதத்தின் பிற்பாதியில் சஞ்சரிப்பதால், நண்பர்கள் வகையில் இழப்பு, பிரச்சனைகள் ஏற்படலாம். உத்தியோகஸ்தர்கள் அரசியல் பிரமுகர்களிடம் தெரிந்தே ஏமாற நேரிடலாம், கவனம் தேவை.

4–இல் சனி, கேது சஞ்சரிப்பதால் குடும்பத்திலும், சுய வியாபாரத்திலும் நல்ல சூழ்நிலைகள் நிலவும் வாய்ப்பில்லை. சுக்கிரன் 10–இல் ராகு சேர்க்கை பெற்றும், சனியின் பார்வை பெற்றும் சஞ்சரிப்பதால் பயணங்களிலும் வாகனங்களைக் கையாள்வதிலும் மிகவும் கவனம் தேவை. திருமணக் காரியங்கள் கைகூட வாய்ப்பில்லை. உங்கள் ராசியதிபதி புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் உங்களது எதிர்பார்ப்புகளுக்கு மாறாகச் சம்பவங்கள் நடைபெறும். குரு 3–இல் சஞ்சரிப்பதால் அவப்பெயர் ஏற்படும். உங்களுக்குத் தீய பலன்களையே கூற வேண்டியுள்ளது.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் 9–ஆம் வீட்டில் ராகு, சுக்கிரன் சம்பந்தம் பெற்றுச் சஞ்சரிப்பதால், அரிய பொருள் சேர்க்கை ஏற்படக்கூடும். தெய்வீகக் காரியங்களில் ஈடுபட நன்மை உண்டாகும். பெரியோர் போதனையைக் கேட்கும் சந்தர்ப்பம் சிலருக்கு ஏற்படலாம். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 10–ஆம் வீட்டில் செவ்வாய் சம்பந்தம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தொழில் வழி நன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. இருப்பினும் மனக்கலக்கம், வீண் பயம் ஏற்படும்.

3–ஆம் வீட்டில் சனி – கேது சஞ்சரிப்பதால் உடன் பிறந்தவர்கள் சிறிது காலம் கஷ்டப்படுவர். அதே சமயம் உங்களது ஆஸ்தி, அந்தஸ்து உயரும். 2–இல் குரு சஞ்சரிப்பதால் குடும்பத்தில் நல்லது நடக்கும். சுப காரியங்கள் ஈடேறும். சந்ததி அற்றவர்களுக்குச் சந்ததி ஏற்படும் பாக்கியம் உண்டாகும். கடன் வரவு உண்டாகும். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், சொந்தத் தொழில் செய்வோர் சிறிது கவலையடைவர். இது தற்காலிகமானது. ஒரு சிலர் தங்களது உறவினர்களால் நன்மை, தீமை இரண்டையும் தற்காலிகமாக அடைவர்.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 8–இல் இராகு இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் எதிர்பாராத செலவு, குய்ய ரோகம், அரசாங்கப் பீடை, வாகன பீடை முதலியவை ஏற்படலாம். சுக்கிரன் இணைவு பெறுவதால் வாகனங்களைக் கையாள்வதில் கவனம் தேவை. சூரியன் மாதத்தின் பிற்பாதியில் 9–இல் சஞ்சரிப்பதால் காரியத் தடைகள் ஏற்படும். நற்கர்மங்களாலும், பகீரத முயற்சியாலும் காரிய சித்தி ஏற்படும். நெடும் பயணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

செவ்வாய் நீசம் பெற்று 9–இல் சஞ்சரிப்பதால் சிலர் நாத்திகவாதம் பேசுவர். சனி, கேது வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார விஷயங்களில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும், செலவும் சமமாக இருக்கும். புராண, இதிகாச காவியங்களைக் கற்கவும், போதிக்கவும், தத்துவ விசாரங்களில் இறங்கவும் சிலர் முயற்சிப்பர். ராசி மீது குரு சஞ்சரிப்பதால் கட்டுப்பாடான வாழ்க்கை சிறிது காலம் தொடரும். 23–ஆம் தேதி வரை சுக்கிரன் 8–இல் ராகு சேர்க்கை பெறுவதால் சிலருக்குப் பெண்கள் சம்பந்தப்பட்ட நோய்கள் உண்டாகலாம். நுண் கிருமிகளால் பாதிப்பு ஏற்படலாம், கவனம் தேவை.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் 7, 8–ஆமிடங்களில் சஞ்சரிப்பதால், நற்பலன்கள் குறைவாகவே ஏற்படும். மாதத்தின் முற்பாதியில் சிற்சில எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடலாம். மாற்று மதக்காரர்கள், பெண்களால் அல்லது வயது முதிர்ந்த பெரியவர்களால் அவ்வாறான எதிர்ப்புகள் ஏற்படலாம். மாதத்தின் பிற்பாதியில் எதிர்பாராத சம்பவங்கள், செலவுகள், பிரச்சனைகள் மனக் குழப்பத்தை ஏற்படுத்தலாம். சிலர் விரக்தியின் எல்லைக்கே செல்லக்கூடும்.

செவ்வாய் 8–இல் நீசம் பெறுவதால் குழந்தைகளைப் பாதுகாப்பது அவசியம். சனி – கேது ராசியில் சஞ்சரிப்பதால் அவ்வப்பொழுது உடல்

சோர்வும், மனச் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவருடன் தர்க்கம், விரோதம் பாராட்டுவது நல்லதல்ல. குரு 12–ஆம் வீட்டில் நேர்கதியில் சஞ் சரிப்பதால், அடுத்த 4 மாதங்கள் வரை உங்களது அந்தஸ்து குறைவு படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உங்களால் முடிந்த தான தர்மங்களைச் செய்வது துன்பங்களை அகற்றும். போக்கு வரத்துக்களில் எச்சரிக்கை தேவை. ▲

மகரம்



மகர ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற் பாதியில் 6–ஆம் வீட்டில் ராகு, சுக்கிரன் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால், ஹேஷ்ய பேர நடவடிக்கைகளில் அதிர்ஷ்டம் ஏற்படக்கூடும். மருத்துவம் தொடர்பான கல்வி கற்பவர் களுக்கும், அதில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கும் நன்மையுண்டாகும். அர சாங்கக் காரியங்களில் எதிர்பாராத அனுகூலம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 7–ஆமிடத்தில் சஞ்சரிப்பதாலும், செவ்வாயின் சேர்க்கை ஏற்படுவதாலும் குடும்பத்தில் வீண் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் 6 – ஆமிடத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் பெண்களின் மூலமாக வீண் வெறுப்பை ஏற்படுத்தக்கூடும்.

குரு 11–இல் சஞ்சரிப்பதால், திருமணக் காரியங்களில் இறங்கி ஏமாற்றத்திற்கு ஆளாக வேண்டாம். உங்களுக்கு குருபலன் என்ற ஒன்று எப்பொழுதும் கிடையாது. ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து அம்மாதிரியான காரியங்களில் இறங்குவது நல்லது. 12–இல் சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் வரவேண்டிய நிலுவை களை வசூல் செய்யலாம். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், உறவினர்கள் வகையில் சில அதி ருப்திகள் ஏற்படலாம். இப்பலன் தற்காலிகமானது. ஏற்கனவே முதலீடுகளைச் செய்தவர்கள் இன்னும் சில ஆண்டுகள் பொறுமையுடன் இருக்க வேண் டும். அதன் பின்னரே முதலீடுகளின் பலனை அடயலாம். ▲

கும்பம்



கும்ப ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் 5–இல் சஞ்சரிப்பதால் குழப்பம் ஏற்படும். ராகு, சுக் கிரன் சேர்க்கை ஏற்படுவதால் கணிப்பொறி, உயிரியல், ரசாயனம் முதலிய துறைகளில் ஈடுபாடுள்ளவர்கள் நன்மை யடைவர். சனியின் பார்வை ஏற்படுவதால், குழந் தைகள் நலனில் அக்கறை தேவை. அதுபோல் குடும்பத்தில் மூத்த உறுப்பினர்களின் ஆரோக் கியத்திலும் கவனம் வேண்டும். அரசு, அரசாங்கம் தொடர்பான காரியங்களில் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். மாதத்தின் பிற்பாதியில் 6–ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால் எதிர்ப்புகள் அகன்று விடும். தொழில் துறையில் சில போராட்டங் களுக்குப் பின் வெற்றி ஏற்படும்.

குரு நேர்கதியில் 10–ல் சஞ்சரிப்பதால் இட மாற்றம், தொழில் மாற்றம், தொழில் வழிப் பயணம் ஏற்படலாம். புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் உறவினர் வகையில் – குறிப்பாக மாமன், மாமனார் வர்க்கத்தார் முரணாகச் செயல்பட வாய்ப்புள்ளது. எதிர்பார்ப்புகள் வேண்டாம். சனி – கேது 11–இல் சஞ்சரிப்பதால் காலபைரவர் வழிபாடு நன்மை பயக்கும். திருமணக் காரியங்கள் இன்னும் சில மாதங்கள் கழித்து நடைபெறும். தற்சமயம் முயற்சிக்க வேண்டாம். ▲

மீனம்



மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் 4–ஆம் வீட்டில் சுக் கிரன், ராகு இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் குழப்பம், விரோதம், விஷ ஜந் துக்களால் பீடை, வாகன பீடை, பெற்றோர்க்குப் பாதிப்பு முத லிய பலன்கள் ஏற்படலாம். தொழில், உத்தியோகத் துறையில் அனுகூலமற்ற போக்குத் தென்படும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன், செவ்வாய் இணைவு பெற்று 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் புத்திக் குழப்பம் ஏற்படும். நிலையான முடி வெடுத்து எதையும் செய்ய இயலாது. சிலர் அத்தியாவசியம் கருதிப் பொய் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவர். புத்திரர்களே சத்ரு வாகக் காட்சியளிப்பர்.

9–இல் குரு சஞ்சரிப்பதால் பல பிரச்சனை களுக்கு மத்தியிலும் சில நன்மைகளை அடைவீர் கள். சுப காரியங்கள் வரும் 4 மாதத்திற்குள் நிறைவடையும். 10–இல் சனி, கேது சஞ்சரிப்பதால் உங்கள் தொழில் துறையில் கறுமை சூழ்ந்தது போல் உணர்வீர்கள். பணியாளர்களால் பிரச்சனை கள் ஏற்படும். உங்களது அந்தஸ்தைக் காப் பாற்றிக்கொள்ளப் படாத பாடுபட வேண்டும். புதன் வக்கிர கதியில் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவரால் சில நாட்களில் பிரச்சனைகள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். சுப காரியங்களுக்கும், புதிய முயற்சிகளுக்கும் ஏற்ற மாதம் இதுவல்ல. ●

சர். ஆர்.கே. சண்முகம் செட்டியாரின்

சிலப்பதிகாரப் பதிப்பு

சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சர். இந்தியா – பாகிஸ்தானுக்கு மத்தியில் உள்ள வரவு, செலவுக் கணக்குகள் செட்டியாருக்குத்தான் தெரியும் என்று காந்திஜி அவர்கள் செட்டியார் அவர்களை நிதியமைச்சராக நியமிக்கப் பரிந்துரை செய்தார். அதன்படி, 1947–இல் பாகிஸ்தானுக்கு இந்தியா ரூ. 55 கோடி வழங்கியது. அதனை வழங்கவில்லையென்றால், காந்திஜி உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தார்.

காந்திஜி கோவைக்கு வந்திருந்தபோது ஆர்.கே. சண்முகம் செட்டியாரின் இல்லத்தில்தான் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்.கே. சண்முகம் செட்டியார் காங்கிரஸ்காரர் அல்ல, நீதிக்கட்சிக்காரர். ஆனாலும், காந்திஜியின் நம்பிக்கையைப் பெற்றவர். மிகச்சிறந்த ஆங்கிலப் புலமையுள்ளவர்.

தமிழைக் கற்க வேண்டும் என்ற அவருடைய இதயத் துடிப்பை 73 ஆண்டுகளுக்கு முன்பு சிலப்பதிகார உரை நூலுக்கு அவர் வழங்கிய முன்னுரையில் கண்டு உணரலாம்.

– இ.ஆர்.



முகவுரை

“சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத நேர்ந்தது என்னுடைய வாழ்க்கையில் ஒரு வேடிக்கை என்று நான் கருதுகின்றேன். சிறந்த பழந்தமிழ் நூல்களில் ஒன்றுக்கு உரை எழுதும் படிப்பும், ஆராய்ச்சித் திறமையும் எனக்கு உண்டென்று நண்பர்கள் நினைத்துவிடக்கூடாது. நான் பள்ளியிலும், கல்லூரியிலும் படித்த காலத்தில் தாய்மொழிக்கு மதிப்பில்லை. அந்தக் காலத்து மாணவர்களில் பெரும்பான்மையோருக்குத் தமிழ் உணர்ச்சியுமில்லை. ஆகவே, நான் சர்வகலாசாலைப் பட்டம் பெற்று வெளியேறியபோது, தமிழ்க் கல்வியைப் பொருத்தமட்டில் என் அறிவு, இருள் அடைந்திருந்ததென்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டில், தமிழ்மக்கள் இடையில் குருடனைப்போல் வாழ்ந்து வந்தேன்.

பல ஆண்டுகள் கழிந்தன. மெல்ல, மெல்ல என் அறிவுக் கண்கள் திறந்தன. இருள் மாறி வெளிச்சமும் உண்டாயிற்று. நான் வாழும் நாடு தமிழ் நாடென்று உணர்ந்தேன். இது இளங்கோ வடிகளும், கம்பனும் பிறந்த நாடு. ஷேக்ஸ்பியரும், மில்டனும் பிறந்த நாடல்ல என்று அறிந்தேன். சுற்றிலும் பார்த்தேன். வறண்ட முட்செடிகள் என்று நான் கருதியிருந்த செடிகளில் மலர்ந்த பூக்கள் நிறைந்திருந்தன. எங்கும் நறுமணம் வீசிற்று. இதுதான் ‘தமிழின் மறுமலர்ச்சி; எங்கும் கமழும் தமிழ் மணம்’ என்று உணர்ந்தேன்.

பழந்தமிழ் நூல்களைப் படிக்க வேண்டுமென்ற ஆசை என் உள்ளத்தில் பிறந்துவிட்டது. சிலப்பதிகாரத்தைப் படித்து விடுவது என்று முடிவு செய்தேன். என்ன காரணத்தால் சிலப்பதிகாரத்தைப் பொறுக்கினேன் என்று எனக்கே தெரியாது. மகாமகோபாத்யாய உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் பதிப்பித்த புத்தகம் ஒன்றை வாங்கி வெகு ஆவலுடன் படிக்க ஆரம்பித்தேன். மனச் சோர்வு உண்டாயிற்று. பொருள் சரியாய் விளங்க வில்லை. பாட்டைச் சரளமாய்ப் படிக்கவும் முடிய வில்லை. பதங்களின் சந்தியைப் பிரித்துப் படிக்கப் போதுமான இலக்கண அறிவு எனக்கு இல்லை.

அடியார்க்கு நல்லார் உரையைத் திருப்பினேன். நூலைவிட உரை கடினமாய்த் தோன்றியது. மூன்று தடவை இம்மாதிரியே முயற்சி செய்தேன். ஒன்றும் பயன்படவில்லை.

தமிழ்ப் பண்டிதர் ஒருவரை வைத்துக் கொண்டு படிப்பதென்று கடைசியாய் முடிவு செய்து, எனது நண்பர் வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என் வீட்டிலேயே வந்து தங்கி, நாள்தோறும் ஒரு மணிநேரம் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தேன். இவருடன் படிக்கும்போது நூல் வெகு சுலபமாய்த் தோன்றியது. பாட்டைப் பதம் பிரித்துப் படிக்கும்போதே பொருள் ஏறக் குறைய விளங்கிவிட்டது. இப்படி யாகச் சிலப்பதி காரம் முழுவதையும் படித்து முடித்தேன்.

நூலைப் படிக்கப் படிக்க என் உள்ளத்தில் மகிழ்ச்சியும், துக்கமும் கலந்து எழுந்தன. உலகில் பல மொழிகளில் தோன்றிய சிறந்த பெருங்காப் பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்றல்லவா என்று அறிந்து மகிழ்ந்தேன். நம் தமிழ் முன்னோர் நமக் குத் தந்த இப்பெருஞ் செல்வத்தை இத்தனைக் காலம் அறியாமலும் அனுபவிக்காமலும் இருந்து விட்டோமே என்று துக்கப்பட்டேன்.

'வசந்தம்' ஆசிரியரும் எனது நண்பருமான திருஞானசம்பந்தம் அவர்கள், நான் சிலப்பதிகாரத் தைப் படிக்கும்போது எழுதிவைத்த குறிப்புகளை ஒரு நாள் பார்வையிட நேர்ந்தது. "உங்களுடைய உரை மிகவும் எளிய நடையிலிருக்கின்றது. இந்த உரையை "வசந்த"த்தில் மாதந்தோறும் வெளி யிட்டால் அநேகம் தமிழ் மக்கள் இப்பெருங்காப்பி யத்தின் பெருமையை அறிவார்கள்" என்றார். அவர் சொன்னதை நான் சிந்தித்துப் பார்த்தேன்.

என்னைப் போலவே எத்தனையோ ஆயிரம் தமிழ் மக்கள் இந்த நூலைப் படித்து அனுபவிக்கும் சக்தி இல்லாதவர்களாய் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு தமிழ்ப் பண்டிதரை வைத்துக்கொண்டு படிக்க முடியுமா? நான் படித்த விதத்தில் உரை எழுதி னால், ஒருவேளை என்னைப் போன்ற மற்றவர்களுக்கும் அது பயன்படும் என்று நினைத்து, மாதா மாதம் 'வசந்த'த்தில் என்னுடைய உரைகளை எழுதி வந்தேன்.

"உங்களுக்கும்கூடத் தாய் மொழியின் மீது இவ்வளவு ஊக்கம் பிறந்துவிட்டதா?" என்று பல நண்பர்கள் என்னைப் பாராட்டினார்கள். "உங்களது உரையின் உதவி யால் சிலப்பதிகாரத்தை எளிதில் படிக்க முடிந்தது" என்று சில நண்பர்கள் தெரிவித்தனர். நான் நினைத்தபடியே, என்னுடைய உரை பலருக்கு உபயோகமாயிருந்தது என்று அறிந்து மகிழ்ந்தேன்.

புகார்க் காண்டத்தின் உரை முடிந்ததும், நண்பர் திருஞானம் பின்னும் தூண்ட ஆரம்பித் தார். "புத்தகமாகப் பதிப்பித்தால், இது பலருக்கும் பயன் தரும்" என்றார். நண்பரின் தூண்டுதலுடன், செருக்கும் தூண்டவே நான் சம்மதித்தேன். இது தான் நானும் சிலப்பதிகாரத்தின் "உரை ஆசிரிய னாக"த் தோன்றியதின் வரலாறு.

இந்த உரையில் குறிப்பிடத்தக்க விசேஷம் ஒன்றுமில்லை. அதாவது இலக்கணக் குறிப்பு, ஆராய்ச்சிக் குறிப்பு, மேற்கோள் இவை ஒன்றுமில்லை. நூலின் பொருளைத் தெளிவாய் எடுத்துக்காட்டுவதே இதன் நோக்கம். 'சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத வேண் டும்' என்னும் பழமொழிபோல், ஒரு காப்பியத்தின் பொருளைத் தெரிந்தபின்தான், ஆராய்ச்சியில் இறங்க வேண்டும்.

புகார்க் காண்டத்தின் ஒவ்வொரு காதையை யும் பல கட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு கட்டத் திற்கும் தலைப்பும், முகவுரையும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. என்ன உரை இருந்தபோதிலும், பாட்டைச் சரளமாய்ப் படித்தால்தான் அதன் சுவையை அநுபவிக்க முடியும். ஆதலால், ஒவ் வொரு கூட்டுப் பதமும் பிரித்துக் காட்டப்பட்டி ருக்கிறது. ஒவ்வொருவரும் பாட்டைத் தங்கு தடையில்லாமல் உரக்கப் படித்து அனுபவிக்கலாம்.

தமிழ் மக்கள் உள்ளத்தில் தோன்றியிருக்கும் தாய்மொழிப் பற்று வேரூன்றி நிலைக்க வேண்டு மென்றால், பழந்தமிழ் நூல்களைக் கொஞ்சமாவது ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். அநேகருக்கு இந்த ஆசை உண்டு. ஆனால், சாதாரண மக்கள் படித்து அனுபவிக்கக்கூடிய விதத்தில், பல நூல் களுக்கு உரை எழுதப்படவில்லை. மகாமகோ பாத்தியாய உ.வே. சாமிநாத அய்யர் அவர் களுடைய பெருமுயற்சி இல்லாமலிருந்தால், பல நூல்களின் மூலத்தைக்கூட நாம் பார்த் திருக்க முடியாது. அய்யர் அவர்கள் செய்த பணிக்குத் தமிழ் மக்கள் என்றும் அவர் களுக்குக் கடமைப்பட்டிருக்க வேண்டும்.

ஆங்கிலத்திலுள்ள எல்லா இலக்கிய நூல்களும், சாமான்ய ஆங்கில மக்கள் வாங்கிப் படித்து அனுபவிக்கும் விதத் தில், அநேகம் பதிப்புக்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. கல்வியில் தேர்ந்தவர்களுக் கென்று உயர்ந்த ஆராய்ச்சி உரைகளுடன் தனிப்பதிப்புகள்


இளங்கோவடிகள்

இருக்கின்றன. பொதுமக்களுக்குப் பயன்படும் விதத்தில், தெளிவான எளிய உரையுடன், குறைந்த விலைக்கும் அழகான ரூபத்திலும் பொதுமக்கள் பதிப்புக்கள் (Popular Editions) ஏராளமாய் அச்சிடப்பட்டிருக்கின்றன. எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களும் எளிய உரையுடன், “பொதுமக்கள் பதிப்பாக” ஒன்றுபோன்ற ரூபத்தில் (Uniform Editions) வெளியாக வேண்டுமென்று எனக்கு வெகுநாளாய் ஆசை உண்டு. இந்தப் பணியை நிறைவேற்றத் தமிழ் அறிஞர்களும், பெரியோர்களும் முன்வந்தால், அது தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டாகும்.

உலக இலக்கியச் சரித்திரத்தில் குறிப்பிடத் தக்க விஷயம் ஒன்று. அதாவது உலகில் தோன்றிய சில சிறந்த இலக்கிய ஆசிரியர்களைப் பற்றி நமக்கு எதுவும் நிச்சயமாய்த் தெரியாது. ஹோமர், வால்மீகி, இளங்கோ அடிகள் – இவர்கள் உன்னத காவியங்களைப் படைத்த சிருஷ்டி கர்த்தாக்கள். ஆனால், இவர்களுடைய பிறப்பு, வளர்ப்பு, காலம் – இவற்றைப் பற்றி நிச்சயமான ஆதாரங்கள் ஒன்றுமேயில்லை. ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் பற்றிக்கூட, உண்மை ஆசிரியர் யார் என்று பல சந்தேகங்கள் உண்டு.

இளங்கோ அடிகளைப் பற்றிச் சரித்திர சம்பந்தமான ஆதாரங்கள் இல்லை. இவர் இன்ன காலத்தில் இருந்தார் என்பதைப் பற்றிக்கூட ஆராய்ச்சியாளருக்குள் அபிப்பிராய பேதம் உண்டு. திரு. வையாபுரிப்பிள்ளை அவர்களின் முன்னுரையிலும், திரு. இராமச்சந்திர தீட்சிதர் அவர்களின் மதிப்புரையிலும் இவ்விஷயங்களைப் பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்களைக் காணலாம். இந்த இரண்டு நண்பர்களைப் போல், பல தமிழ் அறிஞர்கள் இன்னும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். “எங்களுக்கு அழியாத சிலம்புச் செல்வத்தைக் கொடுத்த அடிகளே! நீர் யார்? நீர் யார்?” என்று நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். அவரோ, பதில் சொல்லாமல் புன்னகையுடன் “குணவாயில் கோட்டத்தில்” எல்லையில்லாத அமைதியுடன் வீற்றிருக்கிறார். தாங்கள் இன்னார் என்று காட்டிக் கொள்ளாதது சிறந்த கொடை வள்ளல்களின் இயல்புதான்.

இந்தப் பதிப்பை வெளியிடுவதில் எனக்கு உதவியாயிருந்த பல நண்பர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ‘வசந்த’த்தில்




சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார்

உரை எழுத ஆரம்பித்த சமயத்தில் திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் சிறந்த உரை வெளியாயிற்று. இப்பெரியாரின் உரை எனக்கு மிகவும் பயன்பட்டது. என்னுடன் இருந்து எனக்கு அன்புடன் பாடம் சொல்லிக் கொடுத்த நண்பர் வித்வான் அ. கிருஷ்ணமூர்த்திக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னுரையும், மதிப்புரையும் முறையே எழுதிய என் நண்பர்கள் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுக்கும், இராமச்சந்திர தீட்சிதர் அவர்களுக்கும் என் நன்றியறி தலைச் செலுத்துகிறேன். இந்த உரை எழுதுவதற்குத் தூண்டுகோலாயிருந்ததல்லாமல், புதுமலர் நிலையத்தாரைக் கொண்டு அழகாக அச்சிட்டுப் பதிப்பை வெளியிட்ட என் நண்பர் ஆர். திருஞான சம்பந்தத்திற்கு நன்றி செலுத்த நான் கடமைப் பட்டிருக்கின்றேன். காகிதப் பஞ்சம் மட்டும் இல்லாமலிருந்தால், புதுமலர் நிலையம் இப்பதிப்பை இன்னும் அழகுபடச் செய்திருக்கும்.

பொருட்செல்வத்திற்கும், கல்விச் செல்வத்திற்கும் வித்தியாசம் உண்டு. பொருட் செல்வம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைவுபடும். கைவிட்டுக் கொடுக்க மனம் வருவதும் கடினம். கல்விச் செல்வமோ, ஊற்று நீர் போல் அள்ளிக் கொடுக்கக் கொடுக்க மேலும் மேலும் பெருகும். கொடுப்போனுக்கு இன்பத்தையும் தரும். நாம் பெற்ற கல்விச் செல்வத்தைப் பிறருக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்போதுதான் நம் இன்பம் பூர்த்தியடைகிறது. இந்த எண்ணத்துடன், நான் அடைந்த “சிலம்புச்” செல்வத்தை எல்லா நண்பர்களுக்கும் பங்கீடு செய்து மகிழ்ச்சி அடைகின்றேன்.”

சண்முகம் செட்டியார்



“அவார்டன்”

கோயமுத்தூர்,

15.8.1946.

இந்நூலைக் கொடுத்து உதவியவர் : கோவை நந்தி அச்சகம் **செ.சிவ. ஆறுமுகம்**. இந்நூலை வாசித்துப் பாதுகாத்து வைத்திருந்தவர் **கவிஞர் காந்திதாசன்.**



நம் நாட்டில் காகித அச்சுப் புத்தகங்கள் வரும்வரை பனையோலைகளிலேயே நூல்கள் எழுதப்பட்டன. இந்தச் சுவடிகள் கைகளாலேயே எழுதிப் படியெடுக்கப்பட்டன. இன்றைக்கு உள்ள தேவைகளுக்கேற்ப வேண்டிய அளவில் பனையோலைகளில் எழுதிப் படியெடுப்பது மிகவும் கடினம். எனவே, காகிதப் புத்தகங்களில் அச்சிடுகிறோம்.

காகிதப் புத்தகங்களின் தேவையும் தற்போது குறைந்துவிட்டது. அனைத்தும் மின்னூலாக்கம் செய்யப்பட்டுக் கணினியில், இணைய வழியே படித்துக் கொள்ளும் நடைமுறை பரவலாக வந்துவிட்டது. இருந்தும், புத்தகங்கள் எழுதி வெளியிடுவது குறையவில்லை. நூல்கள் ஏராளமாக எழுதி வெளியிடப் பட்டு வருகின்றன.

இந்நிலையில், பண்டைய ஓலைச்சுவடிகளைப் புத்தகங்களாக வெளியிடும் பணியைப் பல நிறுவனங்கள் செய்து கொண்டிருக்கின்றன. தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம் உள்ளிட்ட நிறுவனங்கள் இப்பணியைச் செய்து வருகின்றன.

சென்னை தரமணியிலுள்ள 'உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்' கோவை சிரவை ஆதீனம் கௌமார மடாலயத்துடன் இணைந்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'பிள்ளைத்தமிழ் முதல் தொகுதி', 'வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் கலம்பகங்கள்', 'வண்ணச்சரபரின் நெல்லை இலக்கியங்கள்' ஆகிய மூன்று நூல்களை அண்மையில் வெளியிட்டுள்ளது.

சிரவை ஆதீனம் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகளின் 25–ஆவது குருபூசை, முனைவர் தவத்திரு குமரகுருபரசுவாமிகள் பட்டமேற்ற 25–ஆம் ஆண்டு வெள்ளி விழா, நூல்கள் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழாவில் இந்நூல்கள் வெளியிடப்பட்டன.

ஓலைச் சுவடியிலிருந்து புத்தகங்களாக இம்மூன்று நூல்களையும் பதிப்பித்த 'உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின்' சுவடியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் அ. சதீஷ் அவர்களிடம் 'ஓம் சக்தி' சார்பில் இப் பதிப்புப் பணி பற்றிக் கேட்டோம். அவர் அளித்த பேட்டி...

உலகத் தமிழாராய்ச்சி மையத்தின் உன்னதப் பணி

கேள்வி : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பற்றிச் சிறு முன்னுரை கூறுங்கள்.

பதில் : சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது, பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழுக்கு ஓர் உயராய்வு மையம் தேவை என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இது பிரெஞ்சு மொழிக்கென உள்ள உயராய்வு மையம் போல இருக்க வேண்டும் என்றார். அதன்படி தொடங்கப்பட்டது 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.'

ஆனால், இதற்கு மூல வித்தாக இருந்தவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகள். அவர் மலேசிய நாட்டில் கோலாலம்பூரில் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தபோது, இதற்கான திட்ட

அறிக்கையை உருவாக்கினார். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தமிழின் எத்தனை புலங் களோடு உருவாக்கப்பட வேண்டும், அதன் செயல் பாடுகள் என்னென்ன?, அதில் என்னென்ன வகையான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் முதலியன அத்திட்ட அறிக்கையில் இருந்தன.

பின்னர் திட்ட அறிக்கையைத் தயார் செய் தவர்கள் பேராசிரியர் வி.அய். சுப்பிரமணியம் அவர்களும், அறிஞர் சுப்பையா அவர்களும் ஆவர். தனிநாயகம் அடிகள் இந்நிறுவனத்திற்குள் வரவில்லை.

கேள்வி : உலகத்தமிழராய்ச்சி மையத்தில் உங்கள் துறை என்ன செய்கிறது?



முனைவர் அ. சதீஷ்

பதில் : உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் நான்கு புலங்கள் உள்ளன. 1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம். 2. தமிழ் மொழி மற்றும் மொழி யியல் புலம், 3. சமூகவியல், கலை மற்றும் பண் பாட்டுப் புலம், 4. அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகியன அவை.

எங்கள் சுவடியியல் புலத்தில் சுவடிகளைப் பாதுகாத்தல், அரிதாகக் கிடைக்கும் சுவடிகளைத் தேடிச் சென்று திரட்டுதல், அவற்றை அட்ட வணைப்படுத்துதல், தூய்மையாக்குதல் முதலிய பணிகளைச் செய்கிறோம். சுவடிகளைப் பதிப் பித்தல், அவற்றை மின்னாக்கம் செய்தல், இணை யத்தில் பதிவேற்றுதல் முதலிய பணிகளைச் செய்கிறோம்.

தமிழகத்தில் சுவடியியலுக்காக ஒரு பட்டயக் கல்வியை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. வேறெங்கும் இக்கல்வி இல்லை. தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழியில்தான் நடத்தப்படு கிறது.

பதிப்பிக்கப்படாத சுவடிகளைப் பதிப்பிக்கும் பணிகளைச் செய்து வருகிறோம். இதற்காக உதவி செய்யும் நிறுவனங்களுடன் இணைந்தும் செயல்பட்டு வருகிறோம். அதன்படிதான் சிரவை ஆதீனம் கௌமார மடாலயத்தின் உதவியுடன் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் படைப் புகள் சிலவற்றை வெளியிட்டுள்ளோம். அவரது சுவடிகள் கௌமார மடத்திலும், திருவாமாத்தூர் ஆதீனத்திலும் உள்ளன. அங்கிருந்து எடுத்துப் பதிப்பிக்கிறோம். திருவாமாத்தூர்ப் பகுதியில்தான் அவரது வாரிசுகளும் இருக்கிறார்கள். அவர் களிடமும் சில சுவடிகள் உள்ளன.

கேள்வி : வண்ணச்சரபம் என்பதன் பொருள் என்ன?

பதில் : சரபம் என்பது, மழை போலப் பொழிவ தாகும். தொடர்ந்து மழை போல அம்புகளைப் பொழிவதைக் கூறலாம். வண்ணம் என்பது திருப் புகழ் போல ஒரு யாப்பு வகை. திருப்புகழும் ஒரு வண்ணம்தான். வண்ணங்களில் பல வகைகள் உள்ளன. தொல்காப்பியர் 20 வண்ணங்களைச் சொல்கிறார். பிற்காலத்தில் ஆயிரக்கணக்கான வண்ணங்கள் வந்துள்ளன. இந்த யாப்பு வகை களில் இவர் எப்படி வேண்டுமானாலும் பாடக் கூடியவர். அதனால்தான் 'வண்ணச் சரபம்' என்று அழைக்கப்பட்டார்.

கேள்வி : வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி களின் பாடல்களில், தியாகையர் கீர்த்தனைகள் போல ராகங்கள் உள்ளனவா?

பதில் : அவர் தம் பாடல்களுக்குப் பண் வகுக்கவில்லை. நாம் வகுத்துக் கொள்ளலாம். அது வேறு பாரம்பரியம், இது வேறு பாரம்பரியம். ஞானசம்பந்தர் தம் பாடல்களுக்குப் பண் வகுக்க வில்லை. உடன் வந்தவர்கள், பின் வந்தவர்கள் பண் வகுத்தனர். அதுபோல் நாமும் இவரது பாடல் களுக்குப் பண்கள் வகுக்க முடியும்.

கேள்வி : வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி களின் சுவடிகளைப் பதிப்பிக்கும் எண்ணம் எப்படி வந்தது?

பதில் : நாங்கள் அடிப்படையில் சமூக ஆய்வாளர்கள்தான். எங்கெங்கே சுவடிகள் உள்ளனவோ, அங்கெல்லாம் தேடிச் செல்வோம். தமிழகம் முழுவதும் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையங்கள் உருவாக்கியிருக்கிறோம். அதிலிருந்து சுவடிகளைத் தேடிச் செல்வோம். அந்த வகையில்தான் சிரவை ஆதீனத்திற்கு வந்தோம். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கைப்பட எழுதிய சுவடிகள் பல இருந்தன. அவற்றில் சில மட்டும் பதிப்பிக்கப்பட்டிருந்தன. பதிப்பிக்கப்பட வேண்டியவை நிறைய இருந்தன.


பதிப்புப் பணிக்காகச் சில நேரங்களில் அரசே முழு நிதியையும் கொடுத்துச் சுவடிகளைப் பதிப்பிக்கும். ஆனால், அனைத்துச் சுவடிகளையும் அரசே பதிப்பிக்க இயலாது. எனவே, இதற்கு உதவி செய்யும் தனியாருடன் இணைந்தும் நாங்கள் சுவடிகளைப் பதிப்பிக்கிறோம். அந்த வகையில்தான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பாடல்களை சிரவை ஆதீனத்தின் உதவியுடன் பதிப்பித்து வெளியிடுகிறோம்.

கேள்வி : உங்கள் பணிக்குச் சிரவை ஆதினம் கௌமார மடம் என்ன உதவி செய்கிறது?

பதில் : நாங்கள் பதிப்பிற்கான பணிகளைப் பார்த்துக் கொள்கிறோம். சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் மிகுந்த உதவிகளைச் செய்கிறார். ஆதீனத்திலிருந்து அதற்கான நிதியுதவி கொடுக்கிறார்கள். அடிப்படைப் பணிகள் அனைத்திற்கும் கௌமார மடம்தான் உதவி செய்கிறது. ஒரு தட்டச்சர், இரண்டு ஆய்வாளர்களை அமர்த்தி, அவர்களுக்கு ஊதியம் கொடுத்துப் பதிப்புப் பணிக்கு உதவி செய்கிறது. நாங்கள் பதிப்பிப்புப் பணியை மட்டும் பார்த்துக் கொள்கிறோம். நான் ஒருங்கிணைப்புப் பணியைப் பார்த்துக் கொள்கிறேன்.

அவ்வகையில் தற்போது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'புலவர் புராணத்தை' உரையுடன் பதிப்பிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் சு. வேங்கடராமன் அவர்களின் உரையுடன் வெளியிட உள்ளோம். தற்போது அவர் உரை எழுதிக் கொண்டிருக்கிறார்.

கேள்வி : பேராசிரியர் சு. வேங்கடராமன் அவர்களின் உரைத்திறன் எப்படிப்பட்டது?



பதில் : பேரா. சு. வேங்கடராமன் அவர்களுக்குத் தமிழிலக்கியம், மொழியியல் தெரியும். சமய இலக்கியங்களை ஆழ்ந்து பயின்றவர். மேலும் கல்வெட்டு, நாணயம், தொல்லியல் தொடர்பான பார்வையும் கொண்டவர். அந்த வகையில் அவர் ஒரு பல்துறை அறிஞர். அவரது உரை மிகச் சிறப்பாக இருக்கும்.

இவ்விழாவில் வெளியிடப்பட்ட 'வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பிள்ளைத்தமிழ் முதல் தொகுதி', 'வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் கலம்பகங்கள் இரண்டாம் தொகுதி', 'வண்ணச்சரபரின் நெல்லை இலக்கியங்கள்' ஆகிய மூன்று நூல்களும் மூலம் மட்டுமாகப் பாடல்களாகவே வெளியிடப்பட்டுள்ளன. மூலத்தை மட்டும் படித்துப் பொருள் அறிவது பெரும் புலவர்களுக்கு மட்டுமே இயலக்கூடிய செயல். சாதாரண மக்களுக்கு இயலாது. இதனைச் சிரவை ஆதீனமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் கவனத்தில் கொண்டு உரையுடன் நூல்களை வெளியிட்டால் நல்ல வரவேற்பைப் பெறும்.

கேள்வி : தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் எத்தனை பாடல்களை வெளியிட்டுள்ளீர்கள்?


வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்

பதில் : நாங்கள் தற்போது வெளியிட்டுள்ள நூல்களில் 1100 பாடல்கள்தான் வெளிவந்துள்ளன. ஆனால், தண்டபாணி சுவாமிகள் எழுதியுள்ளவை 50 ஆயிரம் பாடல்கள். இவற்றை வெளியிடுவது மிகப் பெரும் பணி. இதனைத்தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

கேள்வி : பதிப்பு முறையில் எத்தனை வகைகள் உள்ளன?

பதில் : பதிப்பில் பல முறைகள் உள்ளன. ஒன்று, மூலத்தை மூலமாகவே கொடுத்தல். அடுத்து, மூலத்தில் யாப்பு மட்டும் பிரித்துக் கொடுத்தல். அடுத்து, சந்தி பிரித்துக் கொடுத்தல் என்னும் பதப் பிரிவு முறை. இதில் ஓரளவு பொருள் புரியும். மூலப் பதிப்பில் பொருள் புரிதல் கடினமாக இருக்கும். நாங்கள் பதிப்பிப்பது ஆதாரப் பதிப்பு. அதாவது, மூலத்தில் உள்ளதை உள்ளபடியே யாப்பு அடிப்படையில் பதிப்பிப்பது. இதன் பிறகு உரை எழுதிப் பதிப்பிக்கலாம், அல்லது வேறு வகையிலும் பதிப்பிக்கலாம். மூலத்திற்கு நெருக்கமான, அச்சு ஊடகத்தில் கொண்டு வரும் பணியை இப்போது நாங்கள் தொடங்கியுள்ளோம். இது நீண்ட காலப் பணி.

கேள்வி : நீங்கள் பேசும்போது 'ஓலைச் சுவடிகள் வலிமை மிக்க ஊடகங்கள்' என்று கூறினீர்கள். அது எப்படி?

பதில் : காலத்தால் அழியாத ஊடகங்கள் என நான்கு இருக்கின்றன. ஒன்று கல்வெட்டு, இரண்டாவது செப்பேடு, மூன்றாவது ஓலைச்சுவடி, நான்காவது அச்சு ஊடகம். இப்போது ஐந்தாவதாக மின் நூல்கள் (எலக்ட்ரானிக்ஸ்) வந்துவிட்டன.


தனிநாயகம் அடிகள்

மின் ஊடகங்களில் பார்த்தோமென்றால் முன்பு 'பிளாப்பி' இருந்தது. பிளாப்பியில் நீங்கள் பாதுகாத்தால், அதில் பாதுகாக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதை இன்னொரு கணிப்பொறியில் போட்டுப் பார்த்துத்தான் உறுதி செய்ய முடியும். அதிலும் ஒரு சிறு வைரஸ் வந்துவிட்டால் அது அழிந்துவிடும். பிளாப்பி, சி.டி., பென் டிரைவ், ஹார்டு டிஸ்க் என்பனவற்றில் நாம் பதிவு செய்தது இருக்கிறதா, இல்லையா என்பதை அவற்றில் நேரடியாக நாம் கண்களால் பார்க்க முடியாது. ஓலைச்சுவடியில் நாம் நேரடியாகப் பார்க்கலாம்.

மின் ஊடகத்தில் எப்படிப் பாதுகாத்தாலும் எந்த நேரத்தில் எதில் ஃபங்கஸ் வரும், எது அழியும் என்று சொல்ல முடியாது. மேலும், காலத்திற்கேற்பப் புதிய புதிய கருவிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் முன்னர் இருந்ததை மாற்றிப் பதிவு செய்து கொண்டே இருக்கிறோம். இதுவே, இதைப் பார்க்க இயலாத ஒருவர், ஒன்றில் பதிவாகாத நிலையிலேயே பதிவாகிவிட்டதாகக் கூறிவிட்டால், அது இல்லாமல் போய்விடும்.

கல்வெட்டில் செய்தியைப் பதிப்பிப்பது என்பது மிகுந்த பொருட்செலவை ஏற்படுத்தக்கூடியது. இதற்குப் பயிற்சி எடுக்க வேண்டும். செலவு மிகுந்தது என்பதால், எல்லோராலும் கல்வெட்டில் பதிப்பிக்க முடியாது. கல்வெட்டில் ஒருமுறை பதிவு செய்தால் அது ஒரே இடத்தில்தான் இருக்கும். ஓலைச் சுவடி அப்படியல்ல. அதனை எங்கும் எடுத்துச் செல்லலாம். செலவும் குறைவு.

கேள்வி : இந்தக் கோணத்தில் உங்கள் கருத்துச் சரிதான். ஆனால், ஒரு நூலை அச்சில் வெளியிடும்போது ஆயிரக்கணக்கான படிகள் பதிப்பிக்கலாம். ஓலைச் சுவடியில் கைகளால் எழுதி இத்தனை படிகள் வெளி




யிடுவது மிகவும் கடினமல்லவா?

பதில் : ஆயிரம் படிகள் வெளிவந்தால், அதனை எத்தனை பேர் படிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் ஒரு படிதான் எழுதியிருப்பார். பின்னர் உரை யாசிரியர்கள் காலத்தில் சுமார் 10 சுவடிகள் எழுதப்பட்டிருக்கலாம். அந்தக் காலத்திலும் நிறைய ஆய்வுகள் நடந்தன. ஆரோக்கியமான விவாதங்கள் நிறையச் செய்திருக்கிறார்கள். இன்றும் ஆழமாக ஆய்வு செய்பவர்கள் சுமார் 10 பேர்தான் இருப்பார்கள். எனவே, ஆழமாகச் சிந்தித்து ஆய்வு செய்பவர்கள் ஒரே ஒரு படி இருந்தாலும் படிப்பார்கள், ஆயிரம் படிகள் இருந்தாலும் படிப்பார்கள்.



அறிஞர் அண்ணா



குமரகுருபர சுவாமிகள்

அச்சு ஊடகம் என்பது செய்தி ஊடகத்திற்கு நிறைய நல்லதாக உள்ளது. நமக்குத் தெரியாத செய்திகளையெல்லாம் செய்தித் தாள்கள் மூலம் தெரிய வைத்தது. மற்றபடி இந்த அறிவார்ந்த சமூகத்தில் செல்லும் செய்திகள் ஒரு கொடிவழி மரபின் மூலம்தான் போகும். இதுதான் அன்றும், இன்றும் உள்ள நிலவரம்.

மற்றபடி அச்சு ஊடகத்தில் படிப்பதற்கும், ஓலைச்சுவடியில் படிப்பதற்கும் பல வேறுபாடுகள் உள்ளன. இப்போது அச்சுப் புத்தகத்தில் எந்தப் பாட்டு வேண்டும், அது எந்தப் பக்கத்தில் உள்ளது என எளிதாக அறிந்து பயன் படுத்தலாம். ஆனால், அது ஓலைச்சுவடியில் இயலாது என்பது உண்மைதான். அதைக் குறைத்து மதிப்பிடவில்லை.

ஆனால், இந்த ஓலை என்பது என்ன வென்றால், பயன்படுத்த எளிது. பனை ஓலையிலிருந்து உடனே தாள்களைத் தயார் செய்து விடலாம். 300 ஆண்டுகள் நிற்கிறது. 500 ஆண்டுகள்கூட இருக்கும். காகிதத் தாள்களுக்கு அந்த ஆயுள் இல்லை.

கேள்வி : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எத்தனை நூல்களை வெளியிட்டுள்ளது?

பதில் : இந்நிறுவனம் ஆயிரம் நூல்களுக்கு மேல் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இப்போது வெளிவந்துள்ளது 1013–ஆவது பதிப்பு நூல்.

கேள்வி : குறிப்பிடத்தக்க அரிய நூல் ஏதாவது சொல்ல முடியுமா?

பதில் : இந்நிறுவனத்தில் வெளி வந்துள்ள நூல்கள் அனைத்தையுமே அரிய நூல்கள் என்று கூறலாம். சிவலிங்கனாரின் தொல்காப்பிய உரை முதலான பல அரிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கேள்வி : அரிய ஓலைச் சுவடிகளை நீங்கள் பாதுகாத்து வருகின்றீர்களா?

பதில் : ‘ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்’ ஒன்றை நாங்கள் வைத்திருக்கிறோம். அதில் பல ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கிறோம். அம் மையத்தின் மூலம் மின்னூலாக்கம் செய்வது, பொது மக்களிடமிருந்து கிடைக்கும் ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பது, பதிப்பிப்பது முதலிய பணிகளைச் செய்கிறோம். இன்றைய அறிவியல் முறைப்படி மிக நவீன முறையில் பாதுகாக்கும் பணியை தமிழகத்திலேயே நாங்கள்தான் சிறப்பாகச் செய்து வருகிறோம். ஆனால் எங்களிடம் சுவடிகள் குறைவாகவே அதாவது 850 சுவடிகளே உள்ளன. கிடைக்கக் கிடைக்க அவற்றைச் சேகரித்துப் பாதுகாக்கிறோம்.

பேட்டி :

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்




உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
FORCE GURKHA E.O.V. 4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

சிறுகதை

லஜ்ஜை

பொன்னீலன்



அவனுக்கு இயல்பாகவே லஜ்ஜை. அதாவது கூச்சம் அதிகம். குறிப்பாகப் பிறரிடம் பணமோ, பொருளோ கடன் வாங்குவதற்கு ரொம்பவும் கூச்சப்படுவான்.

இப்படித்தான் ஒரு தடவை தக்கலையில் ஓர் இலக்கியக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு வந்திருந்தான். குழித்துறையில் தங்கியிருந்த அவனுக்கு வீடு செல்லக் கையில் போதுமான காசு இருந்தது. நண்பர்களோ “அண்ணாச்சி, ஏதாவது சாப்பிட்டுட்டுப் போங்க. வீட்ல போய்ச் சேரும்போது மணி பத்து ஆயிடும் பசிக்கும்” என்றனர். ஒரு தடவையோட அவன விட்டுட்டாப் பரவால்ல. பலமுறை வற்புறுத்தினார்கள்.

சரி என்று ஒப்புக் கொண்டு, எல்லாருடனும் அவனும் ஹோட்டலுக்குப் போனான். மொத்தம் ஆறு பேர்தான். இரண்டு இட்லி, ஒரு தோசை, வடை இவ்வளவும் சாப்பிட்டுச் சமாளித்து விடலாம் என்று நினைத்த அவனுக்கு நண்பர்கள் புரோட்டா, ஆட்டுக்கறி, ஆம்லட் அது இது என ஆடர் பண்ணிப் பெருஞ்செலவு வைத்துவிட்டார்கள். ஆடர் பண்ணியவர்கள் மற்றவர்கள் தான். ஆனால் அவன் முக ராசியோ என்னவோ, அவன் முன்னே பில்லைக் கொண்டு வைத்தார் சர்வர்.

“அண்ணாச்சி... நாங்க கொடுக்கிறோம்” என்றார் ஒருத்தர்.

“நான் கொடுக்கிறேன் பா...” என்றான் இவன்.

“அப்பிடியா... சரி, சரி... கொடுங்க அண்ணாச்சி” ரொம்பத் தயாளமாகப் பின்வாங்கி விட்டார்கள் மற்றவர்கள்.

பில்லையும் பணத்தையும் கொடுத்துவிட்டு எல்லாருடனும் வெளியே வந்தான் அவன். ரகசியமாகத் தன் சட்டைப் பையில் கைவிட்டு இருப்பை எண்ணினான். பஸ்ஸுக்குக் கொடுக்கக் காசு இல்லை.

என்ன செய்ய? நண்பர்களிடம் பஸ்ஸுக்குக் காசு கேட்கவோ கூச்சம்.

பக்கத்தில் அவனுடைய துணைவியாரின் தமக்கை வீடு இருந்தது. பெரும் பணக்காரர் அவர். ஒரு பத்து

ரூபாய் வாங்கி பஸ்சில் போய் விடலாம் என்ற எண்ணத்தோடு அங்கே போனான்.

நண்பர் பட்டாளம் அங்கேயும் அவனைப் பின் தொடர்ந்தது. இவர்களையெல்லாம் வைத்து கொண்டு எப்படிப் பணம் கேட்பது? ரொம்ப சங்கடமான சூழ்நிலை அவனுக்கு.

தன் தங்கச்சி கணவனைக் கண்ட மதனியாருக்கு ரொம்ப ரொம்ப சந்தோசம். வந்த அத்தனை பேருக்கும் பழம், பலகாரம் என்று வாங்கிக் குவித்துவிட்டார்.

இந்த அளவுக்கு வரவேற்பு கொடுத்த மதனியாரிடம் பஸ்க்கு எப்படி அஞ்சு ரூபாக் காசு கேட்பது? கேட்க வாய் எடுப்பான். வார்த்தை வெளியே வராது. ஒவ்வொரு முறையும் தோற்றுப் போவான். முகம் வியர்த்ததுதான் மிச்சம்.

கடைசியாக மனதைக் கல்லாக்கிக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்குத் திரும்பினான். தக்கலையில் இருந்து குழித்துறை வரை நடந்தே போய் விடலாம் என முடிவு செய்தான்.

நண்பர்களோ, அவனை விடுவதாக இல்லை. "உங்கள பஸ்ல ஏத்தி விட்டுட்டுத்தான் போவோம் அண்ணாச்சி" என்று உறுதியாய்ச் சொல்லி விட்டார்கள் அவர்கள்.

அவனுக்கு வேறு வழி தெரியவில்லை. சரி பஸ்சில் ஏறி விடுவோம். கொஞ்சம் தூரம் போனதும் காசு எடுத்துட்டு வரல்ல என்று சொல்லி இறங்கிடலாம் என்று முடிவு செய்தான்.

அவன் போதாத காலம். நேர்வழி போகும் பஸ் அல்ல அது. கொஞ்சம் தூரம் போனதும் அது இடதுப்பக்கமாகத் திரும்பிச் சுற்றுப் பாதையில் போய்க் கொண்டிருந்தது.

இனி என்ன செய்ய? குருட்டுத் தனமான ஓர் எண்ணம். அவன் மனசில் குமிழியடித்தது. அவனுக்கு அப்போது வயது 33 அல்லது 34 இருக்கலாம். நல்ல நிறம், அடர்த்தியான முறுக்கு மீசை, குட்டையான போலிஸ் கிராப்புத் தலை. பார்க்க ஓர் இளம் போலிசு அதிகாரி போலவே இருப்பான். இந்தத் தோற்றத்தில் அவன் எத்தனையோ தடவை லாரியையும் டாக்சியையும் நிறுத்தி ஏறியிருக்கிறான். டாக்சிக்காரன் அவன் இறங்க வேண்டிய இடத்தில் அவனை பவ்வியமாக இறக்கிவிட்டு சல்யூட்டும் அடித்திருக்கிறான்.


சரி, வாறதப் பார்ப்போம் என்று பஸ்ஸின் ஓரமான இருக்கையில் உட்காந்து கண்ணை மூடிக் கொண்டான்.

பஸ்சில் கூட்டம் அதிகம் இல்லை. இவரிடம் டிக்கெட் கொடுப்பதற்காக கண்டக்டர் இங்கிருந்து அங்கே போவார். அங்கிருந்து இங்கே வருவார். கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்த இவனைத் தட்டி எழுப்பி டிக்கெட் கேட்கக் கண்டக்டருக்குத் தயக்கம். வேறென்ன? ஒரு போலிஸ் அதிகாரியாக இருப்பாரோ என்ற அச்சம். இவனோ மூடிய கண்ணைத் திறக்கவே இல்லை.

குழித்துறைக்கு இன்னும் இரண்டு நிறுத்தங்கள்தான் இருந்தன.

இவ்வளவு நேரம் தப்பிச்சி வந்தாச்சி. இந்தக் கடைசி நேரத்தில் எதாவது செக்கிங் இன்ஸ்பெக்டர் கிட்ட மாட்டிக் கேவலப்பட்டுவிடக் கூடாது. என்ன செய்ய?

நிறுத்தத்தில் டக்குன்னு பஸ்சை விட்டு இறங்கினான். குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலத்தில் நடக்கத் தொடங்கினான். இனி யாரும் தன்னைப் பிடிக்க முடியாது. மனம் லேசாகி இருந்தது. கடல் காற்று சிலுசிலுவென வீசியது. நிலா வெளிச்சத்தில் குழித்துறை ஆறு மலைப் பாம்பு போல மெதுவாக ஊர்ந்து



கொண்டிருந்தது.

சீ.... அஞ்சு ரூபா யார்கிட்டே யாவது கடன் வாங்கி கம்பீரமா வந்திருக்கலாமே. கூச்சப்பட்டதால எத்தனை சிரமம்? பிடிபட்டிருந் திருந்தா எவ்வளவு கேவலம்.

இனிமே வாழ்க்கையில கூச்சப் படவே கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

சீச்சி, அதுக்காக அஞ்சுருபா தான்னு கை நீட்டுறதா? ஆழ்மனம் வேறுவிதமாக முணுமுணுத்தது.

பிறமொழி எழுத்தாளர் அறிமுகம் : 1 (மலையாளம்)

எழுத்தாளர் திருமதி சரோஜினி உன்னித்தான்

மூத்த எழுத்தாளர் திருமதி சரோஜினி உன்னித்தான் மலையாள மொழி இலக்கியத்தில் சாதனை படைத்தவர். மனிதர்களின் மனப்போக்கு, பலவீனங்கள், தியாகம் முதலிய விசேஷ குணங்களை மலையாள மொழியில், அழகிய நடையில், ஆர்ப்பாட்டமில்லாமல் படைத்து வருகிற எழுத்தாளர்.

அவரை நேரில் சந்தித்தால், சந்திக்கிற நமக்கு அவரை நமஸ்கரிக்கத் தோன்றும். அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தன்மை அவரிடம் இயற்கையாகவே குடிகொண்டுள்ளது. 'ஓம் சக்தி'க்கு அவர் அளித்த நேர்காணலை, ஓர் எழுத்தாளர் – அதுவும் பெண் எழுத்தாளர் – எத்தனை அடக்கத்தோடு தனது படைப்புகளை – குறிப்பாக மொழி பெயர்ப்புகளைத் தந்திருக்கிறார் என்பதை நாம் அறிந்தால் வியப்படையலாம்.

– இ. ஆர்.

கேள்வி : வணக்கம். உங்களைப் பற்றி அறிந்துள்ளோம். தமிழ் வாசகர்களுக்கு உங்களை அறிமுகப் படுத்த உங்களோடு நேர்காணல் செய்கிறோம். உங்களின் குடும்பப் பின்புலத்தைப் பற்றியும், 83–வது வயது கடந்து கொண்டிருக்கிற தங்களின் நிறைவாழ்வு பற்றியும் நினைவுகூர முடியுமா?

பதில் : கேரளாவில் 1936–இல் பத்தனம் திட்டா மாவட்டத்தில் திருவில்லா ஊரில் பிறந்தேன். எனது தந்தை பத்மநாப பிள்ளை, தாயார் கௌரி அம்மாள். ஆலப்பி மாவட்ட வெண்மணி நகரின் மேவில்லா வீட்டில் வளர்ந்தேன். எனக்குத் திருமணமாகியது. திரு. ஆர். ராகவன் உன்னித்தான் எனக்குக் கணவராக வாய்த்தார். எனக்கு 5 மக்கள். கோவையில் நுரையீரல், கல்லீரல் தொடர்பான நோய்களின் நிபுணர் டாக்டர் எம்.ஆர்.ஜெயமோகன் உன்னித்தான் எனது மகன். ஜெயஸ்ரீ, ராஜஸ்ரீ, பாக்யஸ்ரீ, பத்மஸ்ரீ ஆகிய நால்வர் எனது மகள்கள். எனது பேரக் குழந்தைகள் 8 பேர். கொள்ளுப்பேரன்மார்கள் 3 பேர்.

கேள்வி : எப்போது உங்களுக்குத் திருமணம் ஆனது?

பதில் : 1951–இல் எனக்குத் திருமணம் ஆனது. திருமணமாகி 69 ஆண்டுகளாகிவிட்டன.

கேள்வி : திருமணத்திற்குப் பிறகு நீங்கள் எங்கே சென்று வசித்தீர்கள்?

பதில் : திருமணம் முடிந்த பிறகு கேரளாவில்தான் இருந்தேன். காரணம், என்னுடைய படிப்பு முடியவில்லை. படிப்பை முடித்த பிற்பாடுதான் நான் எனது கணவர் ஆர். ராகவன் உன்னித்தான் அவர்கள் பணியாற்றி வந்த ஒடிசா ரூர்கேலாவிற்குச் சென்றேன்.

கேள்வி : ஒடிசாவில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

பதில் : ஒடிசா சென்ற சில மாதங்களுக்குப் பிறகு ஆசிரியர் வேலைக்குச் சென்றேன். கூடவே கதைகள், கவிதை



சரோஜினி உன்னித்தான்

கள், கட்டுரைகளையும் எழுதத் தொடங்கினேன். அவை அனைத்தையும் மலையாளத்தில்தான் எழுதினேன். ஒடிசாவில் இருந்த போது, அங்கு நடந்த கலாச்சார நிகழ்ச்சிகள் அனைத்திலும் நான் ஆர்வத்தோடு பங்கு கொண்டேன்.

என் ஊர்க்காரர்கள் பலர் அங்கு இருந்தனர். எனது தாய்மொழியான மலையாளத்திற்கான சங்கம் ஒன்று இருந்தது. நான் இளமைப் பருவத்தில் இருந்ததால், அவர்களோடு பேசி மகிழ்வதற்கும் அதேசமயம் அவர்கள் நடத்துகிற கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்கும் நான் மிகவும் பிரியப்பட்டேன்.

கேள்வி : ஒடிசா போன பிறகுதான் ஒடிசா மொழியை நீங்கள் கற்றுக் கொண்டீர்களா? எப்படிக் கற்றுக் கொண்டீர்கள்?

பதில் : நான் எனது பள்ளியில் ஒடிசா மாணவர்களுக்குச் சொல்லித்தர வேண்டியிருந்தது. அதனால், ஒடிசா மொழியில் அவர்களிடம் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த நிர்ப்பந்தத்தினால் ஒடிசா மொழியைக் கற்றுக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டது.

சில மாதங்களிலேயே அம்மொழியை அதிக அக்கறை எடுத்துக் கற்றுக்கொண்டேன். அதன் பிறகு ஒடிசா மொழியிலுள்ள இலக்கியங்களைப் படிக்க ஆரம்பித்தேன். ஓரளவிற்கு ஒடிசா மொழி எனக்கு எழுதவும், பேசவும் பழக்கமாகிவிட்டது.

அதனால், உயர்நிலைப்பள்ளி அளவிலுள்ள ஒடிசா மொழித் தேர்விற்குச் சென்றேன். தேர்வில் ஒடிசா மொழியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். இதன்மூலம் ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கான அவசியம் ஏற்பட்டால், நிச்சயம் கற்றுக்கொள்ள முடியும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

கேள்வி : உங்களுக்கு ஒடிசா மொழியில் படிக்க மட்டும் தெரியுமா? எழுதவும் தெரியுமா?

பதில் : ஒடிசா மொழியில் எனக்குப் படிக்கவும் தெரியும், எழுதவும் தெரியும்.

கேள்வி : ஒடிசா மொழியில் யாருடைய படைப்புகளை நீங்கள் விரும்பி, அனுபவித்துப் படிப்பீர்கள்?

பதில் : அநேக ஒடிசா எழுத்தாளர்கள் உள்ளனர். அவர்களுடைய படைப்புகளை வாசிப்பேன். குறிப்பாக, கோபிநாத் மொகந்தி, சித்தகந்த் மகோபத்ரா, சுரேந்திர மொகந்தி, பிபின் பிஹாரி மிஸ்ரா, பிரதிபா ராய் ஆகியோரின் படைப்புகள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஒடிசா மொழியில் இவர்கள் பிரபலமானவர்கள்.

கேள்வி : நீங்கள் ஒடிசாவில் இருந்தபோது நகர, கிராமப் பகுதிகளில் சுற்றி வந்திருக்கிறீர்களா? அந்த மக்களைப் பற்றி அறிந்து கொண்டிருக்கிறீர்களா?



சரோஜினி
உன்னித்தான்
தம்பதி

பதில் : எனக்கு அதற்கான நேரம் இல்லை. ஏனெனில், நான் ஒரு பள்ளி ஆசிரியர். அதோடு எனக்குக் குடும்பக் கடமைகளும் உண்டு. கணவரோடு சில சமூக நிகழ்வுகளுக்குச் செல்ல வேண்டியதாகவும் இருந்தது. இதன் காரணமாக என்னால் நான் வசித்த ரூர்கேலா வட்டாரத்தைத் தாண்டிப் பிற நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்றுவர முடியவில்லை. ஓரளவிற்கு முடிந்த வரை போயிருக்கிறேன்.

கேள்வி : இதுவரை ஒடிசா மொழியிலிருந்து மலையாள மொழிக்கு எத்தனை படைப்புகளை நீங்கள் மொழிபெயர்த்துள்ளீர்கள்?

பதில் : ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். எழுத்தாளர் ஸ்ரீ பிபின் பிஹாரி மிஸ்ராவின் 'சபத சாந்தலேரா', 'மனரா முஹ்ரா' எனும் இரண்டு தொகுப்புகளிலுள்ள சில கதைகளை நான் மொழிபெயர்த்திருக்கிறேன். அவருடைய 'சகாராரா உபகந்தா' என்ற நாவல் சாகித்ய அகாடமி விருது பெற்ற நாவலாகும். அந்த நாவலையும் நான் மொழிபெயர்த்தேன். எனது புத்தகம் கேரள மாநிலம் கோட்டயத்திலுள்ள எஸ்.பி.சி.எஸ். பதிப்பகத்தால் 2014–இல் வெளியிடப்பட்டது.

ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் பிரதிபா ராய். அவர்களுடைய 'புண்ய தோயா' என்ற நாவலை மலையாளத்தில் மொழிபெயர்த்தேன். அந்த நாவல் 2016–இல் கோட்டயத்திலுள்ள டி.சி. புத்தகப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.


அதே காலகட்டத்தில் ஹிந்தி, ஒடிசா,

வங்காளி முதலிய மூன்று மொழிகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளை நான் 2010–இல் மலையாளத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டேன். அந்தப் புத்தகத்திற்கு ‘சைத்ர பர்வம்’ எனத் தலைப்பிடப்பட்டது. கேரள நூலகக்குழு மாணவர்களுக்கான வாசிப்புப் போட்டிக்கு அந்த நூல் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் ‘கல்பகுஜா’ என்ற கதைத் தொகுப்பை மலையாளத்தில் மொழிபெயர்த்தேன். அவை அனைத்தும் மலையாள வாராந்திர, மாதாந்திரப் பத்திரிகைகளில் வெளியாயின. அவற்றையெல்லாம் இப்போது திரட்டிக் கொண்டிருக்கிறேன். அவற்றை ஒரு நூலாக வெளியிடத் திட்டம்.

கேள்வி : தாங்கள் இப்போது எங்கே வசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

பதில் : கேரளாவில் ஆலப்புழா மாவட்டத்திலுள்ள வெண்மணி கிராமத்தில் தற்போது நான் இருந்து கொண்டிருக்கிறேன். காரணம், என் கணவர் ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அதனால் நாங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டோம்.



கேள்வி : தற்போது நீங்கள் மலையாளத்தில் எழுதிக் கொண்டிருக்கிறீர்களா? ஒடிசா மொழியிலிருந்து படைப்புகளை மலையாளத்தில் செய்து கொண்டிருக்கிறீர்களா?

பதில் : ஆமாம்! தொடர்ந்து மலையாளத்தில் எழுதிக் கொண்டிருக்கிறேன். வயது எனக்குத் தடையில்லை. 83 ஆண்டுகள் வயது ஆனாலும், எழுத எழுத எனக்கு உற்சாகம்தான் அதிகரிக்கிறது. வயதை மறக்க இந்த வாசிப்பும், படைப்பும்தான் ஆதாரமாக இருக்கின்றன. ஆனந்தமாக இருக்கிறது. நான் ஒடிசாவில் இருந்தபோது ஒடியா மொழியிலேயே சில கதைகளை எழுதினேன். அதேபோல, இந்தியிலும் எழுதினேன். இலக்கியப் பத்திரிகைகள் அவற்றை வெளியிட்டுள்ளன.

கேள்வி : மலையாளத்திலிருந்து ஒடியா மொழிக்கும், ஒடியா மொழியிலிருந்து மலையாளத்திற்கும் தாங்கள் மொழிபெயர்த்த இலக்கியங்கள் என்னென்ன?

பதில் : எழுத்தாளர் பிபின் பிஹாரி மிஸ்ரா அவர்களின் ‘சகாராரா உபகந்தா’ என்ற ஒரு படைப்பையும், எழுத்தாளர் பிரதிபா ராயின் ‘புண்ய தோயா’ என்ற படைப்பையும் ஒடிசாவிலிருந்து மலையாளத்திற்கு நான் மொழிபெயர்த்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். மலையாள வாசகர்களுக்கு மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற படைப்புகள் அவை.

கேள்வி : எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி, உங்களுடைய கதைகள் சில மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. அது உண்மையா?

பதில் : ஆமாம்!

கேள்வி : அவற்றை யார் மொழிபெயர்த்தார்கள்?

பதில் : அண்மையில் 59 வயதில் மறைந்த அஞ்சல்துறையில் பணியாற்றி வந்த எழுத்தாளர் ஏ.எம். சாலன், ‘மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள், அன்புக்காகக் காத்திருந்த பெண், புதிய தலைமுறை, தரிசு நிலம்’ முதலிய எனது சில கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தார். ‘ஓம் சக்தி’யில் அவை வெளிவந்தன. அதேபோல, ‘நிகரன்’ என்ற பத்திரிகையிலும் வெளிவந்துள்ளன.

எனது முக்கியமான படைப்பு, **‘காலத்தின் ஒப்பம்’** என்ற நாவல். இந்நாவலில், ஒடிசாவில் வைதீக பிராமணக் குடும்பத்தைச் சார்ந்த பெண், அவர்களைவிடத் தாழ்ந்த ஆசாரியார் சாதி இளைஞனைத் திருமணம் செய்து கொள்கிறாள். அந்தத் தாழ்ந்த சாதி இளைஞன், ஒரு டாக்டராக உள்ளான்.

அதேபோல, அந்தக் குடும்பத்து வைதீக பிராமண இளைஞன் தன்னோடு வேலை பார்த்த கிறிஸ்துவ மலையாளப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். இவர்கள் இருவரும் எஞ்சினியர்கள். இதன் மூலம் காலத்தின் மாறுதல்களுக்கு ஏற்பக் கட்டுப்பெட்டியாக வாழாமல், வைதீக மரபுகளை உடைத்துவிட்டு, வாழ்க்கையை எதார்த்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நியாயத்தை இதில் வெளிப்படுத்தியுள்ளேன்.

அதனை மொழிபெயர்ப்பு வல்லுநர் எழுத்தாளர் **குளச்சல் முகமது யூசுப்** தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதனை சென்னை ‘டிஸ்கவரி பேலஸ்’ நிறுவனம் வெளியிட உள்ளது. விரைவில் அது வெளிவர இருக்கிறது.

கேள்வி : உங்களுடைய படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளனவா?

பதில் : ஆமாம்! எனது 'காலத்தின் ஒப்பம்' நாவலை, ஆங்கிலத்தில் ஜெயமோகன் உன்னித் தான் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கில நாவலின் பெயர் 'Along with the Time.' அந்த ஆங்கில நாவலும் விரைவில் வெளிவர உள்ளது.

கேள்வி : இதுவரை தாங்கள் எழுதிய படைப்புகள் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

பதில் : 27 நூல்கள் எழுதியுள்ளேன். அவற் றில் புதினங்கள் 12, (மொழிபெயர்ப்பு உள்பட), சிறுகதைத் தொகுப்புகள் 12, கவிதைத் தொகுப்பு கள் 2, கட்டுரைத் தொகுப்பு 1.

கேள்வி : தற்போது தாங்கள் என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?

பதில் : சில மாதங்களுக்கு முன்பு தொடங் கிய ஒரு புதினத்தை அநேகமாக முடிக்கக்கூடிய பகுதிக்கு வந்திருக்கிறேன். விரைவில் அதை நிறைவு செய்வேன். அந்தப் புதினமும் வாசகர்கள் மத்தியில் வரவேற்கப்படும் என்று நம்புகிறேன்.

கேள்வி : தாங்கள் அடிக்கடி கோவை மாநகரம் வருவதாக அறிகிறோம். அதற்கு ஏதாவது பிரத் யேகக் காரணம் உண்டா?

பதில் : கோவை மாநகரில் எனது மகன் டாக்டர் ஜெயமோகன் உன்னித்தான் நுரையீரல் நோய் (Pulmonologist) நிபுணராக மருத்துவத் தொழில் செய்து வருகிறார். மகன் வீட்டில் தங்கு வதற்காகக் கணவருடன் கோவை வருவேன். அதனையொட்டிச் சில மருத்துவச் சிகிச்சைகளை யும் கோவை மாநகரிலுள்ள பிரபலமான மருத்துவ மனைக்குச் சென்று செய்து கொள்வோம்.

அதனால்தான் கோவை மாநகருக்குக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை யாவது வருவேன். 'ஓம் சக்தி' பத்திரிகை ஆசிரி யரும் நானும் சந்தித்துக் கொள்வோம், உரை யாடுவோம்.

சென்ற முறை அவ்வாறு சந்தித்தபோது எழுத் தாளர் ஏ.எம். சாலன் மறைவு பற்றி மிகவும் வேதனையோடு பேசிக்கொண்டோம். 'ஓம் சக்தி' பத்திரிகையின் பேரிழப்பாக சாலன் மறைவை ஆசிரியர் குறிப்பிட்டது என்னை மிகவும் பாதித் தது. எழுத்தாளர் சாலன் எனது மலையாளக் கதை களைத் தொடர்ந்து 'ஓம் சக்தி'க்கு மொழி பெயர்த்துக் கொடுத்து வந்தார். இனி அதைப் போலப் பணி செய்ய யாரும் இல்லையே என்ற சோகத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியது என்னை மிகவும் பாதித்தது. இனிமேல்தான் சாலனைப் போன்ற ஒரு மொழிபெயர்ப்பாளரை நான் கண்டு பிடிக்க வேண்டியுள்ளது.

கேள்வி : நிறை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் தாங்கள் மாநிலம் விட்டு மாநிலம் சென்று பெற்ற அனுபவத்தாலும் கலை, இலக்கியத் தேர்ச்சியாலும் நீங்கள் இந்தச் சமுதாயத்திற்குச் சொல்ல வேண் டிய அறக்கோட்பாடு என ஏதேனும் நிச்சயம் இருக் கும். அதனைப் பற்றி எங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?



பதில் : நிச்சயமாகப் பகிர்ந்து கொள்வேன். நல வாழ்வு வாழ்ந்திருக்கிறேன். என் பிள்ளை களைச் சிறப்பாக உருவாக்கியிருக்கிறேன். பணி செய்து ஓய்வு பெற்றிருக்கிறேன். கணவருக்கு உறுதுணையாக அவரோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது பிள்ளைகளுக்கு நானும் எனது கணவரும் ஏறக்குறையக் குழந்தை கள் போலத்தான். எங்களை நன்றாகக் கவனித் துக் கொள்கிறார்கள்.

எனது மகனும் நான்கு மகள்களும் எங்களை எப்போதும் பாசத்தில் மூழ்கடிக்கிறார்கள். அன்பில் திளைக்க வைக்கிறார்கள். இதைப் பார்க்கிற பொழுது எல்லாக் குடும்பங்களும் இதுபோன்று இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆனால், கிடைக்கின்ற செய்திகள் வருத்த மடையச் செய்கின்றன.

நாம் வாழ்கிற காலம் வரை பிரதிபலன் கருதா மல் ஒருவர் மீது அன்பு செலுத்த வேண்டும். மதங் களை, சாதிகளை, நிறங்களை, வேற்றுமைகளை, அரசியலைக் கடந்து மனிதர்களை, மனிதர் என்ப தற்காகவே நேசிப்பதற்குக் கடமைப் பட்டிருக் கிறோம். அவர்கள் நமது சகோதரர்கள், சகோதரி கள். இதில் எந்தவிதமான மாற்றுச் சிந்தனையு மில்லை. பிறந்தோம், இருந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம் என்கிற இந்தச் சதுரத்திற்குள் நமது வாழ்க்கை நிச்சயமாக நிறைவு பெறுகிறது. இதற் குள் வாழ்கின்ற நாம் இன்னொருவருக்குக் கொடுப்பதற்கு அரிய பொருள், அன்பைத் தவிர வேறில்லை.

'ஓம் சக்தி' இளம் வாசகர்களுக்கு எனது ஆசீர்வாதங்களும், மூத்த வாசகர்களுக்கு எனது அன்பும் உரித்தானதாகட்டும்!

பேட்டி : **ந.நி.**





மிராக்கிள் பானத்தால் மீண்ட ஒரு நோயாளி!


சித்ராதேவி

"எனது பெயர் சித்ராதேவி. எனது கணவர் பெயர் புஷ்பராஜ். நாங்கள் நீலகிரி மாவட்டம் குன்னூரில் அதிகரட்டி முட்டிநாடு என்னும் கிராமத்தில் வசித்து வருகிறோம்.

எனக்குக் கடந்த 8 மாதங்களுக்கு முன் தொண்டையில் வலி, உணவு உண்பதில் சிரமம், சாப்பிட்டால் திட உணவு உள்ளே விழுங்க முடியாமல் வலி, வாந்தி வருவது முதலிய பிரச்சனைகள் இருந்தன.

நான் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் எண்டாஸ்கோபி (உள்நோக்கி) செய்து பார்த்ததில், உணவுக் குழாயில் புண்ணுடன் கூடிய வளர்ச்சி 25 செ.மீ.யிலிருந்து 38 செ.மீ. வரை இருந்தது.

அதை மேலும் பயாப்சி (Biopsy) எடுத்து அனுப்பினார்கள். அதில் SARCOMATOID CARCINOMA என்ற புற்றுநோயின் தாக்கம் இருப்பதாகக் கூறினார்கள். எங்களுக்கு மிகவும் பயமாகிவிட்டது. இந்த நோயினைப் பற்றித் தெரிந்தவுடன் மிகவும் குழப்பமும், வேதனையும் ஏற்பட்டது.

அப்பொழுது எங்களின் குடும்ப நண்பர், கோவை வரதராஜபுரத்தில் உள்ள கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தினைப் பற்றிக் கூறி, எங்களை அங்கு சென்று ஆலோசனை பெறக் கூறினார்.

நாங்கள் அந்த மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெற்றோம். அப்போது சித்த மருத்துவர் சரவணன் அவர்கள், நாடிப் பரிசோதனை மூலம் பரிசோதித்துச் சில சித்த மருந்துகளை வழங்கினார். கூடவே, 'மிராக்கிள்' (Mirakle Vitamin - C) என்ற பானத்தையும் அருந்திவர ஆலோசனை கூறினார்.


டாக்டர் சரவணன்

மருந்துகள் உண்ணத் தொடங்கியதும், தொண்டையில் இருந்த வேதனை சிறிது குறைந்தாற்போல் தோன்றியது.

மிராக்கிள் பானத்தை தினமும் 2 அல்லது 3 வேளை அருந்திவரத் தொடங்கினேன். அதன் பிறகு உணவு உண்ண முடியாமல் ஏற்பட்ட களைப்பு நீங்கத் தொடங்கியது. உடல் புத்துணர்வாக இருப்பதை உணர்ந்தேன்.

கடந்த 4 மாதங்களாகத் தொடர்ச்சியாக மிராக்கிள் பானம் மற்றும் சித்த மருந்துகள் இடைவிடாமல் எடுத்துக் கொண்டிருப்பதால்,

நோயின் தன்மை குறைந்து நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவது எனக்கு நம்பிக்கை அளிக்கிறது.

நோயினைக் கண்டறிந்தபோது, என்னால் வாழவே முடியாது என்று இருந்தேன். ஆனால், இப்போது இந் நோயிலிருந்து முழுமையாக மீண்டு வருவேன் என்ற நம்பிக்கையை அளித்த கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கும் எனது உள்ளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

மருத்துவ ஆலோசனைக்கு : 90432 12789, மிராக்கிள் பானம் பெற : 82200 41227 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். ஆலோசனைகள் இலவசமாகப் பெறலாம். ●

'ஓம் சக்தி' ஓவியருக்குப் பாராட்டு!



கலைச்செம்மல் எம்.எஸ். தேவசகாயம் நினைவு கலைகள் கைவினைகள் மையத்தின் சார்பில் 27.5.2019 அன்று கரூரில் நடைபெற்ற 4–ஆவது ஆண்டுக் 'கருவூர்க் கலைவிழா'வில் 'ஓம் சக்தி' ஓவியர் திரு. க. சண்முகம் அவர்களுக்கு, மையத்தின் தலைவர் திரு. வெ. இராஜூ அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டும் காட்சி.



கருவூர்க் கலைவிழாவில் ஓவியர் திரு. க. சண்முகம் அவர்களின் சிந்தனைக் கருத்து ஓவியங்களைப் பாராட்டி வாழ்த்துகிறார் சென்னை கவின்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. புகழேந்தி அவர்கள்.



மதம் ஒரு பேதமா மனம் ஒன்றிவிடின்

முனைவர் டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன்
கங்கா மருத்துவமனை, கோவை

சாஜி செரியன் என்ற இந்தியக் கிறிஸ்துவர் 800 முகமதியர்களுக்கு இப்தார் விருந்து அளித்திருக்கிறார். மேலும் துபாயில் ஒரு மசூதியும் கட்டியுள்ளார்.

இவர் ஓர் இந்தியக் கிறிஸ்துவத் தொழில் அலுவலர். அரேபியாவில் முகமதியத் தொழிலாளர்களுக்கு மசூதி கட்டியதோடல்லாமல், ரம்ஜான் பண்டிகை மாதத்தில் சுமார் 800 பேருக்கு இப்தார் விருந்தும் படைத்திருக்கிறார்.

கேரளாவில் காயம்குளத்தில் வசித்த 49 வயது சாஜி செரியன், வெகு தொலைவில் உள்ள மசூதிக்கு வாடகைக் காருக்காக அதிகப் பணம் செலவழித்து மக்கள் போவதைக் கண்டு பொறாமல், சென்ற ஆண்டு பூஜெய்ரா எனும் இடத்தில் 53 நிறுவனங்களுக்கு வாடகைக்காகக் கொடுத்த இடத்தில் வசிக்கும் முஸ்லீம் தொழிலாளர்களுக்காக ஒரு மசூதி கட்டிக் கொடுத்துள்ளார்.

மரியம் உம் எல்ஸா (யேசுவின் அன்னை மேரி)–க்கும் ஒரு தேவாலயம் கட்டினார்.

எளிய ஆரம்பம் : சாஜி செரியன் 2003–இல் அரேபியாவுக்குச் சில நூறு திராம் (UAE நாணயம்) நாணயத்தோடு வந்தார். ஆனால் அவர் ஆண்டுதோறும் 800 தொழிலாளர்கள் மற்றும் பல நிறுவனங்களில் வேலை செய்யும் உயர் அதிகாரிகள் 800 பேருக்குக் குளிர்சாதனம் உள்ள சிறப்புக் கூட்டமைப்பு மையத்தில் இப்தார் விருந்து படைத்திருக்கிறார்.

சென்ற ஆண்டு ரம்ஜான் 17–ஆம் நாள் மசூதி திறந்தது. அதனால் ரம்ஜான் மீதமுள்ள நாட்களில்தான் இப்தார் விருந்து கொடுக்க முடிந்தது. ஆனால் இந்த ஆண்டு எல்லா நாட்களிலும் இப்தார் விருந்து கொடுத்தார்.

இப்தார் விருந்தில் பேரீச்சைப் பழங்கள், சிறுதீனிப் பண்டங்கள், குளிர் பானம், குடிநீர், பிரியாணி, பங்குபெறும் மக்களுக்குச் சலிப்புத் தட்டாமலிருக்க ஒவ்வொரு ஆண்டும் விதவிதமான பிரியாணி பரிமாறப்படும்.

63 வயது பாகிஸ்தானி பஸ் ஓட்டுநர் திரு. செரியனின் செய்கையைப் புகழ்ந்து சொல்வார். “இவ்வுலகில் இத்தகைய செம்மல்கள் இருப்பது அவசியம். இப்படி இல்லாமலிருந்தால் உலகம் முடிந்துவிடும். நாங்கள் அவருக்காகப் பிரார்த்தனை செய்கிறோம். ‘அல்லா அவரைக் காப்பாற்றுவார்.”

உயர் அதிகாரிகளும் தொழிலாளர்களும் தனித்தனியாக வசிக்கிறார்கள். ஆனால் இப்தார் விருந்தில் அனைவரும் ஒன்றாகக் கலந்து கொள்வார்கள். இங்கு எல்லோரும் சமம்.

அல்ஹேயல் (Al Hayl)-இல் தொழில் மையத்தில் உள்ள மசூதியில் ஒரு நேரத்தில் 250 பேருக்குத்தான் இடம் இருக்கும். மேலும் 700 பேருக்குக் கட்டட முகப்பில் உள்ள இடத்தில் நிழலுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு விருந்து நடைபெறும்.

ஆதாரம் : **Press Trust of India, Dubai.**

LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.

Easy Finance Options
BAJAJ Finance

Exchange offer

Gift Coupons Available

*Free gift with every purchase

*Free delivery with in city Limits

Open on Sundays

வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!



LG	SAMSUNG	SONY	PHILIPS	VIDEOCON	ONIDA
Godrej	Whirlpool	SIEMENS	IFB		Prestige
ELGI ULTRA	Preethi	V-GUARD	BOSCH	Micromax nothing like anything	HAVELLS
VOLTAS LIMITED	Butterfly®	TATA Sky	CG Crompton Greaves	USHA	
BPL EMERGENCY LIGHT	Preethi INDUCTION COOK TOP	EUREKA FORBES Your friend for life		CASCADE	VENUS® WATER HEATER

*For purchase above RS.8000/- condition apply

D by sr printers 9843110277

நா. மகாலிங்கம் & கம்பெனி

68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.6.2019

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - JULY - 2019